Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
யாழ். நகரின் மத்தியில் புதுப் பொலிவுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்டது.
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விசேட விலையில்
BBQ
தொடர்பு: 0771064385 0776943479
70/6, K.K.S. Road, JAFFNA
(C/1615)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 29 திங்கட்கிழமை (13.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 316

















# மனித உரிமைகள் அமர்விற்கு இலங்கைக்கு அழைப்பில்லை

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழு அமர்வில் கலந்துகொள்ள அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது, ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவைக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பாக வெளியாகியுள்ள ஊடகத் தகவல்கள் தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. ஜெனிவாவில் இருக்கின்ற எமது பிரதிநிதிக்கு இது குறித்து

(19) ஆம் பக்கம் பார்க்க

### மட்டக்களப்பு உன்னிச்சையில் பள்ளிவாசல் தீக்கிரை

மட்டக்களப்பு மாவட்டத்தின் மீள்குடியேற்ற பிரதேசமான உன்னிச்சை, பாலக்கொடிச் சேனை கிராமத்திலுள்ள முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர். உழவு இயந்திரமொன்றில் வந்த இனந்தெரியாத குழுவினராலேயே குறித்த பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன் குறித்த மீள்

(19) ஆம் பக்கம் பார்க்க

### நல்லூர்க் கந்தனின் நேற்றைய கைலாயத் திருக்காட்சி



## டெசோ மாநாட்டுக்கு கிடைத்தது அனுமதி

(சென்னை)

தி.மு.க.வின் டெசோ மாநாட்டை நடத்துவதற்கு நேற்றைய தினம் சில நிபந்தனைகளுடன் சென்னை உயர் நீதிமன்றம் நேற்று நண்பகல் அனுமதியளித்த நிலையில் திட்டமிட்டபடி வை.எம்.சி.ஏ. அரங்கில் டெசோ மாநாடு ஆரம்பமானது.

முன்னதாக தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பின் மாநாட்டின் ஒரு பகுதியாக நடந்த ஆய்வரங்கை தி.மு.க. தலைவர் கருணாநிதி துவக்கி வைத்து உரையாற்றினார். அவர் தனது உரையில்,

இலங்கையில், விடுதலைப் புலிகளுடனான மோதல்கள் உச்சக்கட்டத்தை எட்டியபோது, இலங்கை அரசின் தவறான வாக்குறுதிகளை நம்பியே, உடனடிப் போர் நிறுத்தம் கோரி மேற்கொண்ட காலவரையற்ற உண்ணாவிரதத்தினை சிலமணி நேரங்களிலேயே கைவிட்டேன்.

ஈழத்தமிழர்களின் பிரச்சினையானது மனிதா பிமானம், மனித உரிமைகள், சுயமரியாதை தொடர்புடையது, ஈழத்தமிழர்கள் பிரச்சினை கால்நூற்றாண்டாக எரிந்து கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை என்பதை மறக்க முடியாது. இலங்கை அரசு இந்தியாவை ஏமாற்றிவிட்டது. இலங்கையில் போருக்கு முன்பும், போருக்கு பின்பும் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு சட்ட உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

ஈழத்தமிழர்கள் புரிந்த தியாகங்கள் அற்புதமானவை, அவர்கள் அனுபவித்த சித்திரவதைகளும், அடக்கு முறைகளும் கனவிலும் நினைத்துப்பார்க்க

(19) ஆம் பக்கம் பார்க்க

### மட்டுவில் விபத்தில் இளம்தாய் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

மட்டுவில் அம்மன் கோவிலுக்கு அருகாமையில் இடம்பெற்ற வீதி விபத்தில் பெண்ணொருவர் தலை நசுங்கி பலியாகியுள்ளார். நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இச்சம்பவத்தில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## விரிவுரையாளரின் பணிப்புறக்கணிப்பு பலிக்கடாவாகும் மாணவர்கள்

(கொழும்பு)

சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைளை முன்வைத்து இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனங்களின் ஒன்றியம் நடத்தும் பணிப்புறக் கணிப்பு 45 நாட்களைக் கடந்தும் எதுவித முடிவுமின்றித் தொடர்கிறது.

இதன் காரணமாக நாடு முழுவதிலுமுள்ள 15 பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடரும் சுமார் 80 ஆயிரத்துக்கும் அதிக மான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய வருமானத்தில் கல்விக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டும், தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பான உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அரசாங்கம் வெளியிடவேண்டும், பல்கலைக் கழகங்களுக்குள் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது மற்றும் விரிவுரையாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை குறித்து சாதகமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## டெசோவிற்கு எதிர்ப்பு கொழும்பில் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

டெசோ மாநாட்டை நடத்துவதற்கு முன்னாள் தமிழக முதல்வர் மு.கருணாநிதிக்கு அனுமதி வழங்கியதற்காக இந்திய மத்திய அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஆர்ப்பாட்டம் ஒன்று கொழும்பில் நடந்திருக்கிறது. இலங்கையின், 'தேசத்தைக் காக்கும்' அமைப்பு என்னும் அமைப்பினரால் இந்த ஆர்ப்பர்ட்டம், கொழும்பில் உள்ள இந்திய தூதுவரின் அதிகாரபூர்வ இல்லத்தின் முன்பாக நடத்தப்பட்டது.

இந்திய மத்திய அரசாங்கம் மற்றும் கருணாநிதி ஆகியோரைக் கண்டிக்கும் பதாதைகளைத் தாங்கிய வண்ணம் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்களுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினார்கள். இந்திய அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகள் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவைப் பாதிக்கும் என்று ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த சிறி வர்ணசிங்க அங்கு எச்சரித்துள்ளார்.

ஆகவே விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் விபத்து; இரண்டு இளைஞர்கள் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி விவேகானந்த நகர் கிழக்கைச் சேர்ந்த மகேந்திரன் நிரோஜன் (வயது-19), ஜெயச்சந்திரன் சுதர்சன் (வயது-19) ஆகிய இரண்டு இளைஞர்களுமே படுகாயமடைந்தவர்களாவர். இவர்களில் நிரோஜன் என்பவர் ஒருகால் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சீனாவுக்கு காணி விற்பனை இந்தியா கடும் ஆட்சேபம்

இந்தியாவுக்கு வழங்கப்படவிருந்த கொழும்பின் முக்கிய காணியொன்றை சீன விமான நிறுவனமொன்றுக்கு வழங்கியமை குறித்து இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா தனது கடுமையான ஆட்சேபத்தை தெரிவித்துள்ளது.

புதுடில்லியிலும், கொழும்பிலும் இந்த ஆட்சேபம் வெளியிடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

காலி வீதியிலும் டுப்ளிகேஷன் வீதியிலும் முகப்பை கொண்ட 287 பேர்ச் பரப்பளவிலான இக்காணி முன்னர் ஷாவல்லஸ் ஹெட்ஜஸ் கம்பனிக்கு சொந்தமாகவிருந்தது. இக்காணி சீன தேசிய விமான தொழில்நுட்ப இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்திற்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

# பருத்தித்துறை நகரப் பகுதியில் வீதி அகலிப்புப் பணி ஆரம்பம்

(வடமராட்சி)

பருத்தித்துறை - யாழ்ப்பாண பிரதான வீதி அகலிக்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள வீதி அகலிப்புப் பணிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் ஆரம்பித்து துரித கதியில் நிறைவுபெறுமென வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் பருத்தித்துறை நகர வீதி அகலிப்புத் தொடர்பாக அண்மையில் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. இதன்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.


கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமான வீதி அகலிக்கும் பணியில் யாழ். பருத்தித்துறை வீதி ஊடாக நெல்லியடி தொடக்கம் கோப்பாய் பிரதேச செயலகம் வரையான சுமார் 13 கிலோ மீற்றர் நீளமான தூரத்தில் இருவழி வீதியாக அகலிக்கப்பட்டு காப்பெற் போடப்பட்டும் உள்ளது.

நெல்லியடி தொடக்கம் பிரதான வீதி ஊடாக பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்தி வரையான சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் வீதி அகலிக்கப்பட்டுள்ள நிலையில் மூலப்பொருட்கள் எடுத்துவருவதில் காலதாமதம் ஏற்பட்டமையால் இருவழி கொண்ட காப்பெற் வீதியாக்கம் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இவ்வீதியும் துரிதகதியில் காப்பெற் வீதியாக்கப்படும். பருத்தித்துறை முதலாம் கட்டை பிரதான நகர்ப் பகுதியான பருத்தித்துறை ஊடாக துறைமுகம் வரை சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூர வீதி அகலிக்கும் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த எல்லைகளுக்கமைவாக வீடுகள் மற்றும் கடைகள் பின்நோக்கி நகர்த்தப்படாமையினால் இருவழி கொண்ட வீதியாக அகலித்து காப்பெற் வீதியாக்க முடியாது போயுள்ளது.

தற்போது பல வர்த்தகர்கள் ஒத்துழைத்து பின்நோக்கி கடைகளை மீளக்கட்டியுள்ளனர். இவற்றின் அடிப்படையில் துரிதகதியில் பருத்தித்துறை நகரை காப்பெற் வீதியாக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (116)



அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த்திருவிழாவின்போது விநாயகப் பெருமான் பக்தர்கள் புடைசூழ இரதமேறி வலம்வரும் திருக்காட்சி. (03)

# காசுக்காக உணவு வேலைத்திட்டம் ஆரம்பம்



உலக உணவுத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு காசுக்காக உணவு எனும் திட்டம் நல்லூர் பிரதேச செயலக ஏற்பாட்டில் மணியந்தோட்ட கிராம அலுவலர் ஞானேந்திரன் தலைமையில் உதயபுரம், மணியந்தோட்டம், நாவலடி அரியாலை கிழக்கு, பூம்புகார் ஆகிய கிராமங்களில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவருமான அம்பலம் இரவீந்திரதாசன் மற்றும் நல்லூர் பிரதேச மருத்துவ மாது ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தீ மிதிப்பு

(யாழ். நிருபர்)

காரைநகர் அரசடிக்காடு கதிர் வேலாயுதசுவாமி கோயிலில் கடந்த 22 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக தீ மிதிப்பு வைபவம் இடம்பெற்றது.

கடந்த 22 வருடங்களுக்குப் பின்னர் இக்கோயில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் கடந்த மாதம் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று தீர்த்தத் திருவிழாவில் தீ மிதிப்பு வைபவம் இடம்பெற்றது.

பெண்கள், சிறுவர்கள் உட்பட ஏராளமான அடியார்கள் இத் தீ மிதிப்பு வைபவத்தில் கலந்து கொண்டனர். (10)

# காரைநகர் பாடசாலை மண்டபம் புனரமைப்பு

(யாழ். நிருபர்)

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலய நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தின் புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கட்டடத்தைப் புனரமைப்பதற்காக மாகாண கல்வித் திணைக்களம் 50 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளதாக அதிபர் பொ.சிவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

காரைநகரில் உள்ள மிகப் பெரிய அரங்குடன் கூடிய இம் மண்டபம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதிருப்பது குறிப்பிடத் தக்கது. (10)

# முதியோர் இல்லத்திற்கு லயன்ஸ் கழகம் உதவி

(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்திற்கு யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத்தினரால் 18 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் 50 வைத்தியசாலைக் கட்டில்களும், 30 காற்று மெத்தைகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கட்டில்களையும், மெத்தைகளையும் வைபவ ரீதியாக வழங்கி வைத்தார்,

இத்திட்டத்திற்கு பிரான்ஸ், ஜப்பான், ஆதீனமும் பிரான்ஸைச் சேர்ந்த இந்திரஜித் குடும்பமும் அனுசரணை வழங்கியதாக யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத் தலைவர் கே.ஜெயந்தன் தெரிவித்தார்.

# அசுத்தமான நிலையில் கீரிமலை தீர்த்தக் கரை

(சுன்னாகம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் ஆண்கள் நீராடும் தீர்த்தக் கரையின் கடற்கரையோரமாக மலசலம் கழிக்கப்படுவதால் கடற்கரையில் நீராடுவதற்கும், கடற்கரையோரம் இரவுக் காட்சியை இரசிப்பதற்கும் வரும் அடியார்களும் சுற்றுலாப் பயணிகளும் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனால் சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்ல முடியாது ஆலயத்தை தரிசித்து விட்டுச் செல்கின்றனர்.

புனித இடமான இதனை தூய்மையாக வைத்திருக்க சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக அடியவர்கள், பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் தவிர்க்கப்படும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (148)

# வரணி வடக்கில் கவனிக்கப்படாத வீதி

(வரணி)

வரணி வடக்கு காளிகோயில் வீதி மிகவும் மோசமான நிலையில் தற்போது காணப்படுகிறது. இவ்வீதிக்கு வெள்ளைக் களி மண் பறிக்கப்பட்டு சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாகியுள்ள நிலையில் தற்போது வாகனங்கள் செல்வதால் விலகிச் செல்லும் பிரயாணிகள் தூசி படிந்த நிலையிலும் மழைகாலத்தில் சேறும் சகதியும் வழுக்கி பிரயாணிகள் விழுவதும் அங்காங்கே மழைநீர் தேங்கி நிற்பதுமாகக் காணப்படுகிறது.

இவ்வீதி மாசேரி மக்களுக்கான உறவுப் பாலமாக திகழ்வதும் மற்றும் முக்கிய அரச பாடசாலைகளும் இவ்வீதியில் அமைந்திருப்பதாலும் பெருமளவான மக்கள் இவ்வீதியைப் பயன்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது. (150)

# இந்திய சுதந்திர தினம் பிரஜைகளுக்கு அழைப்பு

இந்தியா சுதந்திரம் பெற்ற 66 ஆவது ஆண்டுக் கொண்டாட்டங்கள் நாளை மறுதினம் 15 ஆம் திகதி புதன்கிழமை இல. 280, பலாலி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் இடம்பெறும்.

காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நிகழ்வில் அனைத்து இந்தியப் பிரஜைகளையும் கலந்துகொள்ளுமாறு தூதரகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். விருந்தினர்கள் இந்திய கடவுச்சீட்டையும் எடுத்து வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# காப்பெற் வீதியில் நிதானமிழக்கும் சாரதிகள்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியில் கட்டுப்பாட்டை மீறி வேகமாகச் செல்லும் வாகனங்களால் பாதசாரிகளும், பயணிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இணுவிலில் இருந்து மாவிட்டபுரம் வரையான கே.கே.எஸ். வீதி காப்பெற் இடப்பட்டு பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

இவ்வீதிகளில் வாகனங்கள் அதிகரித்த வேகத்தில் பயணத்தை மேற்கொள்கின்றன.

சுன்னாகம், மல்லாம், சந்திகளில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ள நிலையில் குறித்த இடம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் சாரதிகள் போக்குவரத்து விதிமுறைகளை மீறியும், அதிகவேகத்துடனும் வாகனங்களைச் செலுத்திச் செல்கின்றனர்.

இதனால் கே.கே.எஸ். வீதியில் தினமும் சிறுசிறு விபத்துச் சம்பவங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளது. (148)


(C/1706)

நல்லூர் கந்தனின் திருவிழாவை முன்னிட்டு
சந்நிதி முருகன் வேக் சொப் வழங்கும்
இலவச விசேட சேவை





* எமது தொழில்நுட்ப வல்லுநர்களின் இலவச சேவை
* அசல் பஜாஜ் உதிரிப்பாகங்களிற்கு 10 வீத விலைக்கழிவு
* திருத்த வேலைகளிற்கு 10 வீத விலைக்கழிவு

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை

இல. 241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(வீரகாளி அம்மன் கோயில் அருகாமை)
தொ.பே. 0212228076, 0777110199, 0772018275



# பிரதேசத்தின் பண்பாடுகள் நூலுருப்பெறுவது சிறப்பானதாகும்

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்


(பருத்தித்துறை)

"இன்று நாங்கள் மிக முக்கியமான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமூகப்பற்றுள்ள ஒருவன் தனக்கு மட்டுமின்றி சமூகத்திற்காகவும் வாழ வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். இன்றைய கல்விச் சமூகம் கிராமிய மக்களுடன் இணைந்து குடும்பமாக வாழும் போது சமூகம் எதிர்பார்க்கும் இலக்கை இலகுவாக அடைய முடியும். என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் பா. இரகுவரனின் "பருத்தித்துறை யூராம்" நூல் வெளியீட்டு விழாவிலே பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,


நூலாசிரியர் இரகுவரன் நீண்ட காலமாகத்திட்டமிட்டு தகவல்களைச் சேகரித்து சமூகத்திற்கு "பருத்தித்துறை யூராம்" நூலைத்தந்துள்ளார். இது ஒரு அரிய பொக்கிஷமாகும். இந்நூல் பாடசாலை நூலகங்கள், உள்ளூராட்சி மன்றங்களின் நூலகங்களில் நிச்சயம் இடம்பெற வேண்டும். கல்வியமைச்சினூடாகவும் இந்நூல் கொளவனவு செய்யப்படும். இது போன்ற நூல்களை ஆக்கும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும்.

"பருத்தித்துறை யூராம்" நூலைப் போன்று ஏனைய பிரதேசங்களின் தகவல்களும் தொகுக்கப்பட்டு நூலாக்கப்பட வேண்டும். ஒரு பிரதேசத்தின் கலை கலாசார, வாழ்க்கை முறைகளை ஏனைய கிராமங்களும் அறிந்து கொள்ள வேண்டும். பிரதேசங்களை நிர்வகிப்பவர்கள் அப்பிரதேசங்களின் முழுத்தகவல்களையும் அறிவதன் மூலம் அப்பிரதேசத்திற்கு சிறந்த சேவைகளை வழங்கி மக்களின் மனங்களை வென்று எதிர்பார்க்கும் இலட்சியத்தையடைய முடியும் என்றார். (01)



**தெல்லிப்பழை கலை இலக்கிய களகத்தினால் அண்மையில் நடைபெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு வைபவத்தில் பவளவிழா கண்ட புலவர் ம.பார்வதிநாதசிவத்திற்கு முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் பொன்னாடை போர்த்திக் கௌர விப்பதைக் காணலாம். (148)**

# நல்லூர் முருகனுக்கு இன்று 21ஆம் திருவிழா



## தேடிய செல்வம் ஜீரணமாகவேண்டும்

**கோடி பணத்தைக் கையில் வைத்துக்கொண்டு**
**கொடி கட்டிப் பறக்கின்றனர் முருகா!**
**கோடி எதுவாயினும் அவையத்தனையும்**
**குடியான அடிமைகளின் கண்ணீரப்பா!**
**தேடிய செல்வம் எதுவாயினும், அளவோடு**
**தெரிந்து உனக்கு ஜீரணமாக வேண்டும்**
**தோடுடைய செவிக்கு அலங்காரம் மிஞ்சினால்**
**தேசம் என்னவாகும்? சேதாரந்தானே முருகா!**

-கே.எஸ்.சிவஞானராஜா கொக்குவில்-

## கந்தனே சரணம்!

**தொல்லை வினை தீர்க்கும் தூயவனே முருகையனே**
**நல்லை யிலுறையும் நாயகனே வடிவேலவனே குகனே**
**இல்லை யெனாது வரமீந்தருளும் சண்முகனே சரவணனே**
**கல்லை யொத்த மனமும் கசிந்துருகக்காட்சி தரும் கந்தனே சரணம்!**

-இராசையா ஸ்ரீதரன்-

## கண்பரிசோதனை

வடமராட்சி பிரதேச மக்களின் நன்மைகருதி புலோலி சுகம்மெடி கெயரில் "இலவச" நவீன தொழில் நுட்பத்தினுடன் கணினி கண்பரிசோதனை எதிர் வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணி முதல் நடைபெறவுள்ளது.

சர்வதேச தரம்மிக்க விஷன் கெயர் நிறுவனத்தினர் இவ் இவலச கண்பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர். மூக்குக்கண்ணாடிகள் குறைந்த விலையில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (01)






## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு திருமதி.வாஸ்பதி ரஜீந்திரனின் பாட்டு கச்சேரி இடம் பெறவுள்ளது.

இதில் அணிசேர் கலைஞர்களாக வயலின் செல்வி பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம் எஸ்.மகேந்திரன், கெஞ்சிரா ஆர்.சிவராமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும் சமய சொற்பொழிவும் கலைநிகழ்வுகளில் இன்று ஒரு திருமுருகன் என்னும் விடயம் பற்றி பேராசிரியர் சண்முகதாஸ் சொற்பொழிவாற்றவுள்ளார்.

கலைநிகழ்வுகளில் அராலி கோகுலம் அறநெறிப்பாடசாலை, அளவெட்டி காமாட்சி அம்மன் அறநெறிப்பாடசாலை, நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலை ஆகிய பாடசாலைகள் கலந்து கொள்ளவுள்ளன.

விசேட நிகழ்வாக கதிரவேலு சிவயோகராணியின் பக்திப் பாமாலை இடம் பெறவுள்ளது.

நல்லூர் மகோற்சவ காலத்தை முன்னிட்டு சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் "தெய்வீக பேருரைகளும் கலைநிகழ்வுகளிலும் இன்று விகடகவி மு.திருநாவுக்கரசு "அச்சது பொடி செய்த அதிதீரா" என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழி வாற்றவுள்ளார்.

நல்லூர் மகோற்சவ காலத்தை முன்னிட்டு SONO நிறுவன அகுசரணையுடன் சின்மயாமிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரை 18ஆம் திகதி வரை இடம் பெற்வுள்ளது. நல்லூர் வடக்கு வீதியில் உள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்திலே சின்மயாமிஷனின் ஆன்மிக அருளுரை நடைபெறவுள்ளது. ஆனமிக அருளுரையினை சின்மயா மிஷன் வடமாகாண வதிவிட ஆச்சாரியார் பிரம்மசாரி ஜாக்ரத சைதன்யா வழங்கவுள்ளார்.

சைவ மகாசபை நடாத்தும் இசைப் பேருரை தொடரில் நல்லை ஆதீன குரு மூர்த்தி ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா வழங்கும் கந்தபுராண சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. அதே போல் மனோண்மணி அம்மன் ஆலயத்திலும் கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (60,42)

# நயினாதீவுக்கான அம்புலன்ஸ் படகை திருத்தித்தருமாறு கோரிக்கை

(நயினாதீவு)

நயினாதீவு பிரதேசத்திற்கென அம்புலன்ஸ் படகுச்சேவை இன்மையால் அவசர நோயாளர்களை குறிகட்டுவானுக்கு அழைத்துச் செல்வதில் தாம் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் இப்பிரதேசத்தில் அம்புலன்ஸ் படகு ஒன்று சேவையில் ஈடுபட்ட நிலையில் தற்போது பல நாட்களாக அப்படகு பழுதடைந்து ஊர் காவற்துறை இறங்குதுறையில் தரித்து நிற்பதால் இச் சேவை தற்போது இடம்பெறுவதில்லை.

இதனால் நயினாதீவில் அவசர நோயாளர்களை அழைத்துச் செல்ல முடியாதுள்ளதாகவும் குறிப்பாக அண்மையில் நயினாதீவு இறங்குதுறையில் படகிலிருந்து மோட்டார் சைக்கிளை எடுத்த சமயம் எதிர்பாாராத விதமாக கையில் வெட்டுப்பட்டு காயம் ஏற்பட்ட ஒருவர் சிரமத்தின் மத்தியில் குறிகட்டுவானுக்கு அழைத்து வரப்பட்டு வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே அவசரமாக அம்புலன்ஸ் படகைதிருத்தியமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (175)

# இளநீர் கோம்பைகளால் டெங்கு பரவும் அபாயம்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் ஆங்காங்கே வீதியோர வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் செவ்விளநீர் வியாபாரிகள் விற்பனை செய்த இளநீர்க் கோம்பைகளை வீதியோரங்களில் வீசிவிட்டுச் செல்வதால் அப்பகுதிகளில் டெங்கு நோய் பரவக்கூடிய அபாய நிலை காணப்படுவதுடன் சுற்றுச்சூழலும் மாசடைந்த நிலையில் காணப்படுவதனையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

வாகனங்களில் கொண்டு சென்று இளநீர் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் வீதியோர வியாபாரிகள் வீதியோரங்களில் ஆங்காங்கே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன் அவ்விடங்களிலேயே அக்கோம பைகளையும் வீசியெறிந்துவிட்டுச் செல்வததால் வீதியோரங்களில் இளநீர்க் கோம்பைகள் குவியல்களாக அங்குமிங்கும் சிதறிகிடப் பதைக் காணக்கூடியதாகவும் உள்ளது.

இவ்வாறு சிதறிக் காணப்படும் பிளக்கப்படாத கோம்பைகளினுள் நீர் தேங்கி டெங்கு நுளம்பு பரவக்கூடிய அபாய நிலை காணப்படுவதுடன் வீதியோரங்களும் அசுத்தமடைந்தும் காணப்படுகின்றது.

குறிப்பாக அச்சுவேலி நகர்ப் பகுதியை அண்டிய பகுதியில் அமைந்துள்ள அச்சுவேலி மத்திய கல்லூரி முன்பாக உள்ள பிரதான வீதியின் ஓரத்தில் இவ்வாறு கோம்பைகள் யாரும் கவனிப்பாரற்ற நிலையில் சில நாட்களாக காணப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (03)

தீமை வேறு, தீமை செய்பவன் வேறு என்ற பாகுபாட்டை ஒரு போதும் மறக்கக் கூடாது. - மகாத்மா காந்தி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## வாழ்வதா, தமிழீழம் காண்பதா?

கருணாநிதியின் டெசோ மாநாட்டுத் தகிடுதத்தங்கள், சூடான செய்திகளின்றிச் சோர்ந்து போயிருந்த நம் ஊடகங்களுக்கு சற்று சுவாரஷ்யமூட்டி விட்டிருக்கிறது. ஈழத்திலுள்ள தமிழர்கள் வேண்டுமானால் செத்ததும் சீரழிந்ததும் போதும் என்று மகாணசபை, அதிகாரம், அபிவிருத்தி என்று யோசிக்கத் தலைப்படலாம். ஆனால், தேர்தலில் படுதோல்வியடைந்து விஜயகாந்தின் தேதிமுக வுக்கும் பின்னால் வருமளவுக்கு செல்வாக்குச் சரிந்துவிட்டிருப்பவர், ஈழத் தமிழர்கள் அமைதியின் பாதைக்குப் போக விட்டுவிட முடியுமா? இன ஆவேசச் சூளுரைகளை விட்டால் பாவம் அவருக்கு ஜெயலலிதாவை எதிர்கொள்ள வேறென்ன ஆயுதம் இருக்கிறது?

அதனால்தான் சாவதற்கு முன் மீண்டுமொருமுறை ஆட்சிக் கதிரையில் அமர்ந்து பார்க்க வேண்டுமானால், 'நான் தமிழீழம் காணாமல் சாகமாட்டேன்' என்று அறிவித்தால்தான் தனக்குச் சாகும் வயதாகிவிட்டது என்று சொல்லித் திரிபவர்களைச் சமாளிக்கலாம் என்று நினைத்தார். தேர்தலுக்கு முன்னர் பிரசாரத்தின் போது, "வென்றால் தமிழீழம் எடுத்துக் கொடுத்துவிட்டுத்தான் மறு வேலை" என்று முழங்கி ஆட்சிக்கும் வந்துவிட்ட ஜெயலலிதா அவர்களுக்கு கருணாநிதியின் இந்த 'தமிழீழ முழக்கம்' சென்ரிமென்டாகப் பயத்தைக் கொடுக்கும் என்பதில் ஆச்சரியமில்லை. அவருக்கு இப்போது தமிழீழத்திற்கு எதிராகப் பேச வேண்டிய ரோல்!

டெசோ மாநாடு, தமிழீழத் தீர்மானம் என்பதெல்லாம் ஜெயலலிதாவை இன்று சங்கடப்படுத்தும் விஷயங்கள். எனவே மாநாட்டுக்கெதிராகத் தடை உத்தரவைப் போடுகிறார். இவர்களது தமிழீழ நாடகத்தில் இப்போது தர்க்கரீதியாகப் பார்த்தால், தனிநாடு பெற்றுவிட முயற்சிப்பவர் கருணாநிதி, தனிநாட்டுக்கு எதிரானவர் ஜெயலலிதா என்று அரிதாரம் மாற்றிப் பூசப்பட்டு விட்டது. இதோ ஒரு வருடத்துக்கு முன்னர்தான், தமிழீழத்துக்காக உயிர்கொடுத்துப் போராடப் படைதிரட்டிக் கொண்டிருக்கும் சீமானாலேயே, ஈழத்தமிழர்களுக்குத் தனிநாட்டைப் பிரித்தெடுத்துக் கொடுத்து விடக்கூடிய ஒரே தெய்வம் அம்மாதான் என்று போற்றப்பட்டவர் ஜெயலலிதா. இன்று கருணாநிதி அதை ஒரு மாநாட்டின் மூலம் எடுத்துக் கொடுத்துவிடப் பார்த்தால், விடமாட்டேன் என்று அதைத் தடுத்து நிற்கிறார். ஈழத்தமிழர்களுக்கு என்னே ஒரு துரதிர்ஷ்டம்!

தமிழ்நாட்டின் அறிஞர் பெருமக்களும் இலக்கிய விற்பன்னர்களும், தமிழபிமானிகள் மனித நேயர்களும் தமிழீழத்துக்காக என்று சொல்லி மாநாடு நடத்தும்போது அதை எதிர்த்துப் பேசலாமா என்கிற ஈழாபிமான உணர்வில் உருகி நிற்கிறார்கள். ஏதாவது சொல்லப்போக, புலம்பெயர் தமிழர்கள் கோபங்கொண்டுவிட்டால் அழைப்புகளும் நின்றுபோய்விடுமோ என்ற குழப்பத்தில், சிங்கள அரசின் இரத்தக் காட்டேரித் தன்மை பற்றிச் சில குறிப்புகளைச் சொல்லிவிட்டு அமைதியடைகிறார்கள்.

தமிழக அரசியல்வாதிகள் ஈழமக்களுக்கு யதார்த்தமானது என்ன என்பது பற்றிச் சிந்திக்கவே முடியாதவர்களாக, தனிநாடு கண்டே தீருவோம் என்று முழங்கி, அவர்களுக்கான அரசியல் ஆதாயங்களை அங்கு பெறமுடியுமா என்று முயன்றுகொண்டிருப்பது ஓரளவுக்குப் புரிந்துகொள்ளக் கூடியதுதான். ஆனால், இந்தக் கலைஞர்கள் புத்திஜீவிகள் எனப்படுவோர் உண்மையில் என்ன நினைக்கிறார்கள்? ராஜபக்ஷேக்களைத் திட்டிக்கொண்டிருப்பதொன்றே ஈழத்தமிழர்களைத் திருப்திப்படுத்தப் போதுமானது என்பது போலவே ஆய்வுக்கட்டுரைகள் எழுதுகிறார்கள். அதற்கப்பால் எதுவும் சொல்ல அவர்களுக்கும் தெரியாது. அல்லது பொதுவான தமிழோட்டத்தை மறுத்து எதற்குப் பொல்லாப்பு? என்ற அரசியலிலேயே அவர்களும் உழல்கிறார்கள்.

ஈழத்தமிழ் மக்கள் இனி வாழ்வதெப்படி என்ற கேள்விகள் கருத்துக்களைவிட முள்ளிவாய்க்கால் அவலங் குறித்துச் சொல்லிக்கொண்டிருப்பது போதும் என்றே அவர்களும் நினைக்கிறார்கள். கொடுமைதான்.

- ஆசிரியர்

# யாழ்.நகரில் வர்த்தகக்கண்காட்சி புதுவருடத்தில் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நான்காவது வருடமாக எதிர்வரும் 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர், வடபகுதி சந்தையில், தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாதிருந்த உற்பத்தியாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகத்துறையினருக்கு இந்த சர்வதேச வர்த்தகக் கண்காட்சி வாய்ப்பாக அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தவிர, துரிதகதியில் வளர்ச்சியடைந்து வரும் நவீன தொழில் நுட்பங்கள், புதிய கைத்தொழில்கள் போன்றவற்றை அறிந்து கொள்வதுடன், அதன் மூலம் அவற்றின் பலன்களை முற்றாக பெறமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சியில் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் பங்கு பற்றவுள்ளதனால், அவர்களின் வர்த்தக நடவடிக்கைகள் குறித்த விபரங்களை பெறக் கூடியதாக இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, யாழ்ப்பாண மக்களின் பின்னணியைக் கொண்ட வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளையும் உள்ளடக்கியதாக விளங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, இலங்கையின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த நிர்மாணம், விவசாயம், உணவுப் பானங்கள், பொதியாக்கம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம், ஆடையணிகலன்கள், வாகனங்கள், விருந்தகங்கள், சுற்றுலா, நிதிச் சேவைகள், பாவனைப் பொருட்கள் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றவுள்ளன.

இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கங்களின் சம்மேளனம், யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கம் என்பன, இந்த யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஏற்பாடுகளுக்கு முக்கிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகத்தமிழ் கல்வி மாநாடு சென்னையில் தடல்புடல் ஏற்பாடு

## இலங்கை உறுப்பினர்கள் பலர் பங்கேற்பு

உலகின் பல நாடுகளிலும் கிளைகளைக் கொண்டியங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் ஏற்பாடு செய்துள்ள உலகத் தமிழ்க் கல்வி மாநாட்டை எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் சென்னையில் நடத்துவதற்கு மேற்படி இயக்கத்தின் தலைமைப் பீடம் நேற்றுமுன்தினம் முடிவெடுத்துள்ளது.

ஏற்கனவே புதுச்சேரியில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, அதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் திருப்திகரமாக செய்யப்பட்டிருந்த வேளையில், மாநாட்டை புதுச்சேரியில் நடத்துவதிலும் பார்க்க, சென்னையில் நடத்துவதே சிறந்தது என்று பல நாட்டுக் கிளைகள் கேட்டுக் கொண்டமைக்கு ஏற்ப இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக உலகத் தமிழ் கல்வி மாநாட்டின் பொறுப்பாளரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கல்வித் துறை பொறுப்பாளருமான கனடா வாழ் வி.எஸ். துரைராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி இடமாற்றம் தொடர்பாக எழுந்துள்ள சில அவசியமான பணிகளை கவனிப்பதற்காக வி. எஸ். துரைராசா சென்னைக்கு விரைந்துள்ளார்.

அங்கு அவர், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சென்னைக் கிளையின் முக்கியஸ்தர்களோடு சேர்ந்து மாநாடு சிறப்பாக நடப்பதற்கு தேவையான பணிகளைக் கவனிப்பார் என்று கூறப்படுகின்றது.

மேலும் சென்னையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்க் கல்வி மாநாடு தொடர்பாக இலங்கையில் செய்ய வேண்டிய சில பணிகளை ஆற்றுவதற்காக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் ஏற்கனவே கொழும்பு சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரணில் செய்யும் சதியே கட்சி தாவத் தூண்டுகிறது

## தயாசிறி ஜயசேகர கூறுகிறார்

(கொழும்பு)

ஆளும் அரசாங்கக் கட்சியில் தாம் இணையப் போவதாக வெளியான செய்தியை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மறுத்துள்ளார்.

எனினும் தம்மை, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரின் ஊடக மாபியா ஆட்களுமே ஆளும் கட்சியில் இணையத் தூண்டுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஊடகப்பிரிவு, பல தனியார் ஊடகங்களையும் இணையத் தளங்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

இந்தநிலையில் அந்த ஊடகங்களே கடந்த 10 ஆம் திகதி தாம் சுபநேரத்தில் அரசாங் கத்துடன் இணையப் போவதாக வதந்திகளை பரப்பியதாக தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவும் என்னுடன் எப்போதும் பேசக்கூடியவர்கள். ஏனெனில் அவர்கள் எனது நண்பர்கள் மட்டுமல்லாது சிறந்த அரசியல்வாதிகளும் ஆவர் என ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

எனினும், எதிர்வரும் 18 ஆம் திகதி ஆளும்கட்சியின் பிரசாரம் உத்தியோகபூர்வமாக அநுரதபுரத்தில் ஆரம்பித்து வைக்கப்படும் போது ஜனாதிபதியுடன் தயாசிறி ஜயசேகர அந்த மேடையில் தோன்றுவார் என்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான தரப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

# புதுக்குடியிருப்பில் தாண்டவமாடும் வறட்சி

(புதுக்குடியிருப்பு)

தற்போது நிலவும் வெப்பநிலை காரணமாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள குடியிருப்பாளர்களின் வீடுகளில் உள்ள கிணறுகளில் நீர் வற்றிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மேட்டு நிலப்பகுதிகளில் வசிப்பவர்களின் கிணறுகளில் உள்ள நீர் வற்றிச் செல்வதால், தொடர்ந்தும் வெப்பநிலை நீடிக்கும் பட்சத்தில், நீர் முற்றாக வற்றிவிடும் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை தொடர்ந்து நிலவும் கடும் வெப்ப நிலைகாரணமாக வெப்பநோய்கள் குறிப்பாக நெருப்புக்காய்ச்சல், கொப்புளிப்பான், சின்னமுத்து போன்ற நோய்களும் பரவக் கூடும் எனவும் அஞ்சப்படுகிறது. (138)

# நிதி ஒதுக்கீடு

சுன்னாகம் தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து புத்தகங்கள் கொள்வனவிற்காக 48 ஆயிரத்து 500 ரூபா நிதியினை வலி.தெற்குப் பிரதேச செயலகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

தற்போது இச்சனசமூக நிலையம் துரித கதியில் வளர்ச்சி பெற்று வரும் நிலையில் இந்நிதி உதவி தமக்கு மேலும் உத்வேகத்தை அளிக்கிறது என நிலையத்தின் தலைவர் திருமதி. சுபாசினி சுரேஸ்குமார் தெரிவித்தார். (120)

- சாலையூரான்

முஸ்லிம்களின் ஆதரவு அநேகமாக அரசு தரப்புக்குத்தான் என்பது உறுதியாகத் தெரிய வந்திருக்கும் நிலையில், கிழக்கிற்கான மாகாண சபைத் தேர்தல் வெற்றி வாய்ப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தவறவிடும் ஒரு நிலை உருவாகலாம் என்ற ஊகங்கள் வெளியாகியிருக்கின்றன.

நீண்டகாலத்தில் தமிழ் தேசிய தலைமைகள் கொண்டிருந்த உள்முரண்பாடுகள், முஸ்லிம்கள் விடயத்தில் பாரபட்சமாக சிந்திக்கும் போக்கு, கூடவே அரசியல் தலைமைத்துவத்தில் கிழக்கை ஓரங்கட்டுதல் என வடக்குத் தலைமைகள் கொண்டிருந்த நீண்டகால செயற்பாடுகள் அனைத்தும் சேர்ந்து இத்தேர்தலில் முஸ்லிம்கள் தம்மை சரியாக நிலைப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு இப்போது சாத்தியமாகியிருக்கிறது.

முஸ்லிம்களைப் பொறுத்தரை இத்தேர்தலில் தமது இனம் சார்ந்து தெளிவான நிலைப்பாட்டினை அறிவித்திருக்கிறார்கள். ஒன்று தாம் தனியாக தனிச்சின்னத்தில் போட்டியிடுவது என்பது. மற்றையது வெற்றிவாய்ப்பைப் பொறுத்து அரசுடன் இணைந்தோ இணையாமலோ தமக்கான பேரம் பேசும் வாய்ப்பை தக்கவைத்திருப்பது.

மூவின மக்களும் ஏறத்தாழ சமமான குடித்தொகையைக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாணத்தில் இனரீதியாக தமது தனித்துவங்களையும் தமக்கான பிரச்சினைகளையும் முன்னிறுத்தி தமது வெற்றிக்கான வாய்ப்புக்களை உறுதி செய்ய வேண்டிய நிலை இந்த மூன்று தரப்புக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இதில் நீண்டகாலமாக முஸ்லிம்கள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்ட அமைப்புக்களால் தாம் எதிர்கொண்டு வந்த நெருக்கடிகளை நினைவு படுத்தியபடியே இருக்கிறார்கள். அது மட்டுமன்றி தமிழ் தேசிய தலைமைகளை ஆதரிப்பதோ அன்றி கூட்டுச் சேர்வதன் மூலமோ தமக்கு ஏதும் கிடைத்துவிடப் போவதில்லை என்பதையும் அவர்கள் கறாராகவே வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இதில் அரசுத் தரப்புடன்

சொல்லொணாத் துன்பங்களின் பட்டியல் அவர்களிடம் இருக்கிறது.

மறுபுறத்தே தமிழ் தேசியக் கூட்டமைப்பை தம்முடன் இணைத்துக் கொள்வதை விட முஸ்லிம்களை இணைத்துக் கொள்வது அரசு தரப்புக்கு சாத்தியம் அதிகம் என்பதற்கு அப்பால் இதில் போட்டியிடும் தமிழ் தேசியத் தலைமைகளுக்கு எதிரான வெற்றியை உறுதி செய்ய வேண்டிய அரசியல் சூழலும் தற்போது அரசுக்கு பிரதான விடயமாக மாறியிருக்கிறது.

நீண்டகாலமாக வடக்குக் கிழக்கில் கூடுதலான ஆசனங்களை தமிழ் தேசிய்க் கூட்டமைப்பினர் பெற்று வந்தமையும் அதனோடு இணைந்ததாக சர்வதேசத்தின் மத்தியில் இவர்கள் அரசுக்கு எதிராக மேற்கொண்டு வந்த பரப்புரையும் அரசுக்குத் தலையிடியாக மாறியிருக்கும் நிலையில் இத்தேர்தலில் எவ்வாறாயினும் வெற்றியீட்டி தமிழ் மக்கள் தம்முடன் இருக்கிறார்கள் என்பதைக் காட்ட வேண்டிய தேவை அரசுக்கு இப்போதும் முன்னிற்கிறது.

இது ஒருபுறமிருக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யான ஸ்ரீதரன் தனது தேர்தல் பிரச்சாரத்தில் கிழக்குத் தேர்தலின் வெற்றியை வடக்குக் கிழக்கு இணைப்பின் ஆரம்பமாக தமிழ் மக்கள் கொள்ள முடியும் என்ற ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்.



ஏற்படுத்தும் என்பதை நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

இத்தேர்தலில் முஸ்லிம்களின் உரிமைக்காகவும் குரல் கொடுப்பவர்கள் என்பதை காட்டிக் கொள்வதற்காக முஸ்லிம் வேட்பாளர்களையும் களமிறக்கியுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அரசுடன் முஸ்லிம்கள் பங்காளிகளாக இணைய முற்படுவதை தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடாக பிரச்சாரத்தை காண்பிக்க முயல்வது முஸ்லிம்களின் சுயாதீனத்தை ஒருதலைப்பட்சமாக மறுதலிக்கும் ஒரு செயற்பாடாகும்.

மறுபுறத்தே கிழக்கில் மக்களின் அக்கறைக்குரிய முன்னாள் போராளிகள் சிலரை அரசுத் தரப்பு உள்வாங்க தவறியிருக்கும் நிலையில் இவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களாக களமிறங்கியிருப்பதால் சில பகுதிகளின் வாக்குத்தளங்கள் கூட்டமைப்பினருக்குச் சாதகமாக மாறும் வாய்ப்புகள் இருப்பதும் அவதானிக்கப் பட்டுள்ளது.

தேர்தலுக்கான திகதி குறிப் பிடப்பட்டிருக்கும் தற்போதைய சூழலில் கிழக்கில் காணாமற் போனோரின் பட்டியல்களை சில இணையத்தளங்கள் வெளியிட்டு அரசுக்கு

செயலர் ரொபேர்ட் ஓ பிளேக் இத்தேர்தலில் தமிழ், முஸ்லிம் தரப்புக்களை இணைத்து கூட்டாட்சியை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக செய்திகள் வெளியானபோது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் பிரதியமைச்சருமான பீர் ேகுதாவூத் சற்று வித்தியாசமான கருத்தொன்றை வெளியிட்டிருக்கிறார்.

தந்தை செல்வாவின் பக்குவத்தை தமிழ் கூட்டமைப்பினரும் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவரான மறைந்த எம்.எச்.எம்.அ்ரபின் பக்குவத்தை முஸ்லிம் தலைவர்களும் பெற்றுக் கொள்ளும் வரை தமிழ் - முஸ்லிம் இன ஐக்கியம் என்பது சாத்தியமில்லாத ஒன்று என்ற ரீதியில் அவர் கருத்துக் கூறியிருக்கிறார்.

அத்தோடு தமிழ் சமூகத்தினர் தாம் பெரியதொரு சமூகம் என்ற மனப்பாங்கில் குழந்தை தாயிடம் குடுகுடுவென ஓடுவதைப் போன்று முஸ்லிம்கள் தமக்குக் கீழே இருக்க வேண்டும் என எண்ணக் கூடாது என்றும் அவ்வாறே தம்மைத் தமிழர்கள் கெஞ்சி நிற்பவர்களாக இருக்க வேண்டும் என முஸ்லிம்கள் எதிர்பார்க்கக் கூடாது என்ற கருத்தையும் அவர் முன்வைத்திருக்கிறார்.

எவ்வாறாயினும் பஷீர் ஷேகுதாவூதின் இக்கருத்துக்கள் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் நீண்டகாலம் நிலவிவந்த உறவின் தன்மையை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருக்கின்றன.

## கிழக்கு தேர்தல் களம்:

# ஆதரவுத் தளத்தை இனம்சார்ந்து வலுப்படுத்த வேண்டிய நிலையில் போட்டியிடும் கட்சிகள்





இணைந்திருக்கும் முன்னாள் போராளிகளான பிள்ளையான் மற்றும் கருணா போன்றோரது நிலை வித்தியாசமானது. அவர்கள் வடக்கின் தமிழ் தேசியம் பற்றிய போதிய பட்டறிவைக் கொண்டிருப்பவர்கள்.

போராட்டம் உருவாவதற்கு முன்னரும் போர்ச்சூழலிலும் தமது குறுகிய அரசியல் நலன்களுக்காகக் கிழக்கு மக்கள் பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்டதை நேரடியாக அனுபவித்து உணர்ந்த வரலாற்றைக் கொண்டிருப்பவர்கள்.

விடுதலைக்கான போராட்டப் பாதையில் தமிழ் தேசியத் தலைமைகள் இழைத்த தவறுகளின் விளைவாக குறிப்பாக கிழக்கு மக்கள் எதிர்கொள்ள நேரிட்ட

இந்த வடக்குக் கிழக்கு இணைப்பிற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தலாம் என்ற ஒரு முன்மொழிவு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கான முயற்சிகளை சரியாக முன்னெடுப்பதில் தமிழ் தலைமைகள் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை.

**அரசுடன் முஸ்லிம்கள் பங்காளிகளாக இணைய முற்படுவதை தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடாக பிரச்சாரத்தை காண்பிக்க முயல்வது முஸ்லிம்களின் சுயாதீனத்தை ஒருதலைப்பட்சமாக மறுதலிக்கும் ஒரு செயற்பாடாகும்.**

காரணம் இந்த வடக்குக் கிழக்கு இணைப்பை கிழக்கு மக்களில் பெரும்பான்மையானோர் விரும்பவில்லை என்பதே உண்மை யான நிலைமையாகும்.

இந்த நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தாம் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சாரத்தில் கிழக்கு எமது கைக்குள் வரும் போது வடக்கின் மாகாண சபைத் தேர்தல் வெற்றியுடன் ஐக்கிய இலங்கைக்குள் வடக்குக் கிழக்கு இணைந்த தாயகத்தை அமைப்பதற்கான அரசியல் போராட்டத்தை வலுவாகத் தொடர முடியும் எனக் கூறிவருவது ஏறத்தாழ ஒரு எதிர்மறையான விளைவையே

**ஏதாவதொரு மாற்றுத் தரப்பை இணைத்துக் கொள்வதின் மூலமே ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டு நகர்த்த முடியும் என்பது உறுதியாகிவிட்ட நிலையில், தாம் மற்றொரு தரப்பை இணைத்துக் கொள்பவராக இருக்க வேண்டுமே தவிர இணைக்கப்படுபவராக இருக்கும் நிலைக்கு தாம் சென்றுவிடக் கூடாது என்பதில் மூன்று தரப்பினருமே குறியாக இருக்கிறார்கள்.**

எதிரான உணர்வலைகளை ஏற்படுத்தும் சமகால நிலைமைகளும் அரசை நோக்கிய தமிழ் வாக்காளர்களின் ஆதரவில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதையும் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும், தேர்தலின் பின்னரான கிழக்கு மாகாண சபை என்பது ஏதாவதொரு மாற்றுத் தரப்பை இணைத்துக் கொள்வதின் மூலமே ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டு நகர்த்த முடியும் என்பது உறுதியாகிவிட்ட நிலையில், தாம் மற்றொரு தரப்பை இணைத்துக் கொள்பவராக இருக்க வேண்டுமே தவிர இணைக்கப்படுபவராக இருக்கும் நிலைக்கு தாம் சென்றுவிடக் கூடாது என்பதில் இம்மூன்று தரப்பினருமே குறியாக இருப்பதாகத் தெரிகிறது.


பிந்தியதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச்

அவரது கருத்தை சம்பந்தப்பட்ட இரு தரப்பும் கவனத்தில் எடுத்துச் செயற்படுவார்களாயின் எதிர்கால தமிழ் - முஸ்லிம் இன ஐக்கியம் குறைந்தபட்சமாவது விருத்தி பெறும் என நாமும் எதிர்பார்க்கலாம்.

தேர்தலில் போட்டியிடும் மூன்று தரப்பினர் மத்தியிலும் இனம் சார்ந்து அவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு களமாக இத்தேர்தல் கருதப்பட்டிருக்கும் நிலையில் தொடரும் தேர்தல் வன்முறைகள் தேர்தலின் பின்னரும் தொடர்ச்சியான இன முரண்பாட்டை வளர்த்துக் கொள்வதற்கான களமாக அமையாது பார்த்துக் கொள்வது இத்தேர்தல் மூலம் தெரிவாகப் போகும் கிழக்கு மாகாணத்தின் எதிர்கால தலைவர்களது தலையாய பணியாக இருக்கும் என்பதை இவ்விடத்தில் சுட்டுவது பொருத்தமானது.

# வடக்கு கிழக்கில் மனிதாபிமானப் பணி

# புலம் பெயர் அமைப்புக்கள் அரசுடன் பேச்சு



(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் மனிதாபிமானப் பணிகளை விஸ்தரிப்பது தொடர்பாகவும், யுத்தப்பாதிப்புக்களை அகற்றுவது குறித்தும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் ஆரம்பிகப்பட்ட பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

22 பேரைக் கொண்ட புலம்பெயர் தமிழ் பிரதிநிதிகளே இவ்வாறு பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

யுத்த வலய தமிழ் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷபுலம்பெயர் தமிழர்களிடம் உறுதியளித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் இந்த சந்திப்பு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனிதாபிமான விவகாரங்கள், வடக்கு கிழக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு போன்ற விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியா, பிரான்ஸ், பிரித்தானியா, சுவிஸ்ர்லாந்து, சுவீடன் மற்றும் நோர்வே போன்ற நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களே பாதுகாப்புச் செயலாளரை சந்தித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனின் அழைப்பை ஏற்றுக்கொண்டு இவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

தமிழ் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை மற்றும் வடக்கு கிழக்கு மனிதாபிமான விவகாரங்கள் குறித்து புலம்பெயர் தமிழர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பாதுகாப்புச் செயலாளரை சந்தித்த புலம்பெயர் தமிழர்கள் அனைவருமே ஒரு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் சில நாடுகளில் பிழையான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்தம் காரணமாக ஏற்பட்ட காயங்களை ஆற்ற அனைத்து தரப்பினரினதும் ஆதரவு அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நூற்றுக் கணக்கான முன்னாள் விடுதலைப் புலி போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# சுருங்குகிறது சுங்க திணைக்களம்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்து மிக பெருமளவில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் சில வர்த்தகர்களின் அழுத்தங்கள் காரணமாக சுங்க திணைக்களத்தித்தின் விசேட பணிகள் மற்றும் விசாரணை பிரிவை மூடுவதற்கு தயாராகி வருவதாக தெரியவருகிறது.

இந்த பிரிவை மூடி விட்டு, அந்த பிரிவில் பணியாற்றும் அதிகாரிகளை வேறு துறைகளுக்கு மாற்றுமாறும் சுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொருட்களை ஏற்றி இறக்கும் சுங்க பணிமனையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பிரச்சினையே இதற்கான மூல காரணமாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தை அடுத்து, குறித்த வர்த்தகர்கள் தொடர்ந்தும் அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருக்கு அழுத்தங்களை கொடுத்து வந்துள்ளனர்.

சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்படும் பொருட்களுக்கு வரி விதிக்கப்படும் இந்த பிரிவை மூடுவதன் மூலம் அரசாங்கத்திற்கும் பெரும் வருவாய் இழப்பு ஏற்படும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# பாகிஸ்தான் சிகரட் கடத்தல் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட 6 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரட் தொகையை கைப்பற்றியுள்ளதாக கட்டுநாயக்க சுங்க அதிகாரி ஜி.ஜி.பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

சார்ஜாவில் இருந்து வந்த விமானத்தில் பயணித்த பிரஜை ஒருவர் நேற்று அதிகாலை 4.30 அளவில் சிகரட் தொகையுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர தொடர்பில் கட்டுநாயக்க சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தூக்கு மேடை புனரமைப்பு மரண தண்டனை விரைவில் அமுல்

(கொழும்பு)

நாட்டில் மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொடூரமான மனிதப் படுகொலைகள் உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை விதிக்க மரண தண்டனையை நிறைவேற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்படுகின்ற போதிலும் 1976 ஆம் ஆண்டின் பின்னர மரண தண்டனை நிறைவேற்றப் படுவதில்லை.

மரண தண்டனை நிறைவேற்றம் இரத்து செய்யப்பட்டுள்ள காரணத்தினால் குற்றவாளிகள் அச்சமின்றி பாரியளவில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட 237 கைதிகள் தற்போது இலங்கைச் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

மரண தண்டனையை நிறைவேற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் முழு அதிகாரமும் ஜனாதிபதிக்கே காணப்படுகின்றது. தண்டனை நிறைவேற்றும் முதல் கட்ட நடவடிக்கையாக தூக்குமேடை பழுதுபார்க்கப்பட்டுள்ளது.

# வாக்களிக்க வசதியாக தற்காலிக அடையாள அட்டை

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபை தேர்தல்களில் வாக்களிப்பவர்களின் வசதி கருதி தற்காலிக அடையாள அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த தற்காலிக அடையாள அட்டைகள் அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்ட வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் கிராம சேவகர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்காலிக அடையாள அட்டைக்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் தேர்தல் பிரசாரத்தில் அரச வாகனங்கள்

## "பவ்ரல் அமைப்பு மீண்டும் குற்றச்சாட்டு

PAFFREL

மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்திற்காக அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதாக பவ்ரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அரச சொத்துக்க்ள் துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாது என அளிக்கப்பட்ட உறுதி மொழியை மீறி, அரச சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு சொந்தமான 30 வாகனங்கள் முற்று முழுதாக தேர்தல் பிரசாரப் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வருவதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

வாகனங்கள் சோடிக்கப்பட்டுள்ளதாகவும் இது மோட்டார் போக்குவரத்து சட்டங்களை மீறுதலாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.குறிப்பாக வட மத்திய மாகாணத்தில் சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

# செய்தியாளர்களுக்கு மடிகணினி வழங்கத்திட்டம்

(கொழும்பு)

பிராந்திய செய்தியாளர்களுக்கு மடிகணினிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்குமாறு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுஜன ஊடக அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கண்டியில் நேற்றைய தினம் பிராந்திய செய்தியாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிராந்திய செய்தியாளர்களுக்கான உதவிகளுக்கும் குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

செய்தியாளர்களின் பெயர் விபரங்களை திரட்டுமாறும், அல்லது மாகாண ஆளுநரின் ஊடாக பிராந்திய செய்தியாளர்களின் விபரங்களை எடுத்து, இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பயனடைய செய்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# தேர்தலில் தோல்வியை ஏற்றுக் கொள்வோம் முறைதவறாத தேர்தல் நடத்தப்பட்டால்

## – முந்திக் கொள்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

நீதியான முறையில் நடைபெறுகின்ற தேர்தலில் ஏற்படுகின்ற தோல்வியை ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் தேர்தலில், அதிக அளவான தேர்தல் சட்டங்களை மீறிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அரசாங்க உறுப்பினர்களே இவ்வாறான சட்டத்தை மீறிய காரியங்களில் ஈடுபடுகின்றனர்.அரச வாகனங்கள், சொத்துக்கள், கட்டிடங்களை பாவித்தல், போன்ற பல்வேறு முறைக்கேடுகளை அரசாங்க உறுப்பினர்கள் மேற்கொள்வதாக, திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் இத்தகைய காரியங்களில் ஈடுபட வேண்டாம் என, தமது உறுப்பினர்களுக்கு தாம் கோரி இருப்பதுடன், இது தொடர்பில் அவர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் இவ்வாறான முறைகேடுகள் இல்லாது, நேர்மையான முறையில் நடைபெறும் தேர்தலில் தோல்வி ஏற்படுமாக இருந்தால், அதனை ஐக்கிய தேசிய கட்சி ஏற்றுக் கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அரச சொத்துக்களை பாவித்தமைக்காக, வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேம்லால் திஸாநாயக்க உள்ளிட்ட 13 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பேர்டி பிரேம்லால் திஸாநாயக்க, முடியுமாக இருந்தால் இந்த குற்றச்சாட்டுகளை நிரூபித்துக் காட்டுமாறு சவால் விடுத்துள்ளார்.

இந்த தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெறுவது உறுதியானது. தேர்தல் ஆரம்பித்த உடனேயே அரசாங்க சொத்துக்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டதாகவும், தற்போது தனிப்பட்ட சொத்துக்களே பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அநுராதபுரமாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் 6 உறுப்பினர்களும், ஜே.வி.பி.யின் சில உறுப்பினர்களும் அரசாங்கத்துடன் இணைந்துக் கொண்டுள்ளனர்.

தோல்வியை சுதாகரித்துக் கொள்ள முடியாத நிலையிலேயே இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தொண்டமானாறு பகுதியில் காவலரண் முழுமையாக அகற்றல்

(வடமராட்சி)

அச்சுவேலி தம்பாலை வீதி ஊடான தொண்டமானாறு வீதியில் நீண்ட காலமாக அரை குறையாக அகற்றப்பட்டிருந்த காவலரண் முற்று முழுதாக வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரும், அச்சுவேலி பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளருமாகிய கி.செல்வராசாவின் முயற்சியால் அகற்றப்பட்டுள்ளது.



நீண்ட காலமாக ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் இவ்வீதியில் முற்று முழுதாக அகற்றப்படாத காவலரணால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். எனினும் மேற்படி விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென் றதன் பயனாக அவரின் அறிவுறுத்தலின் படி அமைப்பாளர் இந்த காவலரணை நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன் உரிய அதிகாரிகளுடன் கதைத்து அதனை முற்றுமுழுதாக அகற்றுமாறு கோரிக்கை விடுத்தார்.

இதனை அடுத்து சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் கடந்த வியாழக்கிழமை பக்தர்களின் நலன் கருதி இக்காவலரண் முற்றுமுழுதாக அகற்றப்பட்டுள்ளதுடன் இவ்வீதியும் செப்பனிடப்பட்டு வருகின்றது.

மேலும் இவ்வீதியின் குறைபாடுகளையும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், அப்பகுதி கிராம அலுவலர் எஸ்.சாந்தரூபன் ஆகியோரிடம் கலந்துரையாடினார். இதில் ஈ.பி.டி.பி உறுப்பினர் நவாப்பும் உடனிருந்தார். (116)

# ரமழான் சிந்தனை




***ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவான 'லைலதுல் கத்ர்' இரவு இரு மனிதர்களின் சச்சரவினால் மறைக்கப்பட்டது.***

***தொழுகை, நோன்பு, ஸதக்காவை விட சிறந்தது ஒற்றுமையாகும். உங்களுக்கிடையில் சண்டை சச்சரவு தீனை மொட்டையடிப்பதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்.***

***நூல் : புஹாரி***

(105)

# பரமர் சங்கமம்



"சிறந்ததோர் புலமை எனின் சகல நாட்டவராலும் ஏற்றுக் கொள்ளப்படும்" என்பது என்னமோ உண்மைதான்.

அதற்காக சகல இடங்களிலும் தத்தமது புலமையை வெளிக்காட்ட வெளிக்கிடுவதும் வெகுளித்தனமாகப் போய் விடுவதும் உண்டல்லவா? முற்காலத்தில் செய்யுள், பனுவல் கவிதை என்பன புலவர்களால் படைக்கப்பட்டன, இயற்றப்பட்டன.

அரசவையிலும் தமிழ்ச்சங்கம் வைத்தும், தமிழை வளர்த்ததாகவும் அறிகிறோம். அத்தகைய சூழலில் ஒவ்வொரு புலவரும், கவிஞர்களும் தத்தமது படைப்புகளில் வித்து வத்தைக் காட்டிச் சென்றுள்ளமையையும் பரவலாகக் காண்கின் றோம்.

அது அவ்வாறிருக்க பாடல்கள் எனப்படுபவையும் கவிதைகள் ஆனால் திரிபு நிலை தோன்றும். பாடல்கள் மெல்லிசை, தனி இசை, பக்தி என்பதுடன் கிராமிய - நாட்டு - அம்பா பாடல்கள் என வரிசைப் படுத்தப் படுகின்றன. அதே வேளை சினிமாவிலும் சேர்க்கப்படுகின்ற பாடல்களும் தோன்றியுள்ளன. பாடல்கள் எனப்படுகின்ற வற்றுள்ளும் மேற்சொன்னவாறே அவற்றின் தேவைக்கேற்ப பாடப்படுகின்றன.

கிராமிய - நாட்டு - அம்பா பாடல்கள் படிப்பு வாசனை - எழுத்தறிவு இல்லாத பாமர மக்களால் வாய்மொழியாகத் தோன்றினவாக அமைந்ததால் சந்தம், எதுகை. மோனை என்னும் இலக்கண வரம்புகள் இல்லாமல் அமைந்துள்ளன.

ஆயினும் குறித்த பொருளைச் சுவையோடு இலகு சொற்களில் வெளியிடுவனவாக அமைந்து விடுவதைக் காணலாம். அதனால் அவற்றுள் வித்துவக் கருத்துகள் செறிவதில்லை.

மெல்லிசை, பக்தி, தனிப்பாடல்களில் கருத்துச் செறிவான வித்துவச் சொற்கள் அமைந்து வடுவதைத் தவிர்க்க முடியாது. அவை செய்யுள், பனுவல். கவிதை சார்ந்தவையாகக் கொள்ளப்படுவது ஏற்றுக் கொள்ளலாம்.

மிக்க காலங்கள் தாழ்த்தி சேர்க்கப்படும் சினிமாப்பாடல்களில் தத்துவங்கள், கவிஞர், படைப்பாளிகளின் வித்துவக் கருத்தாடல்களான சொற்பிரயோகங்கள் வருவது எவ்விதம்?

"தானறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்" என வழங்கப்படுகின்ற மொழியில் குறிப்பிடுவது போல் ஒரு பாத்திரம் அல்லது காதலர்கள், குழுமம் என படக்காட்சியில் வரும் பாடலில் அப்பாத்திரங்கள் வித்துவக் கருத்துக்களையா தெரிவு செய்து பாடும்?

கவிஞர்கள் குறிப்பிட்ட காட்சிக்குப் பாடல்களை எழுதும்போது போட்டி போட்டுக் கொண்டு தத்தமது வித்துவக் கருத்துக்களை செறிந்த சொற்பிரயோகங்களை அந்தப் பாடல்களில் சுமத்தி வருவது ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

செய்யுள், பனுவல், கவிதைகளைச் சாதாரண பாடல்களில் சுமை ஏத்துவது போல் ஏத்தாமல் இயல்பாக காட்சியில் வரும் பாத்திர வார்ப்புக்களின் இயலிசையாக சினிமாப்பாடல்கள் எழுதப்படுவதும் அமைவதும் நல்லா இருக்குமெல்லே....

இனியாவது சினிமாப் பாடல் எழுதும் கவிஞர்கள் கவ்னிப்பார்களா என்ன நான் சொல்லுறே... சிறந்ததோர் பாடலெண்டால் எல்லாரது காதுகளிலும் ரீங்காரமிடுமெல்லே... இல்லையே பின்னை...

# இணையத்தள வடிவமைப்பு மாணவர்களுக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணினிச் சங்கம், வடமாகாண கல்வித் திணைக் களத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தும் இணையத்தள வடிவமைப்பு போட்டியின் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கான 69 பாடசாலை மாணவர்களுக்கு சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் உள்ள கணினி மையத்தில் இரண்டு அமர்வுகளாக பயிற்சிப்பட்டறைகள் இடம்பெற்றன.

முதலாவது அமர்வு பயிற்சிப்பட்டறை காலை 09:30 மணிதொடக்கம் பிற்பகல் 01:00 வரை இடம்பெற்றது. இதில் திருக்குடும்ப கன்னியர் வித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி ஆகிய 03 பாடசாலைகளைச் சேர்ந்த 32 மாணவர்கள் பங்கு பற்றினார்கள்.

இரண்டாவது அமர்வு பயிற்சிப்பட்டறை பிற்பகல் 01:15 மணி தொடக் கம் மாலை 04:15 வரை இடம்பெற்றது. இதில் வேம்படி மகளிர் கல்லூரி, சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி ஆகிய 4 பாடசாலைகளைச் சேர்ந்த 37 மாணவர்கள் பங்கு பற்றினார்கள்.

# மண்டபம் புனரமைப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்.காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியால்யநடராஜா ஞாபகர்த்த மண்டபத்தின் புனரமைப்பு வேலைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கட்டடத்தைப் புனரமைப்பதற்காக மாகாணக் கல்வித்திணைக்களம் 50 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளதாக அதிபர் பொ.சிவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

காரைநகரில் உள்ள மிகப் பெரிய அரங்குடன் கூடிய இம் மண்டபம் நீண்ட காலமாகப் புபபுனரமைக்கப் படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10)

# முரசின் இன்றைய பலன்

**(13.08.2012 - திங்கட்கிழமை)**

**நந்தன வருஷம் ஆடி மாதம் 29 ஆம் திகதி. ஏகாதசி முன்னிரவு 07.56 வரை. நட்சத்திரம் மிருகசீரிடம். முற்பகல் 3.50 வரை. அமிர்தசித்தம். ஏகாதசி விரதம். இராகுகாலம் 7.35 - 9.05 வரை. சுபநேரம் 12.05 - 1.35 வரை. எமகண்டம் 10.35 - 12.05 வரை. குளிகன் காலம் 1.35 - 3.05 வரை.**

| | |
|---|---|
| **மேடம்** | வாக்கு நலம், சுபகாரியம் தாமதமாகும், வருவாய் அதிகரிக்கும், வெளிநாட்டுத் தகவல். |
| **ரிஷபம்** | பண வரவு, பந்தங்கள் சாதகமாகும், ஆடம்பர வாழ்க்கை, தொழில் சிறப்பு. |
| **மிதுனம்** | தேக நலினம், மறைமுகமான எதிர்ப்புக்கள், தொழில் துறையில் அபிவிருத்தி, போட்டி. |
| **கடகம்** | வருவாய் உயர்வு, வெளிநாட்டு முயற்சி, எதிர்பார்த்த தனவரவு, மதிப்பு உயரும். |
| **சிம்மம்** | இலாபம், பணிந்து காரியம் சாதிப்பீர், விரோத போக்கில் மாற்றம், பிற்போட்டவை நிறைவேறும். |
| **கன்னி** | அதிகாரம், குடும்பத்தில் ஒற்றுமை, பெற்றோர் அனுசரணை, வழக்குகள் சாதகம். |
| **துலாம்** | வெற்றி கிட்டும், அதிகாரிகள் கண்காணிப்பு, முதலீடுகளை ஒத்திப் போடவும், கடன் சுமை. |
| **விருச்சிகம்** | பயண நன்மை, இரத்த உறவுகளிடம் கவனம், விரோதி நண்பராவார், பணப்பரிமாற்றம் கவனம். |
| **தனுசு** | மனதில் அச்சம், வாக்குப்பலிதம், அன்னியரால் உதவி, தூர தேச முயற்சிகள். |
| **மகரம்** | சிறிய விரயம், அதிகாரிகளை அனுசரிக்கவும், பூர்வீக சொத்தில் சிக்கல், கல்வியில் கவனம். |
| **கும்பம்** | பழைய நினைவுகள், பூர்வீக சொத்தில் பிரச்சினை, எச்சரிக்கையுடன் இருக்கவும், சஞ்சலம். |
| **மீனம்** | தடைகள் அகலும், பதவி உயர்வு கிட்டும், செல்வந்தர் நட்பு, அதிகாரிகள் அனுசரணை. |

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் நேற்று நள்ளிரவு ஆண்களுக்கான 4X100 மீற்றர் தொடர் ஓட்டம் நடைபெற்றது. இதில் ஜமேக்கா, அமெரிக்கா, பிரான்ஸ், கனடா, ஜப்பான், டிரினிடாட், நெதர்லாந்து, அவுஸ்ரேலியா ஆகிய அணி கள் பங்கேற்றன. இதில் உசைன் போல்ட், யோகனன் பிளேக், மைக்கல் பிராட்டர், நெஸ்டா கார்ட்டர் ஆகியோரை அடங்கிய ஜமைக்கா அணி 36.84 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து தங்கம் வென்றது.

உசைன் போல்ட் பெற்ற 3ஆவது தங்கம் இதுவாகும். அவர் ஏற்கனவே 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்று இருந்தார். இதன்மூலம் புதிய வரலாறு படைத்தார். 2008ஆம் ஆண்டு பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக்கில் உசைன் போல்ட் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4X100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்றார். தற்போது அதே மாதிரி 3 தங்கத்தை லண்டன் ஒலிம்பிக்கில் கைப்பற்றி புதிய சாதனை படைத்தார். உசைன் போல்ட் ஓட்டத்தை உலகமே பார்த்து வியந்து வருகிறது. ஜமேக்கா அணி பந்தய தூரத்தை 36.84 வினாடியில் கடந்ததன் மூலம் புதிய உலக சாதனை படைத்தது. இதற்கு முன்பு கடந்த ஆண்டு 37.04 வினாடியில் அந்த அணி கடந்து இருந்ததே சாதனையாக இருந்தது.

இந்த உலக சாதனைக்கு உசைன்போல்ட் முக்கிய பங்கு வகித்தார். கடைசி 100 மீற்றர் ஓட்டத்தில் அவர்தான் பங்கேற்று மிகவும் வேகமாக ஓடினார். அவரது அதிவேக ஓட்டம் மூலம் புதிய உலக சாதனை படைக்க முடிந்தது. 4ஆவது 100 மீற்றரை தொடும்போது ஜமேக்காவும், அமெரிக்காவும் சம முன்னணியில் இருந்தது. உசைன் போல்ட்டின் வேகமான ஓட்டத்தால் இடைவெளி அதிகமாகி விட்டது. அமெரிக்க அணி 37.04 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கமும், டிரினிடாட் அணி 38.12 வினாடியில் கடந்து வெண்கல பதக்கமும் பெற்றது.

# சாதனையுடன் தங்கம்




# ஆண்கள் கால்பந்து மெக்சிக்கோ தங்கம்



ஆண்கள் கால்பந்துப் போட்டியில் மெக்சிக்கோ அணி தங்கம் வென்றுள்ளது. லண்டன் ஒலிம்பிக் ஆண்களுக்கான கால்பந்து இறுதி ஆட்டத்தில் பிரேசில்-மெக்சிகோ அணிகள் நேற்று மோதின. 5 முறை உலக கிண்ணத்தை வென்றுள்ள பிரேசில் அணி ஒலிம்பிக்கில் மட்டுமே இதுவரை சம்பியன் பட்டம் வென்றதில்லை.. அவர்களின் கனவு இந்த முறையும் பொய்த்து போய் விட்டது.

முதலாவது நிமிடத்திலேயே கோல் போட்ட மெக்சிகோ அணி பிற்பாதியில் 75ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோல் திணித்தது. இரண்டு கோல்களையும் ஓரிபே பெரல்தா அடித்தார். பிரேசில் அணியால் கடைசி நிமிடத்தில் மட்டும் ஒரு கோல் அடிக்க முடிந்தது. முடிவில் 2-1 என்ற கோல் கணக்கில் மெக்சிகோ அணி வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை சொந்தமாக்கியது. பிரேசில் அணி, வெள்ளிப்பதக்கத்துடன் திருப்திப்பட வேண்டியதாயிற்று.

# ஆண்கள் 5000 மீற்றர் பிரிட்டன் வீரர் தங்கம்




(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் பந்தயம் நேற்று நடைபெற்றது. இதில் பிரிட்டன் வீரர் முஹமத் ஃபராக் தங்க பதக்கமும், அவருக்கு அடுத்தபடியாக வந்த எத்தியோப்பியா வீரர் கேப்ரேமெஸ்கெல் வெள்ளிப் பதக்கமும், அதன்பிறகு வந்த கென்ய வீரர் லங்கோஸிவா வெண்கல பதக்கமும் வென்றனர்.

இதேபோல் மகளிர் 5,000 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் எத்தியோப்பிய வீராங்கனை மெசரெட் டெபார் தங்கப் பதக்கம் வென்றார். இறுதிப் போட்டியில் அபாரமாக ஓடிய மெசரெட் 15 நிமிடம் 4.25 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து முதலிடம் பிடித்தார். மெசரெட் 2004 ஏதன்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம், 2008 பெய்ஜிங் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. கென்ய வீராங்கனை விவியன் செருயாட் (15:04.73) வெள்ளிப் பதக்கத்தை தட்டிச் சென்றார். நடப்பு சாம்பியனும் உலக சாதனையாளருமான திருனேஷ் திபாபா (எத்தியோப்பியா, 15:05.15) வெண்கலத்துடன் திருப்தி அடைந்தார்.

அதேபோல் பெண்களுக்கான 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ரஷ்யாவின் மரியா சவினோவா தங்க பதக்கத்தையும், தென்னாபிரிக்காவின் கேஸ்டர் செமன்யா வெள்ளிப் பதக்கத்தையும், ரஷ்யாவின் மற்றொரு வீராங்கனை பாய்ஸ்டகோவா வெண்கல பதக்கத்தையும் வென்றனர்.

# ஹொக்கி ஜேர்மனிக்குத் தங்கம்



(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக்கின் ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் தங்கப்பதக்கத்திற்காக நடைபெற்ற போட்டியில் ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து அணிகள் மோதின.

இதில் ஜேர்மனி 2-1 என்ற புள்ளி கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றது. தோல்வியுற்ற நெதர்லாந்து அணிக்கு வெள்ளிப் பதக்கம் பரிசளிக்கப்பட்டது.

இதே. பிரிவில் வெண்கலப் பதக்கத்திற்காக நடைபெற்ற போட்டியில் அவுஸ்ரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதின. இதில் அவுஸ்ரேலியா 3-1 என்ற கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை கையகப்படுத்தியது.

# தொடரும் ரஷ்யாவின் அசத்தல்



மகளிர் சிங்ரோனைஸ்டு நீச்சல் (இசைக்கேற்ப நடனமாடியபடி நீந்துதல்) குழு பிரிவில் ரஷ்ய அணி தொடர்ந்து 4ஆவது முறையாக தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தது. அந்த அணி மொத்தம் 197.030 புள்ளிகள் குவித்து முதலிடம் பிடித்தது. அந்த அணி டெக்னிகல் ரொட்டீன் முறையில் 49.47 புள்ளியும், பிரீ ரொட்டீன் முறையில் 98.93 புள்ளியும் பெற்றது. சீன அணி வெள்ளிப் பதக்கமும் (194.010), ஸ்பெயின் அணி (193.120) வெண்கலமும் வென்றன.

# தென்கொரிய அணிக்கு விலக்கு அளிப்பு

(லண்டன்)

ஒலிம்பிக் கால்பந்து போட்டியில் வெண்கலம் வென்ற தென்கொரிய வீரர்களுக்கு, கட்டாய ராணுவ சேவையில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

லண்டனில் நடக்கும் ஒலிம்பிக் கால்பந்தில், வெண்கலப்பதக்கத்துக்கான போட்டியில் தென் கொரியா, ஜப்பான் அணிகள் மோதின. இதன் 38ஆவது நிமிடத்தில் தென் கொரியாவின் பார்க் சு-யங், முதல் கோல் அடித்தார். 57ஆவது நிமிடம் கூ ஜா-சியோல் மற்றொரு கோல் அடிக்க, தென்கொரியா அணி 2-0 என வெற்றி பெற்று, ஒலிம்பிக் கால்பந்து வரலாற்றில் முதன் முறையாக பதக்கம் (வெண்கலம்) வென்றது.

தென் கொரியாவில் இளைஞர்கள் ராணுவத்தில் கட்டாயம் 21 முதல் 24 மாதங்கள் வரை சேவை செய்ய வேண்டும் என்ற விதி உள்ளது. தற்போது கால்பந்தில் பதக்கம் வென்றதை அடுத்து, இந்த அணியில் இருந்த 18 வீரர்கள், கட்டாய ராணுவ சேவை செய்யத் தேவையில்லை என்று சலுகை வழங்கப்பட்டுள்ளது.

# அர்ப்பணிப்பு மாறாது

(புதுடில்லி)

பதவியின் மூலம் அணிக்கு அளிக்கும் அர்ப்பணிப்பும், பொறுப்பும் ஒரு போதும் மாறாது. துணை கப்டன்பொறுப்புக்காக நான் அணியில் இல்லை. ஓட்டங்கள் குவிப்பதற்காகவும், இந்திய அணியின் வெற்றிக்காகவும் நான் அணியில் இருக்கிறேன் என கௌதம் கம்பீர் தெரிவித்தார். அணிக்கு தனி வீரராக வெற்றி தேடித்தரக் கூடியவர் யுவராஜ்சிங். அவரை மீண்டும் அணியில் பார்ப்பது சிறப்பான விடயமாகும். இதே போல் ஹர்பஜன்சிங் அணிக்கு திரும்பியிருப்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தோல்விகளிலிருந்து விரைவில் ஆவுஸ். மீண்டெழ வேண்டும்


(சிட்னி)

அவுஸ்ரேலிய அணி கடந்த காலங்களில் கண்ட தோல்விகளிலிருந்து மீண்டு சிறப்பாகச் செயற்பட வேண்டும் என அவுஸ்ரேலிய அணியின் உப தலைவரும், சகலதுறை வீரருமான ஷேன் வட்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத் தோல்விகளை மறந்து எதிர்காலத் தொடர்கள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

இங்கிலாந்தில் பெறப்பட்ட தோல்விகள் ஏமாற்றம் அணிக்கின்றது. அந்தத் தோல்விகளிலிருந்து மீண்டு, மீண்டும் அணியாக இணைந்து சிறப்பாகச் செயற்பட வேண்டிய தேவையுள்ளது எனத் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய அணி அடுத்ததாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் பாகிஸ்தானுக்கெதிரான தொடரில் பங்குபற்றவுள்ளதோடு, அதன் பின்னர் இலங்கையில் இடம்பெறவுள்ள உலக ருவென்ரி-20 தொடரிலும், அதனைத் தொடர்ந்து தென்னாபிரிக்க, இலங்கை, இந்தியாவிற்கெதிரான டெஸ்ட் தொடர்களிலும் பங்குபற்றவுள்ளது.



லண்டன் ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக் சுற்றில் திறமையை வெளிப்படுத்திய பிரிட்டன் வீராங்கனை

# சுசந்திகா போல நாட்டிற்கு புகழ் சேர்ப்பதே இலக்கு

## விசுவமடு வித்தியாலய வீராங்கனை தனுஜா




இலங்கை மெய்வல்லுநர் வரலாற்றில் புரட்சியை விதைத்த சுசந்திக ஜெயசிங்க போன்று திறமைகளை வெளிப்படுத்தி இலங்கை தேசத்திற்கு பெருமை தேடிக் கொடுப்பதே எனது இலட்சியம். அந்த இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் நான் தளராது பயணிப்பேன் என. விசுவமடு வித்தியாலய வீராங்கனை பங்குஜன் தனுஜா தெரிவித்தார்.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.இதில் முன்னணிப் பாடசாலைகள் சாதித்ததை விட அவர்களுக்குப் போட்டியாக வன்னிப் பிரதேச மாணவர்களும் களத்தில் இறங்கி பல சாதனைகளையும் படைத்தனர்.

இதில் முல்லைத்தீவு விசுவமடு வித்தியாலயத்தில் கல்விகற்கும் 15 வயதுப் பிரிவு மாணவி பங்கஜன் தனுஜா குறுந்தூர ஓட்டத்தில் தனது திறமையை வெளிப்படுத்தினார்.

மாகாண மட்டப் போட்டியில் 400 மீற்றரில் முதலாமிடத்தையும், 200 மீற்றரில் 2ஆம் இடத்தையும் 100 மீற்றரில் 3ஆம் இடத்தையும் பெற்றார். 400 மீற்றரில் இருந்த பழைய சாதனையாகிய 1.09.9 செக்கன்களை 1.06.8 செக்கன்களில் ஓடிமுடித்து புதிய சாதனை படைத்து வர்ண விருதினையும் பெற்றார்.

சாதனை வீராங்கனை தனது மனக்கிடக்கையை எமது செய்தியாளருடன் பகிர்ந்து கொண்டவை வருமாறு:

நான் தற்போது தரம் 9இல் கல்விகற்று வருகின்றேன். எனது இலட்சியம் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்பது. எனது கல்விக்கு அதிபர் ஆசிரியர்கள் சக மாணவர்களும் உதவி புரிகின்றனர். நான் பயிற்சி எடுக்கும் காலங்களிலும் போட்டிகளில் பங்குபற்றும் காலங்களிலும் மேலதிக வகுப்புக்களை எடுத்து உதவி புரிகின்றனர்.

அதே போல் விளையாட்டிலும் எமது பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் ராதாகிருஸ்ணன் விளையாட்டு உத்தியோகஸ்த்தர் முகுந்தன் ஆகியோர் எனக்கு உதவுகின்றனர்.

எனது தந்தை வலயக்கல்வி பணிமனையில் சாரதியாக கடமை புரிகின்றார். எனது பெற்றோர் எனது கல்வியிலும் விளையாட்டிலும் மிக அக்கறையுடன் செயற்படுகின்றார்கள்.

சிலர் விளையாட்டில் ஈடுபட்டால் படிப்பில் கவனம் செலுத்த முடியாது எனக் கூறுவார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை விளையாட்டிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றனோ அதேயளவு முக்கியம் கல்வியிலும் காட்டுகின்றேன். அதனால் நான் தற்போது விளையாட்டில் சாதனை படைத்தது போல் கல்வியிலும் எதிர்காலத்தில் சாதனை படைப்பேன்.

எனது ஆசை இலங்கை ஓட்ட வீராங்கனை சுசந்திகா மாதிரி நானும் எனது நாட்டிற்காக தமிழ் வீராங்கனையாக கால்பதிக்க வேண்டும். 2011ம் ஆண்டு நடைபெற்ற மாகாணமட்டத்தில 200மீற்றரில் 3ஆம் இடம் மட்டுமே கிடைத்தது. தேசியமட்டத்தில் பங்குபற்றிய போதும் சாதனை படைக்க முடியவில்லை. நாம் இடம் பெயர்ந்து 2010ம் ஆண்டு தான் மீள்குடியமர்ந்தோம் நாம் பட்ட இன்னல்கள் பல 2011ம் ஆண்டு சாதிக்கக முடியவில்லையே என்கின்ற வெறி எனக்குள் எழுந்தது. எனது பயிற்சியாளர்களின் உதவியுடன் நான் ஆர்வத்துடன் பயிற்சியை மேற்கொண்டேன். இதனால் சாதிக்க முடிந்தது. நான் சாதிப்பதற்கு இன்னும் காலங்கள் உள்ளது தொடர் பயிற்சி இருந்தால் நிச்சயம் சாதிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

இம்முறை எமது பாடசாலையிலிருந்து மாகாண மட்டப் போட்டிக்கு 20பேர் பங்குபற்றினோம். எதிர் வரும் காலங்களில் இதனை நிச்சயமாக அதிகரித்து சாதனை படைப்போம். விளையாட்டினூடாக நாம்சுறுசுறுப்படைவதோடு மூளைக்கலங்களும் விருத்தியடைகின்றது. இதனால் என்னால் நன்றாக படிக்கவும் ஞாபகப்படுத்தவும் முடிகின்றது. மேலும் விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பும் இலகுவில் கிடைக்கும். இதனால் என்னைப் போலவே எனதுதம்பி தங்கையர்களையும் சிறந்த விளையாட்டு வீரர்களாக ஆக்க விரும்புகின்றேன். எனது பாடசாலைக்கும்எனது ஊருக்கும் என்னால் எவ்வளவு பெருமைசேர்க்க முடியுமோ அவ்வளவிற்குப் பாடுபடுவேன். எனது அப்பா அம்மா பள்ளிக்காலத்தில் விளையாட்டில் சாதனைபடைத்துள்ளனர். அவர்களின் ஆர்வத்தினாலும் பயிற்றுவிப்பாளர்களின் உதவியாலும் இம்முறை நடைபெறும் தேசிய மட்டத்தில் சாதனை படைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என்றார். (12)

# முரளி வெற்றிக் கிண்ண கிரிக்கெட் துரித கதியில் ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையே எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வன்னிப் பகுதிகளான கிளிநொச்சி, ஒட்டுசுட்டான், மாங்குளம், வவுனியா பகுதிகளில் ருவென்ரி - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றினை "முரளி" வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் இலங்கை இராணுவத்தின் அனுசரணையுடன் பாரிய அளவில் நடத்தப்படவுள்ளது.

இதற்காக வன்னிப் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட மைதானங்கள் சீரமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

வரும் செம்பம்பர் மாதம் முதல் வாரத்தில் இச்சுற்றுப் போட்டிகள் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இதில் தலா நான்கு போட்டிகள் இடம்பெறவுள்ளன. கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானமும், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானமும், மாங்குளம் மகாவித்தியாலய மைதானமும் மணல் கொட்டப்பட்டு உயர்த்தப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளதுடன் விரைவில் வளரக்கூடிய புற்களும் நடுகை செய்யப்பட்டு நீர் பாசனம் செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் 13 மில்லியன் ரூபா செலவில் 70 அடி அரங்கு ஒன்று ஒரு மாத காலத்தில் நிறுவுதற்கான அடிக்கல் இடப்பட்டு கட்டட வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மைதான சீரமைப்புப் பணியின் ஓர் கட்டமாக துணுக்காய் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் கல்விக் கோட்ட மாணவர்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

இதற்காக முல்லைத்தீவு பாடசாலைகளினை ஒருங்கிணைத்து கிரிக்கெட் போட்டி ஒன்றினை உருவாக்கி அவர்களுக்குரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வன்னிப் பகுதியில் கிரிக்கெட்டினை அறிமுகப்படுத்தி, வளர்க்கும் நோக்கமாகக் கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ருவென்ரி -20 முரளி வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டிக்கு ஒவ்வொரு பகுதிக்கும் உரிய போட்டிகளுக்கும் வெளிநாட்டு நிறுவனங்களும், உள்ளூர் நிறுவனங்களும் அனுசரணை வழங்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (42)

விளையாட்டுச் செய்திகள்

# சென். ஜோன்ஸ் அபார வெற்றி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 83 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒன்று அண்மையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 37.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கருண்ஜன் 20, இமெல்ரன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விஜிந்திரன், வினோஜன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி 31 ஓவர்கள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் திருமால் 12 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் சோமஸ்கரன் மூன்று, மதிவதனன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை, இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டத்திற்கு சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)



கீரிடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. இதில் கீரிடா சக்தியின் யாழ். மாவட்ட நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் நந்தகோபால், தெல்லிப்பளை பிரதேச இளைஞர் சேவை அதிகாரி சபேசன், மற்றும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் கரப்பந்தாட்ட பயிற்றுநர் சி. தயாளபாலன் ஆகியோர் கரப்பந்தாட்டம் தொடர்பான பல செயல்முறை விளங்கங்களை வழங்கினர். (93)

# இலங்கையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமா?



சர்வதேச ரீதியான நிலைமைகளை ஆராய்ந்து வருகையில் இலங்கையின் பாதுகாப்பு நிலவரம் உறுதியாக உள்ளதாக கூறப்படுகின்ற போதிலும் இலங்கையின் உள் விவகாரங்களில் வெளி நாடுகளின் தலையீடு சற்று அதிகரித்தே காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கையின் உள் விவகாரங்களில் ஆரம்ப காலத்தில் இந்தியா மூக்கை நுழைத்த போதிலும் இந்தியாவினுடைய நகர்வுகளுக்கு இலங்கையின் அரசியல் கள நிலைமை ஈடுகொடுக்காததால் இலங்கை இந்திய ஒப்பந்தம் நடைமுறைக்கு வராமல் போயிற்று. இதனால் இந்தியாவின் நேரடியான தலையீடு என்பது தவிர்க்கப்பட்டதென்றே சொல்லலாம்.

குறிப்பாக தமிழர் தரப்பு இறுக்கமான போக்கைக் காட்டியதன் விளைவாக இந்தியாவின் தலையீடு தவிர்க்கப்பட்டதுடன் தமிழர்களுக்கு கிடைக்கவிருந்த தீர்வும் சாத்தியமற்றுப் போனது. ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தம் தள்ளுபடியானது. ஏற்கனவே சட்டரீதியாக இணைந்திருந்த வடக்கு கிழக்கு இணைப்பும் இந் நாட்களில் தனித்தனி மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. அத்துடன் தமிழர்களுடைய ஆயுதப் போராட்டமும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

உண்மையில் தமிழர் தரப்பு தங்களுக்கு கிடைத்திருந்த அரிய சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தியிருந்தால் முள்ளிவாய்க்கால் முடிவுகளும் ஏற்பட்டிருக்காது. தீர்வும் கிடைத்திருக்கும். ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தம் தோல்வியுற்றமையால் தமிழர்களுக்கு தீர்வும் ஏற்படவில்லை இந்தியாவின் நேரடித் தலையீடும் இலங்கையில் இருக்கவில்லை. ராஜீவ்காந்தி படுகொலையின் பின்னர் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இதன் விளைவாக இந்தியாவின் அரசியல் ராஜரீக நகர்வுகளை மேற்கொள்ளும் “றோ” எனப்படுகின்ற புலனாய்வு அமைப்பானது இலங்கையரசுக்கு சார்பான கொள்கைகளை வகுத்து செயற்படத் தொடங்கியது. இதனால் தமிழர்களுக்கு சாதகமான சூழல் அகன்றது.

இந்தியா தென்னாசிய வட்டகைக்குள் தன்னை எப்போதுமே வல்லமையுடன் வைத்துக்கொள்ளவே விரும்புகிறது. அல்லது அவ்வாறு நடந்து கொண்டது. குறிப்பாக சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் இலங்கை உறவாடுவதை எப்போதுமே இந்தியா விரும்புவதில்லை. இதனால் இலங்கை வகுத்துக் கொண்ட வெளியுறவுக் கொள்கையின் வலையில் இந்தியா விரும்பியோ விரும்பாமலோ விழவேண்டிய நிலைமை உருவாகியது, அல்லது உருவாகிறதெனலாம். எனினும் தனது பூகோள அரசியல் நலன்களுக்கு சாதகமான வகையிலேயே இந்தியா இலங்கையுடன் தனது அணுகு முறைகளை வளர்த்து வருகிறது.

முள்ளிவாய்க்கால் முடிவுகளின் பின்னர் அமெரிக்காவின் நகர்வுகள் இலங்கைக்கு பாதகமாக இருந்தாலும் இந்தியாவை மீறி அமெரிக்கா தலையீடு செய்வதென்பது முடியாததொன்றாகும். இலங்கையின் பாதுகாப்பு விடயத்தில் இந்தியா கூடிய கரிசனை காட்டுகின்ற அதே வேளை சீனா, மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் இலங்கை பாதுகாப்பு தொடர்பில் ஒப்பந்தங்களைச் செய்வதையோ அல்லது இராணுவ ரீதியான உதவிகளைப் பெறுவதையோ இந்தியா விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்று திரளுவார்கள் என்ற அச்சத்தை ஒரு சில பாதுகாப்பு ஆய்வாளர்கள் வெளியிடுகின்ற போதிலும் அதற்குரிய வாய்ப்போ அல்லது சூழ்நிலையோ இல்லையென அமெரிக்காவும், இந்தியாவும் இலங்கையிடம் அடித்துக் கூறியுள்ளன. எனினும் இலங்கையின் பாதுகாப்பு நிலவரம் தொடர்பில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு இறுக்கமான நடைமுறைகளை பின். பற்றுவதனூடாக பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது.

தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடந்த இலங்கையின் பாதுகாப்பு கருத்தரங்கில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் தூதுவர்கள், இராணுவ ஜெனரல்கள் கலந்து கொண்டனர். அங்கு முன்னாள் இந்திய இராணுவ ஜெனரல் அசோக் மேத்தாவின் கருத்துரையானது அங்கிருந்த பாதுகாப்பு ஆய்வாளர்களை சிந்திக்கத் தூண்டியதாக இருந்தது.


சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அடையாளம் காணப்பட்டிருக்கும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யவேண்டும். போருக்குப் பின்னர் வடக்கில் நிலைகொண்டுள்ள படையினர் தொடர்பாக இந்தியாவுக்கு கிடைத்துள்ள தகவல்களுக்கும் அரசின் தகவல்களுக்குமிடையில் வேறுபாடு காணப்படுவதாகவும் வடக்கில் படைக்குறைப்பு தொடர்பில் அளிக்கப்பட்ட தகவல்களில் குழப்பமுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். அத்துடன் அரசினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள 383 விடுதலைப் புலிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விட்டிருந்தார். கருத்தரங்கில் பதிலுரையாற்றிய பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, ஆயுதப் படைகளின் முதன்மையான கடமை நாட்டைப் பாதுகாப்பதாகும். நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் சக்திகள் மீள ஒருங்கிணைவதை ஆயுதப்படைகள் தடுக்கவேண்டியுள்ளது. புலம்பெயர்ந்துள்ள விடுதலைப்புலிகள் ஆதரவுத் தமிழர்களும் இலங்கையின் எதிர்ப்பு சக்திகளும்தான் இந்தியாவுக்கு தவறான தகவல்களை வழங்கி வருகின்றனர். போருக்குப் பிந்திய சூழலில் அரசாங்கம் பல சவால்களைச் சந்திக்கிறது. உலகத்தில் இன்று அமைதியும் ஸ்திர நிலையில் உள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். மூன்று வருடங்கள் என்ற குறுகிய கால எல்லைக்குள் இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டதென்பதையே இந்தக் கருத்தரங்கில் நாம் பகிர்ந்து கொள்கிறோம். 5000சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகழ்வை மேற்கொள்ள வேண்டியிருந்தது. புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் புனர்நிர்மாண நடவடிக்கைகளை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டியிருந்தது. உள்நாட்டில் இடம் பெயர்ந்த சுமார் 3 இலட்சம் பொது மக்களை மீள் குடியேற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருந்தது.

இறுதி யுத்தத்தை அடுத்து அரசாங்கத்திடம் சரணடைந்த 12 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்க வேண்டிய கடமை அரசை சார்ந்திருந்தது. நாடு முழுவதும் நியாயத்தை ஏற்படுத்த வேண்டி இருந்தது. தேசிய நல்லிணக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. மேற்குறிப்பிட்ட சகல செயற்பாடுகளையும் 3வருட குறுகிய காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க வகையில் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பாதுகாப்புச் செயலர் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை ஐ.நா மனித உரிமை பேரவையின் நெருக்குதல்களையும் இலங்கை சமாளித்துக்கொண்டு எதிர்காலத்தில் தனது பாதுகாப்பு வியூகங்களை வகுக்கும் அணுகுமுறையிலேயே இலங்கையின் எதிர்காலம் மற்றும் அதன் பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படும்.

- த. கடலவன் -

# பறக்கும் குதிரை!



அரசன் செம்பொன் சீராளன் தனது ஆளுகைக்குட்பட்ட பகுதியில் நெல் வயலில் மாடுகள் புகுந்து விளைந்த கதிர்களைத் தின்று நாசமாகிக்கியதை அறிந்து கடும் கோபம் அடைந்தான். மாட்டுக்குச் சொந்தக்காரனை அரண்மனைக்கு, பிடித்து இழுத்து வர உத்தரவிட்டான். அவனுக்கு மரண தண்டனை விதித்தான்.

மாட்டுக்குச் சொந்தக்காரனோ, “அரசே... எனக்கு ஓர் ஆண்டு காலம் அவகாசம் கொடுங்கள். நான் உங்கள் அரண்மனைக் குதிரையைப் பறக்க வைத்துக் காட்டுகிறேன். அதன் பின் எனக்கு மரண தண்டனை கொடுங்கள்” என்றான்.

அரசனுக்கு அவன் சொல்லியதில் நம்பிக்கை ஏற்படவில்லை. என்றாலும் குதிரையை ஒருவேளை இவன் பறக்க வைத்துவிட்டால்.... எங்கு போனாலும் பறந்து செல்லலாமே? என்ற ஆசையில் அதற்கு ஒத்துக் கொண்டான். “குதிரை பறக்காவிட்டால் உன் தலையை யானையை மிதிக்கச் செய்து உன்னைச் சாகடிப்பேன்” என்றும் பயமுறுத்தினான்.

வீட்டுக்கு வந்தான் மாட்டுக்குச் சொந்தக்காரன். நடந்ததை மனைவியிடம் சொன்னான். “உங்களால் ஒரு வருடத்தில் குதிரையைப் பறக்க வைக்க முடியுமா?” என்று கேட்டாள் மனைவி.

“அட நீ வேற... இன்னும் முழுதாய் ஓர் ஆண்டு இருக்கிறது. அதற்குள் அரசன் இறந்துவிடலாம். அல்லது குதிரை இறந்துவிடலாம். அதிசயம் நிகழ்ந்ததைப் போல் குதிரை திடீரெனப் பறந்தாலும் பறக்கலாம்” என்றான் அவன் சிரித்துக் கொண்டே.

# மருந்துகளிலும் மோசடி!

- என்.சிவகுரு -

மருந்து விற்பனை என்பது இன்று வேகமாக இலாபம் ஈட்டும் தொழிலாக மாறியுள்ளதை உலகமய சூழலில் நாம் காண்கிறோம். பெரும் நிறுவனங்கள் தங்கள் வர்த்தகத்தை அதிகப்படுத்திட, இத்துறையில் கால் பதிக்கத் தொடங்கியுள்ளன. சேவை என்பது முற்றிலும் இல்லாமல் போய், இலாபம்... இலாபம்... கூடுதல் லாபம் எனும் தாரக மந்திரத்தை பின்புலமாய் கொண்டு இத்துறையில் உள்ளவர்கள் செயலாற்றி வருகின்றனர். ஒரு மருந்து சில குறிப்பிட்ட நோய்களுக்கு மட்டுமே கொடுக்கப்படாமல், அதன் விரிவான பயன்பாட்டின் காரணமாக வேறு சில நோய்களுக்கும் கொடுக்கப்படும் வாய்ப்புள்ளது. சமீப காலமாக உலக அளவில் புதிய மருந்து கண்டுபிடிப்பில் தேக்கமும் வறட்சியும் ஏற்பட்டுள்ளது. ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஆகும் பெரும் செலவே இதற்கு முக்கிய காரணமாகும். ஏற்கனவே மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இதற்கு கூடுதல் காரணமாகவும் அமைந்துள்ளது.

இந்தப் பின்னணியில் லண்டனை தலைமையிடமாக கொண்டு வர்த்தகம் செய்யும் கிளாக்சோ ஸ்மித்



கிளைன் எனும் நிறுவனம் தான் தயாரித்து விற்பனைக்கு வந்துள்ள, சில நோய்களுக்கு மட்டுமே பயன்படுத்திட வேண்டிய சில மருந்துகளை விதிகளை மீறி மற்ற நோய்களுக்கும் விற்பனை செய்தது இப்போது உலகுக்கு தெரியவந்துள்ளது.

மன நோய்க்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டிய ஒரு மருந்தின் பக்க விளைவான, இளம் வயதினருக்கு தற்கொலை உணர்வை தூண்டும் எனும் தகவலை தனக்கு சாதகமாக இந்நிறுவனம் மறைத்துள்ளது. பாக்சில் எனும் வர்த்தகப் பெயரில் வந்துள்ள இம் மருந்துகளின் தன்மைகள் மறைக்கப்பட்டுள்ளது. இளம் வயதினருக்கு - குழந்தைகளுக்கு இம்மருந்து கொடுக்கப்படலாம் என்பதற்கு சாதகமாக சில மருத்துவ அறிக்கைகளை பிரபலமான மருத்துவ புத்தகங்கள் மூலம் வெளியிட்டுள்ளது.

இதே கிளாக்சோ நிறுவனத்தின் மற்றொரு தயாரிப்பான வெல்பர்டின் மனநோய் சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட வேண்டிய மருந்தாகும். ஆனால் இம்மருந்தை உடல் எடை குறைப்பிற்கும், பாலியல் பிரச்சினைகளுக்கும் இந்நிறுவனம் பரிந்துரைத்தது. இதற்கு ஆதாரமாக தங்கள் நிறுவனமே பரிசோதனைகள் செய்ததாக அறிக் கைகளை வெளியிட்டது. இப்போது அவ்வறிக்கைகள் அனைத்தும் தவறானது, முறையற்றது எனவும், அந்த அறிக்கைகள் வெளியிடப்பட ஆராய்ச்சியாளர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளாக்சோ நிறுவனத்தின் இந்த தவறான வழிகாட்டுதல்களை மிகப் பெரிய குற்றம் என்று இங்கிலாந்தின் கட்டுப்பாடு அதிகாரிகள் சொல்லியுள்ளனர். இப்படி ஏதோ ஒரு நிறுவனம் தான் தவறு செய்கின்றது என்பது மட்டுமல்ல. பன்னாட்டு நிறுவனங்களின் இலாப வெறி ஓட்டத்தில் இது ஒரு சிறு புள்ளியே!

அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு செயல்படும் அபோட் எனும் நிறுவனம் நரம் புத் தளர்ச்சி மற்றும் மன உளைச்சலை கட்டுப்படுத்தும் மருந்தான டெபாகோட் வேறு சில பிரச்சினைகளுக்கும் எழுதப்படலாம் எனும் தவறான தகவல் கொடுத்ததற்காக ஆறு மாதம் முன்பு 1.6 பில்லியன் டொலர் நஷ்ட ஈடாக கொடுக்க வேண்டும் என்று அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதே போல் ஜோன்சன் சூ ஜோன்சன் நிறுவனம் தயாரித்துள்ள ஒரு மருந்தை விற்பனை செய்ய மட்டுமே உரிமை பெற்ற அபோட் நிறுவனம் தவறான தகவல்களை அளித்தது கண்டுபிடிக்கப்பட்டு, 2 பில்லியன் டொலர் அபராதத் தொகையாக செலுத்த வேண்டும் என தீர்ப்பு வந்துள்ளது. இந்த அபராதத் தொகைகளை கட்டாமல், தட்டிக்கழித்து விடலாம் எனும் எண்ணத்தில், நிறுவனம் வழங்கிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என மருத்துவர்கள் மூலம் சொல்ல வைத்தது. அதுவும் முற்றிலும் தவறு என தெரியவந்தது.

இன்று தடுப்பூசிகள் வர்த்தகத்தில் சுமார் 70 சதவீதத்திற்கு மேலான சந்தையை தன்னுடைய ஆதிக்கத்திற்குள் வைத்திருக்கிறது கிளாக்சோ நிறுவனம்.

# சினிமா சினிமா



"இதயம்", "காதல் தேசம்", "காதலர் தினம்" உள்ளிட்ட மியூசிக்கல் ஹிட் படங்களைக் கொடுத்த இயக்குநர் கதிர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு "கோடை விடுமுறை" என்ற படத்தை இயக்குகிறார். ஷாம் கதாநாயகனாக நடிக்கும் இந்தப் படத்துக்காக இளமை துள்ளும் பாடல்களை எழுதியிருக்கிறார் வாலி. புதியவர் பிரசன்னா இசையமைக்கிறார்.

நடிகர் விமல், இயக்குனர் சற்குணம் இருவரும், சினிமாவில் ஜெயிப்பதற்கு முன்பே, ஒரே அறையில் தங்கியிருந்த நண்பர்கள். அந்த நட்பு அடிப்படையில், விமலை வைத்து, "களவாணி" மற்றும், "வாகை சூடவா" படங்களை இயக்கிய சற்குணம், அடுத்தபடியாக, "மஞ்ச பை" என்றொரு படம் இயக்குகிறார். தற்சமயம், தனுஷ் நடிக்கும் படத்தை முடித்ததும், இப்பட வேலைகளை துவங்குகிறார்.

விஜய் இயக்கும் "தாண்டவம்" படத்தில் விக்ரம் "றோ" உளவுப்பிரிவு அதிகாரியாக நடித்துள்ளார். பார்வையற்றவராக வரும் விக்ரம் மாற்றுத்திறனோடு சண்டைக் காட்சிகளிலும் நடித்துள்ளார். இதற்காக, எதிரொலி மூலம் சுற்றுப்புறத்தை உணரும் ஆற்றல் கொண்டவரும் பார்வையுடையவர்களே செய்யத் தயங்கக்கூடிய பல அரிய சாதனைகளை உலக அளவில் நிகழ்த்தியவருமான அமெரிக்காவைச் சேர்ந்த டானியல் க்ரூஸ் என்ற மாற்றுத்திறனாளியிடம் ஒரு மாதம் பயிற்சி எடுத்துள்ளார் விக்ரம். படத்தின் நாயகி அனுஷ்காவுக்கு வித்தியாசமான வேடம். படத்தில் விக்ரமுக்கு சமமாக சண்டைக்காட்சிகளில் அசத்தியுள்ளவர் "மதராசப்பட்டணம்" எமி ஜாக்சன்.

ரையுலகில் அறிமுகமானது முதல் திருமணமானது வரை முன்னணி நடிகையாகவே கோலோச்சிய அமலா, இருபது வருடங்களுக்குப் பிறகு தெலுங்குப் படமொன்றில் மீண்டும் நடிக்கிறார். "மகன் அகில் வளரும் வரை நடிக்கக்கூடாது என்று முடிவெடுத்தேன் இப்போது அவன், தன்னைத்தானே கவனித்துக்கொள்ளும் அளவுக்கு நன்கு வளர்ந்துவிட்டான். அதனால் மீண்டும் நடிக்கிறேன்" என்று கூறியிருக்கிறார் அமலா. இந்தப் படத்தின் பாடல் வெளியீட்டில் பேசிய அமலாவின் கணவரும் நடிகருமான நாகார்ஜுன் "அமலா மீண்டும் நடிப்பதில் மிகவும் சந்தோஷம். ஆனால் இந்தப் படத்தில் அம்மா வேடத்தில் நடிக்கிறார் என்பது எனக்கு தாமதமாகத்தான் தெரியும். முன்பே தெரிந்திருந்தால் நடிக்க அனுமதித்திருக்க மாட்டேன். அம்மா வேடத்தில் நடிக்கும் அளவுக்கு அமலாவுக்கு இன்னும் வயதாகிவிடவில்லை. படத்தின் காட்சிகளைப் பார்க்கும்போதே இதைப் புரிந்துகொள்ளலாம்" என பேச, அரங்கில் எழுந்த கரவொலியால் அமலாவின் முகம் சிவந்தது.



# இதுவும் ஒரு நாள் போய்விடும்



கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஒரு இளைஞன் வெளிநாடுகளில் சென்று பணம் சம்பாதிப்பதற்காக வீட்டை விட்டுக் கிளம்பினான்.

அவன் வெளியில் செல்லும் போது, அவனுடைய தந்தை அவனுக்கு ஒரு மோதிரத்தைப் பரிசளித்து ஆசீர்வதித்தார்.

அவனும் தந்தை கொடுத்த மோதிரத்தை அணிந்து கொண்டு புறப்பட்டான்.

வெளிநாடுகளுக்குச் சென்ற அவன் குறு-கிய காலத்தில் மிகப்பெரிய பணக்காரனாகி விட்டான்.

பணக்காரனாகி விட்ட அவனை ஒரு பெரிய பணக்காரப் பெண்மணி மணக்க முன் வந்தாள்.

அவனுடைய திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்த நாளில் அவனது கப்பல்கள் கடலில் மூழ்கிப் போய்விட்டதாக செய்தி கிடைத்தது. அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாத அவன் தன் வாழ்வையே முடித்துக் கொள்ளலாம் என்று நினைத்தான்.

மனமுடைந்து போயிருந்த நேரத்தில் அவனுக்கு அவனுடைய தந்தையின் ஞாபகமும், அவர் பரிசளித்த மோதிரம் குறித்த நினைவும் ஞாபகமும் வந்தது.


அவன் தன் கை விரலில் அணிந்திருந்த மோதிரத்தைப் பார்த்தபடி கழற்றினான். அப்போதுதான் அந்த மோதிரத்தின் உள் பகுதியில் சில எழுத்துக்கள் பதிக்கப்பட்டிருப்பதைக் கவனித்தான்.

அந்த எழுத்துக்களைக் கூர்ந்து படித்தான். அதில், "இதுவும் ஒரு நாள் போய்விடும்" என்றிருந்தது.

அவ்வாசகம்தான் அவனுக்குத் தந்த அறிவுரை அது.

ஆமாம். இந்த உலகத்தில் எல்லாம் ஒருநாள் போய்விடும். எதுவும் நிலையில்லாதது. நமக்கு வரும் துன்பங்களும்தான்.

# போன் நாய்க்குட்டி!



ஸ்மார்ட் பெட் என்ற அடையாளத்தோடு ஜப்பானில் அறிமுகமாகியுள்ளது இயந்திர நாய் பொம்மை. பிரபல பொம்மை தயாரிப்பு நிறுவனமான பாண்டாய் உருவாக்கியுள்ள இந்த நாய் பொம்மையில், நாயின் முகத்துக்குப் பதிலாக அப்பிள் ஐபோன் வைக்கப்பட்டுள்ளது. இந்த நாயை குரைக்க வைக்கலாம், ஓட வைக்கலாம், அழச் செய்யலாம். ஐபோனின் திரையில் ஒளிரும் ஐகொன்களை இயக்கி, கட்டளைகளைப் பிறப்பித்தால் போதும். டோக்கியோவில் நடைபெற்ற சர்வதேச பொம்மைக் கண்காட்சியில் புதுமையான பொம்மை என்ற விருதைப் பெற்றிருக்கிறது இந்த போன் நாய்க்குட்டி.

# சந்திரனில் நட்ட கொடி என்ன ஆச்சு?

**– என்.ராமதுரை –**



சந்திரனுக்கு 1969 முதல் 1972 வரை ஆறு தடவை சென்ற அமெரிக்க விண்வெளி வீரர்கள் ஆறு தடவையும் அங்கு நட்டு வந்த அமெரிக்க தேசியக் கொடிகள் 40 ஆண்டுகள் ஆகியும் அப்படியே தான் இருக்கின்றன. சந்திரனை இப்போது சுற்றிக் கொண்டிருக்கும் அமெரிக்க விண்கலம் வானிலிருந்து எடுத்த படங்கள் இதைக் காட்டுகின்றன.

அமெரிக்கா 2009 ஆம் ஆண்டில் LRO எனப்படும் ஆளில்லா விண்கலம் ஒன்றை சந்திரனுக்கு அனுப்பியது. சந்திரனின் நிலப் பரப்பை விரிவாகவும் மேலும் துல்லியமாகவும் படம் எடுத்து, மீண்டும் அமெரிக்க விண்வெளி வீரர்களை அனுப்புவதென்றால் அதற்கான உகந்த இடங்களைத் தேர்வு செய்வது இந்த விண்கலத்தின் நோக்கமாகும்.

இந்த விண்கலம் சந்திரனில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் நாட்டிய கொடிகளின் நிழல்களைப் படம் எடுத்து அனுப்பியுள்ளது. 1969 ஜூலையில் அப்போலோ 11 விண்கலம் மூலம் சென்று முதன் முதலில் சந்திரனில் காலடி வைத்த ஆம்ஸ்ட்ரோங் மற்றும் அல்ட்ரின் நாட்டிய கொடியின் நிழல் மட்டும் காணப்படவில்லை.

இந்த இருவரும் சந்திரனில் பணியை முடித்துக் கொண்டு உயரே கிளம்புகையில் அவர்கள் அமர்ந்திருந்த விண்கலம் நெருப்பைத் தள்ளிய போது அந்த வேகத்தில் கொடி சாய்ந்து விட்டது என்று அப்போதே அல்ட்ரின் கூறியிருந்தார்.


அமெரிக்காவின் LRO விண்கலம் எடுத்த படங்கள் அப்போலோ 11 விண்வெளி வீரர்கள் நாட்டிய கொடி நீங்கலாக மற்ற ஐந்து குழுவினரும் நாட்டிய கொடிகள் நிலையாக நிற்கின்றன என்பதைக் காட்டுகின்றன.

சந்திரனுக்கு அமெரிக்க விண்வெளி வீரர்கள் எடுத்துச் சென்ற கொடிகளில் விசேஷ ஏற்பாடு பின்பற்றப்பட்டது. சந்திரனில் காற்று கிடையாது என்பதால் அது அசைந்தாடி "பட்டொளி" வீச வழியில்லை. எனவே கொடியின் மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் கம்பி பொருத்தப்பட்டது. கொடி தொங்கி விடக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு.

சந்திரனில் காற்று கிடையாது. மழை கிடையாது. நுண்ணுயிர்களும் கிடையாது. பூமியிலோ ஒரு குப்பை மேட்டில் சாக்கு எறியப்பட்டால் சில மாதங்களில் அது நைந்து போய் விடும். நுண்ணுயிர்கள் அதை சிதைத்து துண்டு துண்டாக்கி விடும். பின்னர் பார்த்தால் சாக்கு மண்ணோடு மணணாகி இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

பூமியுடன் ஒப்பிட்டால் சூரியனிலிருந்து வரும் ஆபத்தான புற ஊதாக் கதிர்கள் சந்திரனைக் கடுமையாகத் தாக்குகின்றன. பூமியின் காற்று மண்டலம் சூரியனின் ஆபத்தான புற ஊதாக் கதிர்கள் தரைக்கு வந்து சேராதபடி தடுத்து விடுகின்றன.

ஆகவே விண்வெளி வீரர்கள் நட்ட கொடிகள் எவ்விதம் புற ஊதாக் கதிர்களையும் சந்திரனில் வீசும் கடும் வெயிலையும் தாங்கி நிற்கின்றன என்பது புதிராக உள்ளது என்கின்றனர் விஞ்ஞானிகள்.



சந்திரனில் முதன் முதலில் காலடி வைத்த ஆம்ஸ்ட்ரோங்கும் அல்ட்ரினும் அங்கு அமெரிக்க தேசியக் கொடியை நாட்டியதில் ஒரு சுவையான விஷயம் உள்ளது. இவர்கள் எடுத்துச் செல்வதற்காக நாஸா அமைப்பைச் சேர்ந்த ஒரு குழு இக்கொடியை வடிவமைத்து தயார் செய்தது. இந்த விஷயம் வெளியே தெரியாதபடி பார்த்துக் கொள்ளும்படி கூறப்பட்டது.

காரணம், சந்திரன் மீது எந்த நாடும் உரிமை கோரக்கூடாது என்று சர்வதேச சட்டம் ஒன்று உள்ளது. ஆகவே சந்திரனில் அமெரிக்க தேசியக் கொடியை நாட்டக்கூடாது என உலக நாடுகளிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பலாம் என்று அஞ்சப்பட்டது. ஆனால் நல்ல வேளையாக சந்திரனுக்கு ஆறு தடவை சென்ற குழுவினர் ஒவ்வொரு தடவையும் அமெரிக்கக் கொடியை சந்திரனில் நாட்டியதற்கு பெரிதாக எதிர்ப்பு எதுவும் கிளம்பவில்லை.

மனித குலத்தின் சார்பாகவே இவ்விதம் அமெரிக்கக் கொடி நடப்பட்டதாக அமெரிக்கா விளக்கம் கூறியது. அப்படியானால் மனித குலத்தின் அடையாள-மாக ஐ.நா கொடியை அல்லவா சந்திரனில் நாட்டியிருக்க வேண்டும் என்று பின்னர் ஒரு சமயம் கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால் அக்கேள்விக்கு அமெரிக்கத் தரப்பி லிருந்து எந்த பதிலும் வரவில்லை.

கிர்கிஸ்தானியக் கதை

# மிகவும் பெரியது எது?

**நீண்ட** நெடுங்காலத்திற்கு முன்னர் ஒரு கிராமத்தில் மூன்று சகோதரர்கள் வசித்தனர். அவர்களுக்கு ஒரே ஒரு எருது மட்டும் இருந்தது.

ஒரு சமயம் அவர்கள் பிரிந்து வாழத் தீர்மானித்தனர். இருக்கும் ஒரு எருதுவை அம்மூவரிடையே பிரிப்பது எப்படி? முதலில் அதனை விற்றுவிட எண்ணினர். ஆனால் வாங்குவார் யாருமில்லை. பின்னர் அதனைக் கொன்று அதன இறைச்சியைப் பங்கு போட்டுக் கொள்வது பற்றி யோசித்தனர். ஆனால் அவர்கள் அவ்வெருதினை நேசித்ததால் அவ்வாறு செய்யவில்லை.

எனவே இவ்விவகாரத்தை தீர்க்கும் பொருட்டு அறிஞர் ஒருவரை நாடுவது என்று முடிவெடுத்தனர்.

அவ்வறிஞர் சொல்கிறபடி செய்து கொள்வோம என்று தீர்மானித்து அறிஞர் இருக்கின்ற கிராமத்திற்கு தங்களின் எருதுடன் புறப்பட்டனர். மூத்தவன் எருதுவின் தலையை ஒட்டியும், நடுச் சகோதரன் பக்கவாட்டிலும் இளையவன் பின்புறமாகவும் எருதைச் செலுத்தினர்.

விடியலின்போது, குதிரையில் செல்பவன் ஒருவன் அவர்களை முந்தினான். எருதின்பின் செல்லும் இளையவனிடம் எங்கே ஓட்டிக் கொண்டு போகிறாய் என்று வினவினான். இளையவன் விபரத்தையெல்லாம் எடுத்துரைத்தான். எங்கள் விவகாரத்தை தீர்த்து வைக்கப்போகும் அறிஞரிடம் இவ்வெருதை இட்டுச் செல்கிறோம். குதிரையில் போவோனிடம் விடைபெறுகையில் இவ்வாறு குறிப்பிட்டான்.

என் நடு அண்ணனை சீக்கிரமே முந்திவிடுவாய் அவன் எருதின் பக்கவாட்டில் போய்க் கொண்டிருக்கிறான் அவனிடம் எனது அன்பைத் தெரிவித்து விரைந்தோட்டுமாறு கூறு, இருட்டுவதற்குள் அறிஞரின் கிராமத்திற்குப்போக விரும்புகிறோம்.

நல்லது என்றபடி குதிரைவீரன் விரைந்தான்.

எருதின் பக்கவாட்டில் சென்று கொண்டிருந்த நடுச்சகோதரனைப் பகலில் எட்டிப் பிடித்தான்.

'உனது தம்பி உன்னிடம் தனது அன்பை தெரிவிக்கச் சொன்னான். அத்துடன், இருட்டும் முன்பு அறிஞரின் கிராமத்திற்குப் போக வேண்டும் என்பதால் எருதை விரைந்து ஓட்டுமாறு வற்புறுத்தினான்." என்றான்.

நடுச் சகோதரன் அவனுக்கு நன்றி செலுத்தினான்.

'எருதின் தலைப்பாகத்தை நீ அடையும் போது என் அண்ணனிடம் எனது அன்பைத் தெரிவித்துவிடு. மிக விரைவில் அறிஞரின் கிராமத் துக்குப் போக விரும்புவதால் அவ னிடமும் எருதை விரைவாக செலுத்துமாறு கூறு." என்றான்.

குதிரை வீரன் தலைப்பாகத்தை அடைவதற்கு மாலைப்பொழுதாகி விட்டது. மூத்தவனிடம் நடுச் சகோதரன் கூறியதையெல்லாம் தெரிவித்தான்.

'நான் செய்வதற்கு ஒன்றுமில்லை. ஏற்கனவே அந்தியாகிவிட்டது. இரவுப் பொழுதை சாலையோரமாகவே கழிக்க வேண்டும்" என்று கூறிய மூத்தவன் நடையைத் தளர்த்தினான்.

ஆனால் குதிரைவீரன் நில்லாது போய்க்கொண்டிருந்தான்.

மூன்று சகோதரர்களும் புல்வெளியில் இரவுப் பொழுதை கழித்துவிட்டு, பொழுது புலர்ந்ததும் எருதுடன் புறப்பட்டனர். திடீரென பயங்கரமான சம்பவம் ஒன்று நிகழ்ந்து விட்டது. வானிலிருந்து இறங்கிய இராட்சத கழுகு ஒன்று, தன் விரல் நகங்களால் எருதைக் கவ்விக் கொண்டு பறந்து போய் விட்டது.

சிறிது நேரம் அழுது தேம்பிய சகோதரர்கள் வெறுங்கையுடன் திரும்பினர்.

வானில் பறந்து கொண்டிருந்த கழுகு, ஆட்டு மந்தை ஒன்று கீழே மேய்ந்து கொண்டிருப்பதையும் அதில் ஓர் வெள்ளாட்டிற்கு மிகப்பெரிய கொம்புகள் இருப்பதையும் கண்டது. அந்த வெள்ளாட்டின் கொம்புகளில் அமர்ந்து கொண்டு எருதைக் குத்திக்கிளறி, நாலாபுறமும் எலும்புகளை விட்டெறிந்தது.

திடீரென மழை பெய்யத் தொடங்கியதும் ஆடு மேய்ப்பவனும் ஆட்டுமந்தையும் அப்பெரிய வெள் ளாட்டின் தாடி நிழலில் ஒண்டிக் கொண்டனர்.

அப்போது ஆடு மேய்ப்பவன் தன் இடக்கண்ணில் வலி உண்டாவதை உணர்ந்தான். என் கண்ணில் தூசு விழுந்திருக்க வேண்டும், என்று எண்ணினான்.

மாலையில் தன் கிராமத்தை நோக்கி ஆடுகளை ஓட்டிச்செல்லும் போது வலி அதிகரிப்பதை உணர்ந்தான்.

'நாற்பது மருத்துவர்களைக் கூட்டி வாருங்கள். அவர்கள் என் விழியில் நீந்திச் சென்று தூசிகளைக் கண்டுபிடிக்கட்டும். அத்தூசு என்னை கணமேனும் நிம்மதியாயிருக்க விடவில்லை", என்று கூச்சலிட்டான்.

கிராமத்தினர் போய் நாற்பது மருத்துவர்களை அழைத்து வந்தனர். படகுகளில் ஏறி ஆடு மேய்ப்பவனின் விழியில் நீந்திச்சென்ற தூசினை எடுத்து அவன் வேதனைக்கு முடிவு காணுங்கள். கண்ணுக்கு குந்தகம் வராதபடி பார்த்துக் கொள்வது முக்கியம் என்றனர்.

படகுகளில் ஏறி விழியில் நீந்திய மருத்துவர்கள் கண்ணில் விழுந்தது தூசு அல்ல, மாறாக எருதின் எலும்பு என்றும் மழையின் போது வெள்ளாட்டின் தாடி நிழலில் ஒதுங்கியபோது விழுந்திருக்க வேண்டும் என்றும் கண்டறிந்தனர்.

அதன்பின் ஆடுமேய்ப்போனின் விழியில் வலியில்லை. மருத்துவர்கள் தம் இல்லத்திற்கு திரும்பினர். அவ்வெலும்பினைக் கிராமத்திற்கு அப்பால் சென்று எறிந்து விடுமாறு செய்தனர்.

அவ்வெலும்பு விழுந்த இடத்திற்கு இரவுப் பொழுதில் வந்து சேர்ந்த நாடோடிகள் சிலர் அங்கே தங்குவதென தீர்மானித்து கணப்பு மூட்டினர்.

இரவுப் பொழுதை கழித்திட இப்புதர் மிக்வும் பாதுகாப்பானது என்று கூறிக்கொண்டனர்.

ஆனால் அவர்கள் ஓய்வெடுத்து தூங்கப்போகும் சமயத்தில் அவர்களுக்கு கீழே உள்ள பூமி நடுங்கிக் குலுங்கியது.

திகைப்புற்ற நாடோடிகள் தமது பொருட்களை வண்டியில் அள்ளிப் போட்டுக்கொண்டு அவசர கதியில் வெளியேறினர்.

மூன்று சகோதரர்களும் புல்வெளியில் இரவுப் பொழுதை கழித்துவிட்டு, பொழுது புலர்ந்ததும் எருதுடன் புறப்பட்டனர். திடீரென பயங்கரமான சம்பவம் ஒன்று நிகழ்ந்து விட்டது. வானிலிருந்து இறங்கிய ராட்சத கழுகு ஒன்று, தன் விரல் நகங்களால் எருதைக் கவ்விக் கொண்டு பறந்து போய் விட்டது.

பொழுது புலர்ந்த பிற்பாடே தமது பீதியிலிருந்து விடுபட்டனர். தங்களது முகாமை நிறுவிக் கொண்டு, தாங்களிருந்த இடத்தில் நிலநடுக்கம் ஏற்படக் காரணமாயிருந்தது எது என்று கண்டறிந்து கொள்ளும்பொருட்டு நாற்பது குதிரை வீரர்களை அனுப்பினர்.

விரைந்துசென்று அவ்விடத்தை அடைந்த குதிரை வீரர்கள், புதர் என நாடோடிகள் எண்ணியது எருதின் எலும்பாக இருந்தகை கண்டு கொண்டனர். அப்போது அதனை ஒரு நரி கடித்துக் கொண்டிருப்பதையும் பார்த்தனர்.

ஆகவே, நிலநடுக்கத்திற்குக் காரணம் இதுவே, என்று கூச்சலிட்டனர் குதிரைவீரர். நரியை குறி பார்த்து அம்புகளால் வீழ்த்தினர்.

அதன் தோலை உரிக்கத் தொடங்கினர் ஒருபக்கத்தில் மட்டுமே அதன் தோலை அவர்களால் உரிக்க முடிந்தது. சிரமமாயிருந்ததால் மறுபுறத் தோலை உரிப்பது அவர்களால் கூடவில்லை.


முகாம் திரும்பி விபரத்தையெல்லாம் தெரிவித்தனர்.

அப்போது யுவதி ஒருத்தி அவர்களிடம் வந்தாள். உங்கள் குதிரைவீரர் கொண்டு வந்திருக்கும் நரித தோலை தயவுசெய்து எனக்குத் தாருங்கள். என் குழந்தைக்கு தொப்பி செய்யப்போகிறேன் என்றாள்.

தோலை அவளிடம் கொடுத்தனர். குழந்தையின் தலையை அளந்துகொண்டு, தொப்பி செய்வதற்கென தோலை அளந்து வெட்டத் தொடங்கினாள். பாதித் தொப்பிக்கே அது போதுமானது என்பதை கண்டுகொண்ட அவள் மீண்டும் அந் நாடோடிகளிடம் சென்று மறுபாதித் தோலை வேண்டினாள்.

நாற்பது குதிரை வீரர்களிடம் இது பற்றி கேட்டபேது தங்களால் இயலாதுபோனதை தெரிவித்தனர்.

பாதித்தோல் தொப்பி செய்யப் போதுமானது



இல்லையெனில் நீயே சென்று மறுபாதியையும் உரித்துக் கொண்டு வா, என்றனர் நாடோடிகள்.

குழந்தையுடன் நரி கிடந்த இடத்திற்கு சென்ற அப்பெண் இலகுவாக மறுபாதித் தோலை உரித்து எடுத்து, தொப்பியை செய்து முடித்தாள்.

இப்போது, உங்களுக்கு ஒரு கேள்வி, மிகவும் பெரியது எது என்று நினைக்கினறீர்கள், எருதா?

எருதின் வாலிலிருந்து தலைவரைப் போய்ச் சேருவதற்கு குதிரை வீரனுக்கு ஒருநாள் ஆகியிருக்கிறது என்பதை மறந்து விட வேண்டாம்.

கழுகா?

எருதைப் பற்றிக் கொண்டு அது வானத்துக்குப் பறந்துபோனது என்பதை மறந்து விடவேண்டாம்.

வெள்ளாடா?

வெள்ளாட்டின் கொம்புகளில் அமர்ந்து கொண்டுதான் கழுகு எருதினைக் குத்திக் கிளறியது என்பதை மறந்து விட வேண்டாம்.

ஆடு மேய்ப்பவனா?

நாற்பது படகுகளில் நாற்பது மருந்துவர்கள் நீந்திச்சென்றது அவன் விழியில் தான் என்பதை மறந்துவிட வேண்டாம்.

நரியா?

எருதின் எலும்பினைக் கடித்துத்தான் அது நிலநடுக்கத்தை கொண்டுவந்தது என்பதை மறந்து விட வேண்டாம்.

குழந்தையா?

நரியின் முழுத்தோலிலிருந்தும் தொப்பி செய்ய வேண்டிய அளவுக்கு அக்குழந்தை அவ்வளவு பெரிதாக இருந்தது என்பதை மறந்து விடவேண்டாம்

அல்லது அந்த ராட்சதக் குழந்தையின் தாயாக இருந்த பெண்ணா?

நன்றாக எண்ணிப் பாருங்கள். விடையை அறிந்து கொண்டுவிடுவீர்கள்

(Folk Tales from the Soviet U 1986- தொகுதியிலிருந்து.)

# வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த தீவிர கண்காணிப்பில் பொலிஸார்

(சிகரம்)

விபத்துக்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதையடுத்து, இலங்கை முழுவதும் உள்ள பிரதான போக்குவரத்து வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் தீவிர கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டின் பிரதான தூர இடப் பயணங்களுக்கான வீதிகள் முதல், கொழும்பு நகரின் பிரதான வீதிகள் வரையில் அனைத்து வீதிகளி லும் இப்போது போக்குவரத்துப் பொலிஸார் தீவிர போக்குவரத்துக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிகிறது.

வேகக் கட்டுப்பாடு, வீதி சமிக்ஞைகளை உரிய முறையில் பேணாமை உள்ளிட்ட பல்வேறு போக்குவரத்து விதிமுறை மீறல்களுக்காகவும் வாகனச் சாரதிகள் அடிக்கடி வீதிகளில் பொலிஸாரினால் மறிக்கப்பட்டு குற்றமிழைத்தவர்களுக்கு உடனடி தண்டம் விதிக்கப்படுகிறது.

இதனால், நாள் முழுவதும் பிரதான வீதிகளின் முக்கிய மையங்களில் கடமையில் ஈடுபடும் போக்குவரத்துப் பொலிஸார், போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

போக்குவரத்துக் குற்றமிழைக்கும் சாரதிகளுக்கு, குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப அந்த இடத்திலேயே தண்டம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டு வழங்கப்படுவதுடன், மோசமான குற்றமிழைப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்படடு வருவதாக வீதியில் தீவிர கடமையில் ஈடுபட்டுவரும் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

போக்குவரத்துப் பொலிஸாரின் இந்தத் திடீர் உஷார் நிலையையடுத்து, வாகனச் சாரதிகள் இப்போது மிகுந்த அவதானத்துடன் வாகனங்களைச செலுத்துவதையும் பொதுவாக அவதானிக்க முடிகிறது.

எனினும், சில இடங்களில் குற்றமிழைக்கும் சாரதிகள் உரிய தண்டப்பணத்தைச் செலுத்தாமல் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்துத் தப்பிச் செல்லும் சம்பவங்களும் நடைபெறவே செய்கின் றன குறிப்பாக தூர இடங்களுக்குப் பயணம் செய்யும் போது இடையில் மாட்டிக்கொண்டால், தண்டப் பணம் செலுத்துவதற்காக மீண்டும் அந்தப் பகுதிக்குச் செல்லவேண்டியிருக்கும். இதற்கு அதிக பணம் செலவிடவேண்டியிருக்கும். அப்படி யான சந்தர்ப்பங்களில் இலஞ்சம் கொடுத்து விட்டுத் தப்பிச்செல்வதே ஒரே வழி' என்றார் தூர இடப் பயணம் மேற்கொள்ளும் சாரதியொருவர்.

இதேவேளை வடக்கு மாகாணத்திலும் போக்குவரத்து விதிமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதில் பொலிஸார் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஏ-9 வீதி உட்பட வடக்கின் பல வீதிகள் காப்பற் இடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட் டுள்ள நிலையில், அந்த வீதிகளில் விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

வீதிகள் புனரமைக்கப்பட்டபோதும், இன்னமும் வேகக்கட்டுப்பாட்டுச் சமிக்ஞைகள் மற்றும் வீதிச் சமிக்ஞைக் குறியீடுகள் இந்த வீதிகளில் முழுமையாக இடப்படவில்லை.

எனினும், இந்த வீதிகளில் தீவிர கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் போக்குவரத்துப் பொலிஸார், போக்குவரத்து விதிமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

'வீதிச் சமிக்ஞைகள் போடப்படாவிட்டாலும், இலங்கையின் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற ஒருவருக்கு இந்த நாட்டின் போக்குவரத்து விதி முறைகள் தெரிந்திருக்கவேண்டும்' என்று, ஏ-9 வீதியில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கண்டிப்பாக தெரிவித்தார்.

## சொந்த இடத்தில் மீள்குடியமர கண்ணகிக்கு பொங்கல் வழிபாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கேப்பாப்புலவு கிராம மக்கள் சொந்த இடத்தில் மீள்குடியமரவேண்டும் என நேர்த்திக்கடனாகவற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இன்று விசேட வழிபாடு ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இக்கிராம மக்கள் தற்போது செட்டிகுளம் நலன்புரி முகாமிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் நந்திக்கடல் பிரதேசத்திலும் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் நந்திக்கடல் பகுதியில் வாழ்ந்துவரும் 340 குடும்பங்கள் ஒன்று கூடி அம்மனுக்கு பாரிய பொங்கல் நிகழ்வொன்றை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கேப்பாப்புலவு கிராமம் மீள்குடியேற்றத்திற்கு ஏதுவானதாகவும் கண்ணிவெடி அகற்றப்பட்ட நிலையில் காணப்படுவதால் மக்களை மீள்குடியமர்த்தக்கூடிய வழிவகை காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு இடங்களில் வாழ்வாதார ரீதியாகத் மிகவும் கஷ்டப்படும் இப்பிரதேச மக்கள் தம்மை சொந்த இடத்தில் மீள்குடியேற்றுமாறுஉரியவர்களிடம் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் கடவுள் மீது நம்பிக்கை வைத்து இவ் வழிபாட்டை மேற்கொள்வதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (04)

## தொடரும் கடும் வறட்சியான நிலை குடிநீரின்றித் தவிக்கும் மக்கள்

தற்போது நிலவும் கடும் வறட்சியான கால நிலையால் துணுக்காய், மல்லாவி, யோகபுரம் மாங்குளம் பகுதிகளில் நீரைப்பெறுவதற்கு அப்பிரதேச மக்களும், கால்நடைகளும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படு கிறது.

குளங்களில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ள நிலையில் கிணறுகளிலும்நீர் மட்டம் குறைவடைந்துள்ளதால் நீரைப்பெறமுடியாது உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து சென்று அங்கு கடமையாற்றும் அரச ஊழியர்களும் ஆசிரியர்களும் இதனால் சிரமப்படுவதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக இப்பிரதேச மக்கள் குடிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் நீரைப் பெற்றுக் கொள்ள வேறு இடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இங்குள்ள கால்நடைகளும் நீர் இன்றித் தவிக்கும் நிலை காணப்படுவதுடன் அவை தூர இடங்களை நாடிச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

மேலும் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற் செய்கையும் நீரின்றி காய்ந்து காணப்படுகின்றது. இதனால் இம் மக்கள் இயற்கை மழையை எதிர்பார்த்த நிலையில் உள்ளதாக தெரிவிக்கின்றனர். (148)



தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் மங்கள விளக்கேற்றுவதையும் வடமாகாண கல்வி அமைச்சின்செயலாளர் எஸ். சத்தியசீலன் வித்தியாலய அதிபர் என். அனந்தேஸ்வரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)



## வேலை வாய்ப்புச் செய்திகள்


அலுவலகத்தில் பணியாற்ற கணினியில் MS Office தேர்ச்சி பெற்றவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும். தொடர்புக்கு Eswarabagawaan & Company No.91, Stanly Road, Jaffna.தொலைபேசி இல 021 222 7603.

யாழ். குடா நாட்டில் வேலை செய்வதற்குநன்கு தேர்ச்சி பெற்ற பாரஊர்தி சாரதிகள் தேவை, தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு Eswarabagawaan & Company No.91, Stanly Road, Jaffna.தொலைபேசி இல 021 222 7603.

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் முன்மொழியப்பட்ட பாற்பண்ணை திட்டத்தை நடைமுறைப்படுத்த வழங்குநர்கள் தேவைப்படுகின்றனர். தொழில் நுட்பம் மற்றும் நுட்பத்துறை ஆகியவற்றை உச்ச அளவில் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பற்குத் தகைமையுள்ளவர்கள் தங்களது முழு விவரங்களையும் உள்ளடக்கி தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டுப் பின்வரும் ஈமெயிலுக்கு விண்ணப்பங்களை அனுப்பவும், நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்கின்றோம். Email:Maserativ 12 Power@gmail.com.

எமது நிறுவனத்தின் யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, நெல்லியடிக்கிளைகளில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. Receptionust/Secretary/Officc Assistant, விரிவுரையாளர்கள் (Hotel Management/ Computing/Business Managemant/ Beauty Therapy), Trainee Englis Teachers/English Teachers, Marketing Staffs/Salffs/Sales Assistants நேர்முகப் பரீட்சைக்கான பதிவுகளுக்கு 0777 172660 தொடர்பு கொள்ளவும். International Knowledge pool no.19 Thanarajah building (peoples Bank) Staniey Road. Jaffna.

பான்சிக்கடைக்கு வேலையாள் (பெண்பிள்ளை) தேவை. முன்பு வேலை புரிந்த அனுபவம் உடையவர்களும், யாழ். நகருக்கு அருகில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. பயிலுநரும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு: 077 9793300.

எமது நிறுவனத்துக்குப் பொதி செய்யும் பகுதியில் வேலை செய்வதற்கு முன் அனுபவமுள்ளபெண் பிள்ளைகள் தேவை. நாளொன்றுக்கு 300 சம்பளம் வழங்கப்படும் நேரில் வரும் போது கிராம சேவகரின் சிபாரிசுக்கடிதமும். சுயவிவரக்கோவையும் கொண்டுவரவும். யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும். திருமணமாகாதவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். முன்பு சுப்பர் மார்க்கெட்டில் பொதி செய்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சிவா நறுமணப்பூங்கா. இல 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எமது நிறுவனத்துக்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. முன்னனுபவமுள்ளவர்கள் தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. யாழ். ரெக்ஸ் 13A நவீனசந்தை, சாவகச்சேரி.

வவுனியாவில் இயங்கும் நகைக்கடையொன்றிற்கு அனுபவம் வாய்ந்த, விற்பனையாளர்கள் இருபாலாரும் உதவியாளர் ஒருவரும் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 024 2222062 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வத்தளையில் உள்ள தேவஸ்தானத்திற்கு முகாமையாளரும் பல வேலைகளுக்கு ஆட்களும் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 075 7380630 அல்லது 0777 877529இற்கு தொடர்பு கொள்ளவம்.

Beauty parlor இற்கு அனுபவம் உள்ள பெண்கள் தேவை. ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் 0776331257 இற்கு தொடர்பு கொள்ளவும்.

டெயிலர்மார்கள் உடனடியாகத் தேவை. காற்சட்டை மற்றும் சேட் தைக்கக் கூடிய அனுபவமுள்ள டெயிலர் மார்கள் தேவை. உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும் ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் 077 2222 422 இற்கு தொடர்பு கொள்ளவும்.

LLSEES Nallur Campus இற்கு English Teachcr Student Councillor Marketing Exeautive & Receptionist உடன்தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0212224728 அல்லது 0777 444407 அல்லது llseees@gmail.com இற்கு தொடர்பு கொள்ளவும்.

பான்சிக் கடைக்கு வேலையாள் (பெண்) தேவை முன் அனுபவம் , யாழ். நகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் 0779793300இற்கு தொடர்பு கொள்ளவும்

# செயற்திட்டங்கள் விஸ்தரிப்பு நிதி ஒதுக்கீடு குறித்து ஆராய்வு



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் 2013ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமையில் நிதியமைச்சின் துறைசார்ந்த அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றுள்ளது.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மேற்படி விடயம் தொடர்பான கலநதுரையாடலின்போது அமைசசின் கீழான பனை அபிவிருத்தி சபை, தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்பு நிலையம், கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் வடகடல் நிறுவனம் ஆகியவற்றின் அடுத்தாண்டு செயற்திட்டங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி செயற்திட் டங்கள் தொடர்பாகவும் அதற்கு நிதியமைச்சின் பங்களிப்பு தொடர்பாக வும் இதில் ஆராயப் பட்டது.

இதில் நிதியமைச்சின் பிரதிச் செயலாளர் அபயசேகர உள்ளிட்ட குழுவினருடன் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வி.ஜெக ராஜசிங்கம் மற்றும் குறிப்பிட்ட நிறுவனங்களினது துறைசார்ந்த அதிகாரிகளும் உடனிருநதனர்.

# சைக்கிள் திருட்டில் மன்னன் மானிப்பாயில் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸாரினால் களவு ஒன்றுடன் தொடர்புபட்டிருப்பார் என்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவர் நான்கு சைக்கிள்களைத் திருடியிருப்பது விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து அந்த நான்கு சைக்கிள்களும் மானிப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இவற்றில் ஒன்று மே மாதத்தில் யாழ்ப்பாணத்தில் திருட்டுப் போயிருந்த சையிக்கிள் எனவும் அடையாளம் காட்டப்பட்டதை அடுத்து பொலிஸாரினால் உரியவரிடம் அது ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மிகுதி மூன்று சையிக்கிள்களின் விபரங்களை மானிப்பாய் பொலிஸார் வெளியிட்டுள்ளனர். டு.ர்-608019, ரு.டு- 758284, 696073 எனும் இலக்கங்களையுடைய மூன்று கறுப்பு நிற லுமாலா சைக்கிள்கள் எனவும் அவற்றிற்குரிய இலக்கங்கள் வெளியிடப் பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார். (பா)

# தண்டவாளம் திருட்டு பொலிஸ் வலையில் 5 பேர்

(யாழ்ப்பாணம்)

புதுக்குடியிருப்பு விசுவமடு பாரதிபுரம் பகுதியில் 22 தண்ட வாளத் துண்டுகளுடன் லொறி ஒன்றும ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த பொலிஸ் தகவல்கள் தெரிவிததன.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் சந்தேக நபாகள் நீதிமன்ற நடவடிக்கைக் குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். (பா)

## பருத்தித்துறையில் சூதாட்டம் 5 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பகுதியில் சூது விளையாட்டில் ஈடுபட்டிருந்த ஐந்து பேர் பருத்தித் துறைப் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி அன்று நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இத் தகவல் வெளியிடப்பட்டது. (பா)

# விபச்சார விடுதி முற்றுகை

(யாழ்ப்பாணம்)

காலி வீதி கல்கிஸையில் ஆயுர்வேத மத்திய நிலையம் என்ற பெயரில் செயற்படுத்தப் பட்டு வந்த விபச்சார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

இந்த விபச்சார விடுதியை இயக்கியவரும் அதில் விபச்சாரிகளாக தொழில் புரிந்த 6 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை குற்றத்தடுப்புப் பிரிவினர் நீதிமன்றில் பெற்றுக் கொண்ட உத்தரவு ஒன்றிற்கு அமைய நேற்றுமுன்தினம் மாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இந்த விபச்சார விடுதி முற்றுகையிடப்பட்டது.

கைது செய்யப்பட்ட ஏழு பேரும் கல்கிஸை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின் நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்கிஸை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# அம்பாள் குளத்துக்கு மின்சாரம் மக்கள் மனதுகளில் மகிழ்ச்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்துக்கு தற்போது மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதால் அவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக இருப்பதாக அக்கிராம மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

பல காலமாக குறிப்பாக கடநத யுத்த அனர்த்தங்களுக்கு முன்னரே இக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படாத நிலையில் தற்போது மக்கள் மீள்குடியேறி வாழ்ந்து வருவதை அடுத்து இக்கிராமத்தின் பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர் கிருஷ்ணசாமி எடுத்த முயற்சியின் பயனாக ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் நடவடிக்கையின் கீழ் மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 20 இற்குட்பட்ட வீடுகளுக்கு ஆரம்ப கட்ட மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஏனைய வீடுகளுக்கும் மின் விநியோகத்தை துரிதப்படுத்துமாறும் மின்சாரம் இல்லாத மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இக்கிராமத்திலுள்ள மாணவர்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி அறிவை இலகுவாகக் கற்றுக் கொள்ளக் கூடியவாறு கணினிப் பயிற்சி நிலையம் ஒன்றை இக் கிராமத்தில் அமைக்க வேண்டும் எனவும் இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் நடவடிக்கை எடுப்பார் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அம்மக்கள் தெரிவித்துள்ளனர். (28)

# எருமைகள் கடத்தல் வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இறைச்சிக்காக 14 எருமை மாடுகளைக் கடத்திய இரண்டு பேர் வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் இருவர் மீதும் வவுனியா பொலிஸார் வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)

# சட்டவிரோத மரக்காலை முள்ளியவளையில் சுற்றிவளைப்பு

(முல்லைத்தீவு)

முள்ளியவளையில் இயங்கி வந்த சட்டவிரோத மரக்காலை ஒன்றை சுற்றிவளைத்த பொலிஸார் அங்கு வைக்கப்பட்டிருந்த 7 தேக்கு மரக்குற்றிகளையும், 9 பாலை மரக்குற்றிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த வாரம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா)


## மாங்குளத்தில் வெடிபொருள் மீட்பு

(மாங்குளம்)

மாங்குளம் காட்டுப் பகுதியில் பற்றை ஒன்றினுள் இருந்து ஒரு தொகுதி வெடிபொருட்கள் மாங்குளம் பொலிஸாரினால் கடந்த வாரம் மீட்கப்பட்டுள்ளது.

எம்.பி.எம்.ஜி துப்பாக்கிக்குரிய 1277 ரவைகள் மற்றும் ஆட்லறி பீரங்கிக்கான ஒரு செல் (ரவை) என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராநத செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)



இலங்கை வங்கியின் 73 ஆவது பிறந்த நாளையொட்டி மானிப்பாய் இலங்கை வங்கி கிளையில் வங்கியின் முகாமையாளர் ஸ்ரீ.சகாதேவன் வாடிக்கையாளரின் பிள்ளைக்கு பரிசுப் பொருட்களையும் கணக்குப் புத்தகத்தையும் வழங்குவதைக் காணலாம். (104)

# போக்குவரத்தில் நெருக்கடி பயணிகள் சிரமம் நீங்குமா?


(சுன்னாகம்)

கொக்குவில் பகுதியில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கே.கே.எஸ் வீதியில் கொக்குவில் சந்திக்கும் குளப்பிட்டிச் சந்திக்கும் இடையே இந்நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகிறது.

வீதி அகலிப்பு பணிக்காக இப்பகுதி வீதி ஓரங்கள் ஆழமாக்கப்பட்டிருப்பதாலும், கொக்குவில் சந்தியில் பாலம் திருத்தும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. இந் நெருக்கடி நிலைக்கு மத்தியில் இப் பகுதியில் வாகனங்கள் வீதியிலும் வீதி ஓரமாகவும் அதிகளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதே நெரிசல் நிலமைக்குக்காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட அனைவரும் ஒத்து ழைப்பு வழங்குவதன் மூலமே இந் நிலைமை தவிர்க்கப்படும் எனப் பொதுமக்கள் தெரிவிக்கினறனர். (148)


24. காசு நாணயங்கள் மாத்திரமுள்ள ஓர் உண்டியலில் 400 காசு நாணயங்கள் இருந்தன. அதில் 50 சத நாணயங்களைப் போன்று இரு மடங்கு 1 ரூபா நாணயங்களும் மீதி 2 ரூபா நாணயங்களும் இருந்தன. அதிலிருந்த 1 ரூபா நாணயங்களின் எண்ணிக்கை 240 எனின் உண்டியலிலிருந்த மொத்தப் பணம் எவ்வளவு?

1) ரூபா 380 2) ரூபா 410 3) ரூபா 120

25. 


இப்படத்தில் யு மீன் என்பதை குறிக்கின்றது. எனில் எழுத்து ட குறிக்கக் கூடியது எதுவாக இருக்கலாம்.

1) கோழி 2) இறைச்சி 3) சுறாமீன்

26. 
அருகில் அடுக்கப்பட்ட தீப்பெட்டிக் குவியலில் உள்ள தீப்பெட்டிகளின் எண்ணிக்கை யாது?

2) 48 2) 58 3) 50

**கீழ்வரும் ஒவ்வொரு வாக்கியங்களிலும் ஒவ்வொரு சொற்களுக்கும் ஒவ்வொரு குறியீடுகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து 27, 28, 29 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




27. சாமன் என்ற சொல்லுக்குப் பொருத்தமான உரு?

1) ⊗ 2) ✳ 3) ✥ 4) ☾

28. “நான்” என்ற சொல்லுக்கான குறியீடு எது?


1) ◬ 2) ⟶ 3) ⊡ 4) ❀

29. “மலிவான” என்ற சொல் குறிக்கும் உரு?

1) ✯ 2) ☾ 3) ▣ 4) ✦

முதலில் தரப்பட்ட உரு அருகிலிருந்து பார்க்கும்போது தோன்றும் விதத்தினை காட்டும் உருவின் கீழ்க் கோடிடுக.


30.
31.




32. ரமணி ராஜனின் தாயாராவார். ராகினி ராஜனின் அக்கா ஆவார். ரூபன் ரமணியின் தம்பியாராவார். ராஜனும் ரூபனும் சந்திக்கும் போது ராஜன் ரூபனை என்ன உறவு சொல்லி அழைப்பார்?

1) அத்தை 2) மாமா
3) மைத்துனி 4) அக்கா

33. இரண்டு தேயிலைப் பக்கற்றுக்களின் நிறை ஒரு பால் பக்கற்றின் நிறைக்குச் சமனாகும். 5 பால் மா பக்கற்றின் நிறை ஒரு பிஸ்கட் பக்கற்றின் நிறைக்குச் சமனாகும். 1 பால்மா பக்கற்றின் நிறை 450 ப ஆகும் எனின் தரப்பட்ட கூடையில் உள்ள பொருட்களின் மொத்த நிறை யாது? ..........................................




34.




34. உருவில் தரப்பட்டுள்ள அளவுகளைப் பயன்படுத்தி உருவின் சுற்றளவைக் காண்க.

..........................................

35. கூடு ஒன்றிலே சில வர்ணக் குருவிகள் காணப்பட்டன. அவற்றுள் 7 மஞ்சள் நிறமானதாகும். 9 பச்சை நிறமானதாகும். சில வெள்ளை நிறமானதாகும். வெள்ளை நிறக் குருவிகளின் எண்ணிக்கை மஞ்சள் நிறக் குருவிகளின் எண்ணிக்கையிலும் அதிகமாக இருப்பினும் நிறக் குருவிகளின் எண்ணிக்கையிலும் குறைவாகவே உள்ளன. எனின் கூண்டிலுள்ள குருவிகளின் எண்ணிக்கை யாது?

..........................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012


பகுதி - II
நேரம் 45 நிமிடம்


# கல்வி முரசு

**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

பின்வரும் குறியீடுகளை அவதானிக்க, இவற்றை மூன்று கூட்டங்களாக வகைப்படுத்தலாம்.


01) இக் குறியீடுகளைச் சரியாக வகைப்படுத்திக் காட்டும் கூட்டம்.




பின்வரும் உருவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

02.



1) பறக்கும் , உயிர், மகிழ்ச்சி
2) விளையாட்டு, மகிழ்ச்சி, மாணவன்
3) தூரம், பறக்கும், காற்று

**3ம், 4ம் வினாக்களுக்கு பின்வரும் பாடலை வாசித்து விடைதருக.**

| | |
|---|---|
| உம்மைப் போன்ற சிறுவர்கள்<br>களிப்புடனே கல்வி கற்று<br>ஞானம் பண்பு வளரப் பெற்று<br>உழைத்திடுவார் நாட்டினுக்கு | எங்கும் என்றும் கல்வி கற்றல்<br>மங்காத சுகவாழ்வின் ஆதாரம்<br>இவ்வுலகில் இதற்கு நிகர் வேறு<br>எதுவுமில்லை எவர்க்குமே |

03. “உம்மைப் போன்ற சிறுவர்கள் களிப்புடனே கல்வி கற்று ஞானம் பண்பு வளரப் பெற்று உழைத்திடுவார் நாட்டினுக்குமே” இதில் “களிப்புடனே கல்வி கற்ற” என்பதன் பொருள் யாது?


1) சிறுவர்களுடன் சேர்ந்து படித்தல். 2) மகிழ்ச்சியுடன் பாடம் படித்தல்.
3) அறிவுடன் நற்பழக்கவழக்கம் பழகுதல்.


04. “இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை” என்பதன் பொருள் யாது?

1) கல்வியே மிக உயர்வானது 2) கல்வியை எதனுடனும் ஒப்பிடக்கூடாது
3) கல்வியைவிட செல்வம் உயர்வானது

**கீழே தரப்படும் எண்கோலங்களை அவதானித்து ? குறியிடப்பட்ட இடத்தில் வரவேண்டிய பெறுமானத்தைத் தெரிவு செய்து கோடிடுக.**

05.







07. "தசரதன் இறந்து விட்ட செய்தி கேட்ட இராமர் படாரென நிலத்தில் மயங்கி விழுந்தார்" இதனைக் குறிப்பிட்ட உகந்த உவமைச் சொற்றொடர் எது?
1) அச்சாணியுள்ள தேர் போல 2) அணை கடந்த வெள்ளம்போல 3) அடியள்ள மரம்போல


08. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழியுடன் பொருந்தக்கூடிய நிகழ்வு எது?
1) அப்பா வேலைப்பளுவால் சினந்து கொண்டிருந்தவேளை தம்பி அப்பாவிடம் பந்து வாங்கித் தரும்படி கேட்டான்.
2) மழை பெய்துகொண்டிருந்த வேளையில் மழைநீர் வீணாக ஓடாது அவற்றை அப்பா தென்னம்பாத்திகளுக்கு வாய்க்கால் கட்டி விட்டார்.
3) புயற்காற்று வீசும்போது அம்மா மின்விசிறியை போட்டு விட்டு அதன் கீழ் சௌகரியமாக இருந்தாள்.

**பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கு முறையாக எழுதினால் ஒரு கதை உருவாகும். சரியான ஒழுங்கில் உள்ள இலக்கங்கள் கொண்ட விடையின் கீழ் கோடிடுக.**

09. 1) அதிக நேரம் ஆகியும் பேருந்து வருவதாகத் தெரியவில்லை.
2) தரிப்பிடத்திலிருந்து சிறிது தூரம் நடக்கவும் பேருந்து அவளைக் கடந்து சென்றது.
3) பாடசாலைப் பையுடன் பேருந்துத் தரிப்பிடம் சென்றாள் ஆஷா.
4) அவள் தனது அவசரப் புத்தியை எண்ணிக் கவலைப்பட்டான்.
1) 2, 1, 4. 5, 3 2) 3, 1, 4, 2, 5 3) 3, 5, 1, 4, 5


10. தரப்பட்டுள்ள தகவலைக் கருத்திற்கொண்டு வினா இல 10 ஆம் 11 ஆம் வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.



என்பன இடப்பட்ட பையின் விலையைத் தெரிக
1) ரூபா 200.00 2) ரூபா 170.00 3) ரூபா 190.00 1) ரூபா 150.00

11. பின்வருவனவற்றுள் சரியான தொடர்பினைத் தெரிக




**12 ஆம் 13 ஆம் வினாக்களில் சரியான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**


12. 1) நாய் குரைக்கக்கூடியது அதேநேரம் கடிக்கவும் செய்யும்.
2) சேவல் கூவக்கூடியது அதேநேரம் முட்டையிடவும் செய்யும்.
3) பசு பால் தரக்கூடியது. அதேநேரம் வண்டிலை இழுத்துச் செல்லும்.

13)
1) நீர்த்தேக்கங்கள் இருக்குமிடங்களில் போதியளவு மழை பெய்யாவிட்டாலும் மின்வெட்டு அமுலுக்கு வரும்
2) புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் வறிய மாணவர்களுக்கு அரச உதவிப்பணம் நிச்சயமாகக் கிடைக்கும்.
3) பட்டதாரிகள் அனைவருக்கும் அரசு தொழில் வழங்கினால் இலங்கையிலுள்ள அனைவரும் பட்டதாரிகள் ஆகிவிடுவார்கள்.



14) ஒரு நாள் எமது வகுப்பறையில் சுற்றாடற் பாடத்தின் பின் ஆங்கிலப் பாடம் நடைபெற்றது. தமிழ்ப்பாடம் நடைபெறுவதற்கு முன் கணிதப் பாடம் நடைபெற்றது. ஆங்கிலப் பாடம் முடிந்த பிறகு சித்திரப்பாடம் நடைபெற்றது. தமிழ்ப்பாடத்திற்கும் ஆங்கிலப்பாடத்திற்கும் இடையில் சுற்றாடற் பாடம் நடைபெற்றது. ஆகவே அன்றையதினம் பாடங்கள் நடைபெற்ற சரியான ஒழுங்குமுறை எது?
1) கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சித்திரம், தமிழ்
2) கணிதம், தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், சித்திரம்
3) தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சித்திரம்

தாயக்கட்டை ஒன்றின் முகங்கள் A,B,C,D,E,F எனும் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ள விதம் பின்வருமாறு இத்தகவலைக் கருத்திற்கொண்டு 15, 16 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க்கோடிடுக




16. எழுத்து ∈ இற்கு எதிரே உள்ள எழுத்து யாது?
1) C 2) A 3) F 4) D


17. நிஷானா 08 ஆவது பிறந்த நாளை இன்றைக்கு இரு தினங்களுக்கு முன்னர் கொண்டாடினாள். அன்று அவளது தங்கை நிஸ்மியாவிற்கு 3 வயதாக இருந்தது. இதற்கேற்ப நிஷானாவினதும் நிஸ்மியாவினதும் வயதுகள் தொடர்பாகக் கூறப்படும் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
1) இன்று நிஸ்மியாவின் வயதின் இருமடங்கு நிஷானாவின் வயதாகும்.
2) இன்று நிஷானா நிஸ்மியாவிலும் நான்கு வயது மூத்தவள்.
3) இன்னும் 5 ஆண்டுகளில் நிஸ்மியாவின் வயது 8 ஆகும்.
4) நிஷானா வெள்ளிவிழா கொண்டாடும் போது நிஸ்மியாவின் வயது 18 ஆகும்.

**வினா இலக்கம் 18 முதல் 19 வரையிலான ஒவ்வொன்றிலும் மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று தவறானது அதனைத் தெரிவு செய்து கோடிடுக.**

18. 1) கோழி முட்டையின் நிறம் வெள்ளை
2) கரப்பான் முட்டையின் நிறம் மஞ்சள்
3) யானை முட்டையின் நிறம் கறுப்பு

19. 1) நாய்க்குப் பயந்தது பூனை
2) மனிதருக்கப் பயந்தது சிங்கம்
3) பூனைக்குப் பயந்தது எலி

20.




இச் செயற்பாட்டின் மூலம் விளக்கம் பெறுவது?
1) திண்மப்பொருட்கள் வெப்பத்தைக் கடத்தாது
2) பந்தினூடாக ஒளியானது ஊடுருவாது
3) ஒளியானது நேர்கோட்டில் செல்லக்கூடியது
4) வெப்பம் ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு கடத்தக்கூடியது.

21. ஐந்து வெள்ளிக்கிழமைகள் உள்ள ஓர் ஆவணி மாதத்தில் எல்லா வெள்ளிக்கிழமைகளினதும் திகதிகளைக் காட்டும்போது குறைந்த பட்சமாக கிடைக்கக்கூடிய பெறுமானம் யாது?
1) 75 2) 80 3) 85

22. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டு நிறைவு விழா 2005 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அவ்விழாவில் பங்கு பற்றியபோது நிஷாவின் வயது 10 ஆகும். அப்பாடசாலையின் நூற்றாண்டு விழா நடைபெறும் போது நிஷாவிற்கு எத்தனை வயதாகும்?
1) 40 2) 50 3) 60

23. மண்டபமொன்றில் ஒவ்வொரு ஒற்றைக்கால் மேசையையும் சுற்றி நான்கு கதிரைகள் வீதம் போடப்பட்டிருந்தன. அவ்வகையில் போடப்பட்டிருந்த மேசைகளினதும் கதிரைகளினதும் கால்களின் மொத்த எண்ணிக்கை 510 எனின் அம்மண்டபத்தில் எத்தனை மேசைகள் போடப்பட்டிருக்கும்?
1) 408 2) 127 3) 102

# ராகுல் அமைச்சரானால் வரவேற்பேன்

## — பிரதமர் மன்மோகன்சிங் —



(புதுடில்லி)

ராகுல், மத்திய அமைச்சரானால் வரவேற்பேன், என, பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுலுக்கு, கட்சியிலும், ஆட்சியிலும், முக்கிய பொறுப்பு கொடுக்கப்பட வேண்டும் என, கட்சியின் மூத்த தலைவர்கள், சமீப காலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா, சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோர், இதுகுறித்து பகிரங்கமாகவே கருத்து தெரிவித்தனர்.காங்கிரஸ் எம்.பி.க்கள் சிலரும், இதுபற்றி, கட்சி தலைவர் சோனியாவுக்கு கடிதம் எழுதினர். இதற்கு பதில் அளித்த ராகுல், எனக்கு என்ன பதவி கொடுக்க வேண்டும் என்பதை, பிரதமரும், கட்சி தலைவரும் தான், முடிவு செய்ய வேண்டும் என, கூறியிருந்தார்.இதையடுத்து, சமீபத்தில், நிதி மற்றும் உள்துறைக்கான அமைச்சர்கள் மாற்றப்பட்ட போது, ராகுலுக்கும், அமைச்சரவையில் இடம் அளிக்கப்படும் என, எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதுபோல் எதுவும் நடக்கவில்லை.

இந்நிலையில், பிரதமர் மன்மோகன் சிங்கிடம், இதுதொடர்பாக நேற்று முன் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த அவர், ராகுல், மத்திய அமைச்சரானால் வரவேற்பேன் இதே கருத்தை, இதற்கு முன்னும் தெரிவித்துள்ளேன். அடுத்த மாதம், மத்திய அமைச்சரவையில் மாற்றம் இருக்குமா என, கேட்கிறீர்கள். அவ்வாறு மாற்றம் நிகழ்ந்தால், கண்டிப்பாக உங்களுக்கு தெரிவிக்கப்படும், என்றார்.

# துணை ஜனாதிபதியாக அன்சாரி பதவியேற்பு




(புதுடில்லி)

நாட்டின், 14ஆவது துணை ஜனாதிபதியாக, ஹமீது அன்சாரி நேற்று பதவியேற்றார்.

கடந்த, 7ஆம் திகதி நடைபெற்ற துணை ஜனாதிபதி தேர்தலில், ஏற்கனவே துணை ஜனாதிபதியாக இருந்த ஹமீது அன்சாரி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி சார்பில், போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து, தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிட்ட, ஜஸ்வந்த் சிங் தோல்வி அடைந்தார். இதையடுத்து, நாட்டின், 14ஆவது துணை ஜனாதிபதியாக ஹமீது அன்சாரி, நேற்று முன்தினம் பதவியேற்றார். ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விழாவில், அவருக்கு, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

# சுதந்திர தினத்தை சீர்குலைக்க தீவிரவாதிகள் சதித் திட்டம்

## புதுடில்லியில் பலத்த பாதுகாப்பு



(ஆமதாபாத்)

எதிர்வரம் 15ஆம் திகதி நாடு முழுவதும் சுதந்திர தினவிழா கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடைபெறுகிறது. சுதந்திர தின கொண்டாட்டத்தை சீர் குலைக்கும் வகையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நாசவேலையில் ஈடுபடலாம் என்று மத்திய உளவுதுறை எச்சரிக்கை விடுத்தது.

இதையடுத்து நாடு முழுவதும் மாநில அரசுகள் உஷார்படுத்தப்பட்டு உள்ளன. இதற்கிடையே குஜராத் மாநிலத்தில் நாசவேலை சதித்திட்டத்துடன் பாகிஸ்தனைச் சேர்ந்த லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் 3 பேர் ஊடுருவி இருப்பதாக உளவு துறைக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

அவர்கள் இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில் இருந்து விமானத்தை கடத்தி தாக்குதலில் ஈடுபடலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்களில் பாதுகாப்பு படையினர் உஷார்படுத்தப்பட்டு உள்ளனர். குறிப்பாக குஜராத் மாநிலத்தில் தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதாக வந்த தகவலை அடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு உள்ளது.

விமான நிலையத்தின் பயணிகளின் உடமைகள் அறைகள், வாகனங்கள் நிறுத்தும் இடம் ஆகியவற்றிலும் சோதனை நடத்தப்படுகிறது. இதேபோல் ஆமதாபாத்தின் முக்கிய இடங்களிலும் வழிபாட்டு தலங்களிலும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

குஜராத்தின் மற்ற முக்கிய நகரங்களான சூரத், வதோதரா உள்ளிட்ட இடங்களிலும் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடு பட்டுள்ளனர். இதற்கிடையே குஜராத்தில் ஊடுருவிய தீவிரவாதிகள் அங்கிருந்து வெளியேறி டில்லிக்குள் பதுங்கி இருக்கலாம் என்றும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து டில்லியிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# இமாசல பிரதேசத்தில் பஸ் விழுந்து 40 பேர் பலி



(சிம்லா)

இமாசல பிரதேச மாநிலத்தில் கிடு கிடு பள்ளத்தில் பயணிகள் பஸ் தலைகுப்புற கவிழந்து விழுந்ததில் 40 பேர் பலியானார்கள். மேலும் 20 பேர் படுகாயம் அடைந்தார்கள். அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச்சென்றதால் இந்த கோர விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இமாசல பிரதேச மாநிலத்தில் உள்ள துலேரா என்ற நகரில் இருந்து சம்பா என்ற நகருக்கு பயணிகள் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த பஸ் சம்பா நகருக்கு அருகே ராஜேரா என்ற இடத்தில் வந்து கொண்டிருந்த போது திடீர் என்று கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி கிடு கிடு பள்ளத்தீல் தலைகுப்புற கவிழ்ந்து விழுந்தது. இந்த கோர விபத்தில் அதே இடத்தில் 32 பயணிகள் உடல் சிதறி பலியானார்கள். படுகாயம் அடைந்து மருத்துவமனைக்கு எடுத்து செல்லும் வழியில் மேலும் 8 பேர் பலியானார்கள். இதை அடுத்து இந்த விபத்தில் பலியானாவர்களின் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் படுகாயம் அடைந்த 20 பேர் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

படுகாயம் அடைந்தவ்ரகள் அனைவரும் மீட்பு குழுவினரால் உடனடியாக மீட்கப்பட்டனர். என்றாலும் பலியானவர்களின் உடல்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்தியச் செய்திகள்

# சூரியஒளியில் இயங்கும் சைக்கிள் ரிக்ஷா

## — இளைஞரின் சாதனை —



(சென்னை)

சூரிய ஒளியில் இயங்கும் சைக்கிள் ரிக்ஷாவை திருப்பூர் இளைஞர் வடிவமைத்துள்ளார். திருப்பூரை சேர்ந்த எம்.பி.ஏ. பட்டதாரி சிவராஜ் முத்துராமன்(26), சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத சைக்கிள் ரிக்ஷாவை வடிவமைத்துள்ளார். சூரிய சக்தி, மின்சக்தி மற்றும் மிதிப்பதன் மூலம் இதனை இயக்கலாம். மின்சாரம் மூலம் 3 மணி நேரம் சார்ஜ் செய்தால், 150 கிலோ மீட்டர் ஓட்டலாம். மணிக்கு 45 கிமீ வேகத்தில் செல்லும் திறனுடையது. இந்தியா புக்ஸ் ஆப் ரெக்கார்ட்ஸ் புத்தகத்தில் இந்த பசுமை வாகனம் பதிவாகி உள்ளது. இதுகுறித்து சிவராஜ் முத்துராமன் சென்னையில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது வாகனங்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சுற்றுப்புற சூழலுக்கு வாகன புகை மிகப்பெரிய சவாலாக உள்ளது எனவே, மாசில்லா பசுமை வாகனத்தை கடந்த இரண்டரை ஆண்டு ஆய் வுக்கு பின் உருவாக்கி உள்ளேன். சைக்கிள் ரிக்ஷா வடிவில் உள்ள எனது வாகனம் 120 கிலோ எடை கொண்டது. மூன்று பேர் பயணம் செய்யலாம். சொந்த உபயோகத்துக்கும் பயன்படுத்தலாம் வாடகைக்கும் ஓட்டலாம். வணிக ரீதியில் உற்பத்தி செய்யும் போது க்ஷீ 50 ஆயிரத்துக்கு கொடுக்க முடியும். இந்த வாகனத்தை உற்பத்தி செய்து தர பல்வேறு நிறுவனங்கள் தயார் நிலையில் உள்ளன. சூரிய ஒளி, மின்சாரம் மற்றும் மிதிப் பதன் மூலமும் இந்த வண்டியை இயக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.


# உலகின் பாரம்பரிய சின்னமாக ஸ்ரீரங்கநாதர் கோயில் தெரிவு

(சென்னை)

உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை, திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில், பழவேற்காடு (புலிக்காடு), சிவகங்கை செட்டிநாடு போன்றவை இடம் பெறுகின்றன. இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் சுற்றுலாத் துறை, பாரம்பரிய சின்னங்கள் பட்டியல் சேர்க்கை குழு சார்பில் சிறப்பு கருத்தரங்கு ஒன்று சென்னையில் நடந்தது. இந்த கருத்தரங்கில் பல்வேறுமாநிலங்களை சேர்ந்த ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

இதில் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையை பாரம்பரிய சின்னங்கள் ப்ட்டியலில் சேர்ப்பது குறித்த பரிந்துரை கட்டுரையை பேராசிரியர் ஸ்ரீராம் சமர்ப்பித்தார். அதே போல பெர்ணார்டு டிராகன் என்பவர் செட்டிநாடு குறித்தும் ரூப்மதி ஆனந்த் என்பவர் ஸ்ரீரங்கம் கோயில் குறித்தும், சேவியர் பெணடிக்ட் என்பவர் புலிக்காடு குறித்தும் தங்களது பரிந்துரை கட்டுரைகளை அளித்துள்ளனர். உலக பாரம்பரிய சின்னங்கள் குறித்த ஆலோசனைக்குழு தலைவர் சுஜித் பானர்ஜி இந்த கட்டுரைகளை பெற்றுக்கொண்டு, கட்டுரைகளை மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு சென்று இந்த இடங்கள் பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.



**உத்திரபிரதேச மாநிலம் மிர்சாபூர் நகரில் உள்ள பள்ளிக்கூடத்தில் சுதந்திரதினத்தை முன்னிட்டு பள்ளி மாணவர்கள் இந்திய வரைபடத்தை போன்று அணிவகுத்து நின்றனர்.**

# முரண்டுபிடிக்கும் தம்பதிகளுக்காக அறிமுகமாகிறது புதிய ஸ்பிறே

## – விவாகரத்தை தடுக்கும் அருமருந்து



தம்பதிகளிடம் ஏற்படும் கருத்து வேறுபாடு களால் விவாகரத்துகள் அதிகரித்து வருவது உலகம் முழுவதும் அன்றாட நிகழ்வாகி விட்டது. ஈகோ பிரச்னையால் உப்பு பெறாத விஷயம் கூட விவாகரத்தில் முடிவது தொடர் கதையாகிவிட் டது. தம்பதிகளின் கருத்து வேறுபாடுகளை களைந்து விவாகரத்தை தடுக்க பல்வேறு அமைப புகள் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. விவாகரத்து களை தடுக்கும் வழிமுறை குறித்த பல்வேறு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று புதிய நேசல் ஸ்ப்ரே ஒன்றை தம்பதி களின் சண்டைக்கு சமரச தீர்வாக அறிமுகப் படுத்தி உள்ளது. ஜுரிச் பல்கலைக்கழக ஆராய்ச் சியாளர்களின் கண்டுபிடிப்பு இது. மன உளைச்ச லும் அதனால் ஏற்படும் நரம்பு மண்டல பாதிப்புக ளும் குறித்த ஆய்வில் இத்தகவல் வெளியாகி உள்ளது. ஆய்வுக்காக அடிக்கடி சண்டையிடும் சுமார் 47 தம்பதிகள் தேர்வு செய்யப்பட்டு 2 பிரிவு களாக பிரிக்கப்பட்டனர். ஒரு பிரிவினருக்கு புதிய நேசல் ஸ்ப்ரே, சண்டையின் போது 5 முறை பயன் படுத்த கேட்டுக் கொள்ளப்பட்டது. இவர்களி டையே நேசல் ஸ்ப்ரே அடித்த 45 நிமிடங்களில் கோபம், ஈகோ குறைந்து சமரசம் ஏற்பட துவங் கியது. மற்றொரு பிரிவினரிடையே சண்டையில் சமரசம் இல்லை. ஆண், பெண் வேறுபாடின்றி தம்பதிகளில் இருவரும் இதனை பயன்படுத்த லாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானை உலுக்கியது நில நடுக்கம் 87பேர் பலி 4 கிராமங்கள் அழிவு

ஈரானில் 11 நிமிட இடைவெளியில் 2 முறை ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கு 87 பேர் உயிரிழந்தனர்.

ஈரானின் கிழக்கு அஜர்பைஜான் மாகாணத் தில் உள்ள ஆஹார், ஹாரிஸ், வர்சாகான் ஆகிய நகரங்களை சனிக்கிழமை மாலை 4.53 மணிக்கு நிலநடுக்கம் உலுக்கியது.

இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 6.2 புள்ளிகளுக்கும் மேல் பதிவானதாக, தெஹ் ரான் பல்கலைக்கழகத்தின் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் 87 பேர் வரை இறந்ததாக வும், 400 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலநடுக்கங்களால் 60 கிரா மங்கள் பலத்த சேதமடைந்தன. 4 கிராமங்கள் ஒட்டுமொத்தமாகத் தரைமட்டமானதாகவும் தக வல்கள் தெரிவிக்கின்றன. நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, மேற்கண்ட நகரங்களில் 5 முறை சிறிய அளவில் நில அதிர்வுகள் உணரப்பட்டன.

இதனால் பீதியில் உறைந்த மக்கள், வீடு களை விட்டு வெளியில் ஓடிவந்தனர். நில அதிர் வுகள் அதிகம் உணரப்பட்ட டப்ரிஸ் நகரத்தில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. மின்விநியோகம் தடைபட்டுள்ளது. ஈரான் மீட்புப் பணிகள் துறைத்தலைவர் மஹ்மூத் முஸஷபர் இது குறித்துக் கூறுகையில், அருகிலுள்ள கிரா மங்களை ரேடியோ டிரான்ஸ் ரிசீவர் மூலம் மட் டுமே தொடர்பு கொள்ள முடிகிறது. ஹெலி காப்டர்கள் மூலம் மீட்புப்பணி முடுக்கிவிடப்பட் டுள்ளது என்றார்.

ஈரானின் பாம் நக ரத்தில் கடந்த 2003-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 31 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# சீக்கியஆலயத்தில் கொலை அமெரிக்க ஜனாதிபதி ஆவேசம்



அமெரிக்காவில் குடியிருக்கும் எந்த மதத் தினரை தாக்கினாலும் அதை எங்களை தாக்கிய தாக கருதுவோம் என்று அதிபர் பராக்ஒபாமா கடுமையாக எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள விஸ்கான்சின் நகரில் உள்ள குருத்வாராவில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் பலியானார்கள் மற்றும் பலர் படுகாயம் அடைந தனர். இந்த சம்பவத்தால் சீக்கியர்கள் வருத்தம் அடைந்துள்ளனர். சீக்கியர்களை தூண்டிவிடும் விதத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது. இதை அமெரிக்கா கடுமையாக கண்டித்துள்ளது. மேலும் அமெரிக்காவில் உள்ள எந்த மதத்தினர் தாக்கப் பட்டாலும் அது அமெரிக்கர்களை தாக்கியதாகத் தான் கருதுவோம்.

தாக்கியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப் போம் என்று அதிபர் பாரக் ஒபாமா கடுமையாக எச்சரித்துள்ளார். அமெரிக்க சமுதாயத்தில் இந்த மாதிரியான தீவிரவாதத்திற்கு ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டோம் என்றும் ஒபாமா கூறியுள் ளார். இந்த சம்பவம் மூலமாக வழிபாடு ஸ்தலங் களுக்கு செல்ல எந்த அமெரிக்கரும் பயப்பட வேண்டாம்.

ஒவ்வொரு அமெரிக்கரும் தாங்கள் விரும் பும் மதத்தில் சேரலாம். அதற்கு முழு சுதந்திரம் உண்டு. இதில் யாரும் குறுக்கிட முடியாது என்றும் ஒபாமா தெரிவித்தார். வெள்ளை மாளிகை யில் இப்தார் விருந்து நடந்தது. இதில் முஸ்லீம் மதத்தை சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது அனைத்து தரப்பினர்களும் கலந்துகொண்டனர். இப்தார் விருந்து கொடுத்து பேசுகையில் அதிபர் ஒபாமா மேற்கண்டவாறு கூறினார்.

ஈவு, இரக்கம், சகிப்புத்தன்மை பலம் ஆகிய குணங்கள் அடங்கிய அமெரிக்காவின் ஸ்திரத் தன்மையில் இந்தமாதிரியான ஈவு இரக்கமற்ற செயலுக்கு ஒருபோதும் இடமில்லை என்றும் அதிபர் ஒபாமா திரும்பக்கூறினார். இந்த இப்தார் விருந்தில் நடக்கும் தொழுகையில் குருத்தவாரா வில் நடந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தி அடைய இறைவனை கேட்டுக் கொள்வோம் என்றும் உலகம் முழுவதும் மத சுதந்திரத்தை பாதுகாக்க அமெரிக்கா உறுதிபூண் டுள்ளது என்றும் ஒபாமா மேலும் கூறினார்.

# கட்டு மீறிய வெள்ளம் சீனாவில் 10 பேர் பலி

சீனாவில் பலத்த மழையால் அணை உடைந் தது. வெள்ளத்தில் சிக்கி 10 பேர் பலியாகினர். பலர் படுகாயம் அடைந்தனர்.சீனாவின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. கிழக்கு பகுதியில் உள்ள ஜீஜியாங் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக புயல் காற்றுடன் மழை கொட்டி தீர்த்தது. இதில் நீர்நிலைகள் நிரம்பி வழிந்தன. பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. இந்நிலையில் ஸோஷான் நகரில் உள்ள சிறிய அணை நேற்றுமுன்தினம் காலை உடைந்து வெள் ளம் பெருக் கெடுத்து ஓடியது. இதில் அணை பகுதிகளில் வசித்த 10 பேர் நீரில் மூழ்கி இறந்த னர். 27 பேர் படுகாயம் அடைந்தனர். பலர் பாது காப்பான இடங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்ட னர்.உடனடியாக அந்த பகுதிக்கு மீட்புப் படை யினர் குவிக்கப்பட்டனர். அணையை சீரமைக்கும் பணி இரவு பகலாக நடந்து வருகிறது.



# பெற்றோருக்கான விழிப்புணர்வுக் குறிப்பு

ஜே.பி.ஏ.ரஞ்சித்குமார்
சிறுவர் பாதுகாப்பு இணைப்பாளர் (வட-கிழக்கு)
LEADS

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யாழ் செயல கத்துடன் இணைந்து LEADS நிறுவனம் நடாத்தி விருக்கும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர் வுக் கண்காட்சி நல்லூர் ஆலய முன்றலில் இம்மாதம் 15ம் 16ம் 17ம் திகதிகளில் நடைபெறவுள்ளதை யொட்டி இக்கட்டுரைத் தொடர் இடம் பெறுகின்றது

**நீண்ட கால உள ரீதியான பாதிப்புகள்:**

*01. மற்றவர்கள் மேல் நம்பிக்கை யின்மை*

பிறப்பின் பின் சிறுவரின் நம்பிக்கை தாய், தந்தையின் மேல் கட்டியெழுப்பப் படுகின்றது. சிறுவர் ஒருவர் வளர்ந்து வரும் போது மற்ற கிட்டிய, கூட்டுக் குடும்ப அங்கத் தவர்கள் மேல் நம்பிக்கையை வளர்க்கின் றனர். நம்பிக்கை வைத்த நபரினால் துஷ் பிரயோக சம்பவமொன்று நடந்தால் இது அவர் மீது வைத்த நம்பிக்கையை இழக்கச் செய்வதோடு, மற்றவர்கள் மேல் சிறுவர் வைத்திருந்த நம்பிக்கையையும் இழக்கச் செய்கின்றது. இது ஆளிடை உறவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இதன் பிரதிபலன்

01. நீண்ட காலத்துக்கு நண்பதுவத்தை ஏற்படுத்தி கொள்ள முடியாமை.

02. தனது கணவன் அல்லது மனைவியிடம் விசுவாசம் இல்லா ததின் மூலம் திருமணத்தில் முறிவு ஏற்படுதல்

*03. தமது தீர்ப்புக்களிலும், தன்நம்பிக்கையிலும் கேள்விகளை எழுப்புதல்*

நம்பிக்கை செலுத்தின நபர் தங்களை துரோகம் செய்த கார ணமாக, அவர்கள் சரியான தீர்ப்புக்கள் எடுக்கும் தன் திறன்களைப் பற்றி கேள்வி எழுப்புகின்றனர். இது பின் தீர்மானங்கள் எடுப்பதில் கடி னமாக இருக்கும் நிலைக்குக் கொண்டு செல்கிறது. அவர்கள் சாதார ணமாகச் செய்ய முடியாத காரியங்களைச் செய்ய முயற்சி செய்யமாட டார்கள். இதனால் இவர்கள் நிறைவான வாழ்க்கையை அனுபவிக்க முடியாது.

இதன் பிரதிபலன்

01.இவர்கள் தங்களுடைய முழு திறமைகளையும் வளர்த்து கொள்ள தன்னுடைய வாழ்நாளில் முயற்சி செய்ய மாட்டார்கள்.

*04.குறைந்த தன் மதிப்பு*

இதற்குக் காரணம் அவர்கள் தாங்கள் வித்தியாசமானவர்களாக வும், நிராகரிக்கப்பட்டவர்களாகவும் எண்ணுவதால். அநேகமாக துஷ் பிரயோகியாலும்/ சமுதாயத்தாலும் இழிவுபடுத்தப்படும் கூற்றுகளுக்கு செவி கொடுக்க வேண்டியுள்ளதால் அவர்களுக்குத் தான் மதிப்பற்றவர் என்ற உணர்வு தோன்றுகின்றது.

பிள்ளையால் தன்னைத் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்க முடியாமல் போனதால் மற்றய காரியங்களையும் தங்களால் செய்ய முடியாது என்ற உணர்வு ஏற்படுகிறது.

குறைந்த தன்மதிப்புக் காரணமாக தம்முடைய உரிமை சம்பந்தமான விடயமாக இருந்தாலும் கூட அவனுக்கு/அவளுக்கு எதிர்த்து நிற்கக் கடினமாக இருக்கும். இதனால் மற்றவர்கள் இவர்களை அடிமைப்படுத்தலாம்.

குறைந்த தன் மதிப்புக் காரணமாக மற்றவர்களை திருப்திப்படுத்து வதற்கு மிகுந்த ஆசை/ விருப்பம் கொள்வார்கள். ஏனெனில் அவர்கள் இவ்வாறு செய்வதன் மூலம் தான் தனக்கு பெறுமதியுண்டு என நினைப்ப துண்டு. இதனால் பிள்ளை தனது திறமைகளுக்கு அப்பாபட்ட பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு பின்பு தடுமாறுவதுண்டு. இவ்வாறாக மற்றவர்களைத் திருப்தி செய்யும் முயற்சி, பிற்காலத்தில் சிறுவா களைத் துஷ்பிரயோகத்திற்கு இரையாக வழிவகுக்கின்றது.

மேலும் மற்றவர்களின் ஏற்றுக் கொள்ளலைப் பெறுவதற்கு சிறு வர்கள் ஒரு பிழையுமின்றி சரியாகத் தங்கள் கடமைகளைச் செய்ய முயற்சிப்பர். கடும் சிரமப்பட்டு பிழை ஒன்றும் காண முடியாத வகையில ஒழுங்காக கடமையாற்றுவர். இது சில நேரங்களில் நெருக்கீட்டிற்கு பிள்ளையை இட்டுச் செல்லும்.

சில சம்பவங்களில், தன்மதிப்புக் குறைவை மறைத்துக் கொள்வ தற்கு அவர்கள் வெளிப்படையான ஆக்கிரமிப்பான தோற்றத்தை அல் லது தன்னம்பிக்கையைக் காட்ட முயற்சி செய்வர். இவ்வாறானவை அவர்களைப் பிழையான நடவடிக்கைக்கு அல்லது தங்களின் பலத் தைக் காட்ட சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வழிவகுக் கும். இது திரும்பவும் மேலதிக பிரச்சனைகளுக்குச் சிறுவரை இட்டுச் செல்லும்.

*05.நாட்பட்ட அல்லது க்டுமையான பதகளிப்பு*

துஷ்பிரயோகத்திலிருந்து தப்பிப் பிழைத்த ஒரு சிறுவர் எந்தவொரு காரணத்தாலே அச்சம்பவம் பற்றி ஞாபகப்படுத்தப்பட்டால். பயம், வியர்த்தல் அதிக இதயத் துடிப்பு, நடுக்கம் போன்றவற்றை அனுபவிக்க லாம். உதாரணமாக தாடி வளர்த்தவர் ஒருவர் அச்சிறுவரை துஷ் பிரயோகித்தால் தாடி வளர்த்த டியுசன் ஆசிரியர் தோற்றம் அச்சிறு வரை பதகளிப்பிற்கு இட்டுச்செல்லும். இவ்வாறான சம்பவம் காரணமாக அச்சிறுவர் சில குறிப்பிட்ட இடங்களுக்கு நிகழ்ச்சிக்குச் செல்வதை விலக்கு வார்கள். இது பின் சாதாரண வாழ்க்கையில் இருந்து பலாத்காரமான பிரிவிற்கு இட்டுச் செல்லும். உதாரணமாக கல்வியை இடையில் நிறுத்தி விடுதல்.

*06. பாலியல் உறவில் ஈடுபடுவதற்கு பயம்*

பிள்ளைப் பருவத்தில் ஏற்பட்ட துஷ்பிரயோகத்தின் பயங்கர அனு பவம் காரணமாக அந்நபர் அதிகளவு கவனமாகவும், பயமுள்ள வராகவும் இருப்பர். இது அவருடைய திருமணம் பற்றிய சிந்தனை ளைக் கடுமையாகப் பாதிக்கும். அல்லது திருமணத்தின் பினனும் கணவன் மனைவிக்குள் இருக்கும் உறவுகளைப் பாதிக்கும்.

(மிகுதி தொடரும்...)

# கைகளுக்கு எட்டாத அபிவிருத்தி மனம் வெதும்பும் மீன் வியாபாரி

சண்டை ஓய்ந்த பிற்பாடு பல இடங்களிலும் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், எங்களுடைய உடையார்கட்டுப் பொதுச்சந்தை ஏன் இன்னமும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. அதற்கான கட்டட வேலைகள் ஏன் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. இந்த விடயத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை ஏன் அக்கறை கொள்ளவில்லை என உடையார்கட்டுப் பொதுச் சந்தையில் மீன் வியாபாரம் செய்யும் ஒருவர் கவலையுடன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், எங்களுடைய கிராமத்தில் எல்லா மக்களும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுவிட்டார்கள். தேராவில், இருட்டுமடு, குளக்கட்டு, சுதந்திரபுரம், உடையார்கட்டு மக்களுக்குப் பொதுவாக இயங் கும் இச்சந்தை இன்னமும் ஏன் புனரமைக்கப்படாத நிலையில் இருக்கிறது.

போருக்கு முன்னைய காலத்தில் இயங்கிய இச்சந்தைக் கட்டடம் சண்டையின் போது தரைமட்டமாகி விட்டது. தற்பொழுது நாங்களே தடிகள், தகரங்களால் கொட்டகை அமைத்து வியாபாரம் செய்து வருகின்றோம். இது தற்போது வீசும் காற்றுக்கும், இனிவரும் மழை காலத்துக்கும் தாக்குப் பிடித்து நிற்கக்கூடியதல்ல. இது போலவே மரக்கறி மற்றும் பழக்கடைகளின் நிலையும் உள்ளது.

எமக்கான இந்த அவல நிலை குறித்து எந்தவொரு அரச அதிகாரிகளும் இதுவரை கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை என அவர் மேலும் கவலையுடன் தெரிவித்தார்.(138)

## மட்டுவில் விபத்தில்...

வைதேகி சிவசெந்தில்நாதன் (வயது-38) என்ற திருகோணமலையைச் சேர்ந்த இளம் தாயே பலியானவராவார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது: இரண்டு பிள்ளைகளும் தாயும், தகப்பனும் மோட்டார் சைக்கிளில் தென்மராட்சி நோக்கிச்சென்று கொண்டிருந்த வேளை யில் கன்ரர் வாகனம் மோட்டார் சையிக்கிளை விலத்த முற்படுகையில் அதற்கு வழிவிட கரை ஒதுங்கியபோது கற்கள் சறுக்கியதினால் மோட்டார் சையிக்கிள் சரிந்துள்ளது. இவ்வேளையில் பின்னால் இருந்த குறிப்பிட்ட தாய் நிலத்தில் வீழ்ந்தபோது கன்ரர் வாகனத்தின் சில்லுகள் தலையில் ஏறி அந்த இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசேதாதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## மனித உரிமைகள்...

ஆராயுமாறும், முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் பணித்திருக்கின்றோம். ஜெனிவா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடம் இருந்து இதுவரை எமக்கு உத்தியோகபூர்வ அழைப்பு எதுவும் விடுக்கப்படவில்லை. கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுவதாக எந்தத் தகவலும் இல்லை.

ஆனால் ஊடகங்களில் தகவல்கள் வெளியாகிருந்தன. அதனை நான் பார்த்தமாத்திரத்தில் எமது தூதுவருக்கு அறிவித்தேன். அது உண்மையானதா இல்லையா என்பது பற்றி அறிந்து கொள்ளமுன் எந்தக்கருத்தையும் வெளியிட முடியாதுள்ளது.

இதனிடையே சென்னையில் இடம்பெறும் டெசோ மாநாடு தொடர்பாக இராஜதந்திர ரீதியாக இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றதா எனவும் அந்த செய்தியாளர் சந்திப்பில் வினவப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அது தொடர்பாக சில விடயங்கள் குறித்து இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடல் மேற்கொண்டதாகத் தெரிவித்தார். இது உண்மையில் இந்திய மத்திய அரசாலோ தமிழக அரசாலோ முன்னெடுக்கப்படும் மாநாடு அல்ல. எனவே அதனை இந்திய அரச நிர்வாகத்தால் நடத்தப்படும் நிகழ்வாகக் கருதமுடியாது. இது குறித்த நிலைப்பாடு இந்தியாவினுள்ளும் இருக்கின்றது. நாங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்திலேயே இந்தியா விலும் கொள்கை கடைபிடிக்கப்படுகிறது எனத் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில்...

தெரியவருவதாவது, நேற்று மாலை பளையிலி ருந்து கிளி நொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் அலுவலக வாகனம் கிளிநொச்சி கொமர் ஷல் வங்கிக்கு முன்பாக வந்து கொண்டிருந்த போது முன்னால் சென்ற வாகனம் ஒன்று ஏ-9 வீதியின் வலப்பக்கத்திற்கு செல்வதற்காக திரும்பியபோது நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலக வாகனம் வேகத்தைக் குறைத்த வேளை பின்னால் வந்த யமகா உந்துருளி வேகக்கட்டுப்பாட்டினை இழந்து வாகனத்தின் பின்புறமாக மோதி விபத்திற்கு உள்ளாகியது. இதன்போது உந்துருளியில் பயணித்த கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களில் ஒருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். இதன்போது குறித்த உந்துருளியின் முன்பகுதி சேதத்திற்கு உள்ளாகியுள்ளதோடு உந்துருளியினை செலுத்திவந்த இளைஞனுக்கு சாரதி அனுமதி பத்திரம் . இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஏ-9 வீதி திருத்தப்பணிகள் இடம்பெற்று வருவதானால், ஒரு வழிப்பாதையே பயணத்திற்காக அனுமதிக்கப்படுகின்றது. (கே)

## டெசோவிற்கு...

இப்படியான மாநாட்டை நடத்த இந்திய அனுமதிக்கக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த மாநாட்டை தடை செய்யத் தவறியதன் மூலம் இந்திய அரசாங்கம் பாரிய சதி ஒன்றைச் செய்வதாக தேசிய பிக்கு முன்னணியின் பெங்கம் முவே நாலக்க தேரர் அங்கு குற்றஞ்சாட்டினார்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தமிழக முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி மற்றும் தமிழ் தேசியக் கூடமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோரின் கொடும்பாவிகளும் அங்கு எரிக்கப்பட்டன.

## டெசோ...

முடியாதவை அங்கு திட்டமிட்ட சிங்களமயமாக்கலும் அரங்கேறுகிறது.

இந்நிலையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்க ளுக்கு மீள் குடியமர்வு, நிவாரணம், புனர்வாழ்வு போன்ற விடயங்களில் அவசரத் தீர்வு காணப்பட வேண்டும். இடைக் காலத் தீர்வாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி தமிழர்கள் நிம்மதியாக வாழ வகை செய்ய வேண்டியுள்ளது.

சொத்துரிமை, கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் இதர ஜனநாயக உரிமைகள் நிலை நாட்டப்பட் வேண்டும். அகதிகள் எதிர்கொள்ளும் பிரச் சினைகளும் இதில் அடங்கும் நிரந்தரத் தீர்வாக நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வரும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்

ஈழ்த்தமிழர்களுக்காக இரண்டு முறை ஆட்சியை இழந்த தி.மு.க. எப்போதுமே அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் என்றும் அவர் அப்போது கூறினார்.

ஆய்வாளர் அரங்கிற்குள் சென்று செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப் படவில்லை. கருணாநிதியின் உரை விபரங்களை டெசோ அமைப்பு வெளியிட்டுள்ளது.

## சீனாவுக்கு...

வழங்கப்பட்டுள்ளது. இதற்காக மேற்படி சீன நிறுவ னம் எவ்வளவு பணத்தை வழங்கியது என்பது உடனடியாகத் தெரியவில்லை.

இக்காணி இந்தியாவுக்கு வழங்கப்படவிருந்தது. இதற்கான சம்பிரதாயபூர்வ நடவடிக்கைகள் பூர்த்தியாகியிருந்தன. இந்திய உயர் ஸ்தானிகராலயம் இக்காணியை வழங்குவதற்காக, கொழும்பிலுள்ள தூதரகங் களுக்கான நடைமுறைகளின்படி வெளிவிவகார அமைச் சுக்கு கடிதம் எழுதியிருந்தது.

மேற்படி காணி சீன நிறுவனத்திற்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டு விட்டதாக தான் அறிந்தபோது, வெளிவிவகார அமைச்சிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை ஒன்றரை மாதங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்தது என்ற அடிப்படையில் இந்தியா தனது ஆட்சேபத்தை தெரிவித்துள்ளது.

இக்காணிக்காக ஒரு பேர்ச்சுக்கு 7 மில்லியன் ரூபா வீதம் மொத்தமாக 2009 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு இந்தியா இணங்கியிருந்ததாக மேற்படி வட்டாரம் தெரிவித்தது.

இதேவேளை, இந்த சொத்தை ஏற்கனவே இலங்கை யில் உள்ள அமெரிக்கத் தூதர கமும் கொள்வனவு செய்ய முயற்சித்துப் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்த முடிவை மாற்றிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு...

குடியேற்றக் கிராமத்திலுள்ள நான்கு தற்காலிக குடிசைகள் மற்றும் ஒரு கடை ஆகியனவும் இதன்போது குறித்த இனந்தெரியாத குழுவினரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் வவுணதீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த கிராமத்தில் வசித்து வந்த சபினோன (வயது-52) என்ற பெண்மணி நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கோடரியினால் வெட்டப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

தற்போது குறித்த பெண்மணி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் விசாரணைகளுக்காக குறித்த பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவரெனச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், அமைச்சர் ஹக்கீம், பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோர் தீக்கிரையாக்கப்பட்ட பள்ளிவாசலை நேரில் சென்று பார்வையிட்டனர்.

# பொதுநலவாதிக்கு முல்லையில் தர்ம அடி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - பரந்தன் குமாரசாமி கிராமத்திலுள்ள உணவகம் ஒன்றில் சுகாதாரப் பகுதியினரின் விதிகளுக்கு மாறாக சிகரெட்டைப் பிடித்துக்கொண்டிருந்த நபர்களை வெளியே சென்று பிடிக்குமாறு கூறிய ஒரு நபரை உணவகப் பணியாளர் ஒருவர் முகத்தில் அடித்துள்ள சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவுக்கான பயணத்தை மேற்கொண்டு குறித்த உணவகம் முன்பாக தனியார் பேருந்து சிறிது நேரம் நின்ற சமயம் அதில் பயணம் செய்த குறித்த நபர் உணவகத்திற்குச் சென்ற சமயம் சிகரெட் பிடிக்கும் நடவடிக்கையைப் பார்த்துவிட்டு தன்மையான முறையில் கூறியுள்ளார்.

எனினும் உணவகப் பணியாளர் அவரைத் தகாத வார்த்தைகளால் பேசியதுடன், முகத்தில் அடித்துள்ளார். இதனையடுத்து அந்நபர் அங்கிருந்து சென்று விட்டார்.

பின்னர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பாக செய்த முறைப்பாட்டை அடுத்துக் குறித்த நபரை கிளிநொச்சிப் பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அறிவித்தனர்.

குறித்த நபர் பொலிஸ் நிலையம் சென்றதையடுத்துப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொள்ள மறுத்தார். எனினும் சாட்சியாக நின்ற அரச ஊழியர் ஒருவர் நடந்த உண்மையை எடுத்துக் கூறினார்.

எனினும், முறைப்பாடு செய்த நபர் அந்நபரின் குடும்ப நிலையைக் கருதி தனது முறைப்பாட்டை வாபஸ் பெற்றதையடுத்துப் பொலிஸார் அவரை விடுதலை செய்தனர்.

குறித்த உணவகம் முன்னர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவால் சுகாதாரமற்ற முறையில் இயங்கியமையையடுத்து மூடப்பட்டுப் பின்னர் திறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

# பெற்றோல் நிலையத்தில் கொள்ளை சந்தேக நபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றில் கொள்ளையில் ஈடுபட்ட ஒருவர் யாழ். நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

வேலணை, 4ஆம் வட்டாரம், வங்காளவடியைச் சேர்ந்த இவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11.00 மணியளவில் அங்கு கடமையிலிருந்த முகாமையாளரைத் தாக்கிக் காயப்படுத்தி விட்டு அவரிடமிருந்த 15 ஆயிரத்து 500 ரூபா பணத்தினைக் கொள்ளையடித்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு இது பற்றி முறையிடப்பட்டதையடுத்து இந்நபரைக் கைது செய்த பொலிஸார் இவரை யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார். (137)

## விரிவுரையாளரின்..

வைத்து அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனங்களின் ஒன்றியம் பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

விரிவுரையாளர்களின் போராட்டம் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான குழுவி னருக்கும், ஆசிரியர் சம்மேளனங்களின் ஒன்றியத்தின் பிரதி நிதிகளுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் திருப்தி தருவதாக விரிவுரையாளர்கள் தரப்பில் கூறப்பட்ட போதும், இறுதி முடிவு எட்டப்படும் வரையில் போராட்டத்தைக் கைவிடுவதில்லை என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர்.

விரிவுரையாளர்களின் இந்தப் போராட்டம் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து, விரிவுரையாளர்களை ஜூலை 30 ஆம் திகதி மீண்டும் பணிக்குத் திரும்புமாறு உயர் கல்வி அமைச்சர் விடுத்த கோரிக்கையையும் பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனங்களின் ஒன்றியம் நிராகரித்துவிட்டது.

45 நாட்களைக் கடந்து தொடரும் விரிவுரையாளர்களின் இந்தப் போராட்டம் காரணமாக, நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடரும் 80 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக தற்போது மாணவர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், தமது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனங்களின் ஒன்றியத்தின் தரப்பில் இது வரையில் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

# அமைச்சர் றிசாட்டின் ஏற்பாட்டில் நீதிமன்றின் முன் ஆர்ப்பாட்டம்

## மன்னார் ஆயர் தெரிவிப்பு



மன்னார் நீதவானுக்கு எதிராக நீதிமன்றத்திற்கு முன்னால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை அமைச்சர் றிசாட் பதியுதீனே ஏற்பாடு செய்து நடத்தியதாகவும் அமைச்சரின் அனுசரணையின்றி அந்தளவு பாரிய ஆர்ப்பாட்டத்தையோ போராட்டத்தையோ நடத்தியிருக்க முடியாது எனவும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை கொழும்பிலிருந்து வெளியாகும் லக்பிம சிங்கள வாரப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய விடயங்கள் பற்றி பேசுவதன் காரணமாக தமக்கு எதிராக விமர்சனங்கள் செய்யப்படுவதாக மன்னார் மறைமாவட்ட பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இதன்போது தெரிவித்துள்ளார்.

வறுமையில் வாடுவோருக்காகவும், நீதிக்காகவும் குரல் கொடுத்தல் தம்மை பிரிவினைவாதி, விடுதலைப் புலி ஆதரவாளர், சர்ச்சைக்குரிய பேராயர் என்றெல்லாம் குற்றம் சுமத்தப்படுவதாக தெரிவித்த அவர் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தாம் கவலையடையப் போவதில்லை எனவும் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும், அநீதிக்கு எதிராகவும் குரல் கொடுக்கப் போவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மன்னார் உப்புக்குளம் பகுதியில் முஸ்லிம்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை. ஆறு படகுகளே முஸ்லிம்களிடம் காணப்படுகின்றன. இந்தப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களில் அதிகமானவர்கள் வர்த்தகர்கள் ஓர் பருவ காலத்தில் மட்டும் கடல் அட்டைகளை பிடிப்பதற்காக முஸ்லிம்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

கடற்கரையிலிருந்து 200 மீற்றர் அளவிலான பரப்பிலேயே தமிழ் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். தேவையென்றால் 200 மீற்றருக்கு அப்பால் முஸ்லிம்கள் மீன்பிடியில் ஈடுபட முடியும்.

உப்புக்குளம் பகுதியில் 300 தமிழ்க் குடும்பங்கள் கடந்த பதினொரு ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். அரசாங்க அதிபர் மற்றும் கிராம சேவகர் ஆகியோரின் கருத்துக்களின் அடிப்படையிலேயே மீனவர் பிரச்சினை தொடர்பில் மன்னார் நீதவான் தீர்ப்பளித்தார் என ஆயர் மேலும் தெரிவித்துள்ளார்.



| Rank by Gold | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 46 | 29 | 29 | 104 |
| 2 | சீனா | 38 | 27 | 22 | 87 |
| 3 | பிரித்தானியா | 29 | 16 | 19 | 64 |
| 4 | ரஷ்யா | 24 | 25 | 33 | 82 |
| 5 | தென்கொரியா | 13 | 8 | 7 | 28 |
| 6 | ஜேர்மனி | 11 | 19 | 14 | 44 |
| 7 | பிரான்ஸ் | 11 | 11 | 12 | 34 |
| 8 | இத்தாலி | 8 | 9 | 11 | 28 |
| 9 | ஹங்கேரி | 8 | 4 | 5 | 17 |
| 10 | அவுஸ்ரேலியா | 7 | 16 | 12 | 35 |
| 11 | ஜப்பான் | 7 | 14 | 17 | 38 |
| 12 | கசகஸ்தான் | 7 | 1 | 5 | 13 |
| 13 | நெதர்லாந்து | 6 | 6 | 8 | 20 |

# 2014 ஆம் ஆண்டு தொடக்கம் மாணவர்களுக்கு மடிக்கணினி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் மடிக்கணினிகளை வழங்குவதற்கான திட்டம் ஒன்றை செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பாடசாலையிகளிலும் கல்வி பயிலும் தரம் 6 மாணவர்களில் இருந்து உயர்தரம் வரையான மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் யோசனைக்கு அமையவே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் ஆறு முதல் உயர்தரம் வரையிலான மாணவர்களுக்கு மடிக் கணினிகளைப் பயன்படுத்தி கல்வி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

இது தொடர்பான முதற்கட்டப் பேச்சுவார்த்தை ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

குறித்த இத் திட்டத்திற்காக அம்பாந்தோட்டை பிரதேசத்தில் கணினி உற்பத்தி நிலையம் ஒன்றையும் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, இத்தகையதொரு திட்டத்தை நாட்டில் அமுல்படுத்துவதன் மூலம் ஆசிய நாடு என்ற வகையில் எமது நாடு கல்வித்துறையில் அடையும் மிகப்பெரிய வெற்றி எனத் தெரிவித்துள்ளார்.

# 30 பேரை கடித்த நாய்க்கு நீர் வெறுப்பு நோய்

(கொழும்பு)

வவுனியா நகரப் பகுதியில் கடந்த மாதம் 18ஆம் திகதி 30 பேரைக் கடித்த தெருநாய் ஒன்றின் உடற்பாகங்கள் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பப்பட்டு பெறப்பட்ட தகவலின் படி அந்த நாய் நீர்வெறுப்பு நோய்க்கு ஆளானமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியா நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் தியாகலிங்கம் தெரிவித்தார்.

பலரினை கடித்த நாயினுடைய தலைப்பகுதியினை மருத்துவ ஆராய்ச்சிக்கு அனுப்பிய நிலையில் அதன் அறிக்கை கிடைத்துள்ளது. அந்த நாய் கடித்தவர்கள், இதுவரை நீர்வெறுப்பு நோய் தடுப்பூசியினை போடாதிருந்தால் உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியரின் ஆலோசனையினைப் பெற்றுத் தடுப்பூசிகளை போடவேண்டும்.

அந்தப் பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களையும் இந்த நாய் கடித்திருப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளமையினால் நாய் வளர்ப்பாளர்கள் தமது நாய்களுக்கு நீர்வெறுப்பு நோய் தடுப்பூசிகளை போட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

தடுப்பூசியினை மிருக வைத்தியரிடமோ அல்லது பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உள்ள நீர்வெறுப்பு நோய்த் தடுப்பு பிரிவிலோ பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

### நீதவான் மீதான அச்சுறுத்தல்

# சந்தேக நபர்கள் குறித்து தீர்மானம் எதுவும் இல்லை

மன்னார் நீதவானுக்கு விடுக்கப்பட்ட தொலைபேசி மூலமான அச்சுறுத்தல்கள் தொடர்பான சந்தேக நபர்களுக்கு எதிரான நடவடிக்கை குறித்து தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனச் சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்களைக் கோரும் அறிக்கையொன்றை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கையளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நீதிமன்றத்தைத் தாக்கிய சந்தேக நபர்களை கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளதாக சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் கைதுகள் எதுவும் இடம்பெறவில்லை. நீதவானுக்கு எதிரான அச்சுறுத்தல் மற்றும் நீதிமன்ற கட்டடத் தொகுதி மீதான தாக்குதல் தொடர்பாக இருமுனை விசாரணைகள் நடைபெறுவதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன கூறினார்.

மன்னார் நீதவான் ஏ.ஜூட்ஸனுக்கு கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்த விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பூர்த்தி செய்துள்ளனர். எனினும் நீதிமன்றகட்டடம் மீதான தாக்குதல் தொடர்பாக விசாரணைகள் தொடர்கின்றன.

தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் 26 சந்தேக நபர்களை நாளை நீதிமன்றில் ஆஜராகுமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

நீதவானுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர் மற்றும் நீதிமன்றத்தை தாக்கியவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி ஜூலை 18 ஆம் திகதியிலிருந்து மன்னார் சட்டத்தரணிகள் தொடர்ந்தும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# பதாகைகளை அகற்ற 7.3 மில்லியன் ஒதுக்கீடு



(கொழும்பு)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் போஸ்டர் உள்ளிட்ட தேர்தல் பதாகைகளை அகற்றவென 7.3 மில்லியன் ரூபா பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதென தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென பொலிஸ் திணைக்களத்திற்கு 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு இடையில் சமீபத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து குறித்த நிதியை வழங்க நடவடிக்கை எடுத்ததாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை இடம்பெறும் எனவும் விடுமுறை தினமான 26 ஆம் திகதியும் வாக்காளர் அட்டை விநியோகிக்கப்படும் எனவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

# கழிவுப் பொருள் கடலில் கண்டறிய செயற்திட்டம்

(கொழும்பு)

கடற்கரைகளிலும் கடலிலும் கழிவுப் பொருட்கள் சேர்கின்ற விதத்தை கண்டறிவதற்கான புதிய செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் நாட்டை சூழவுள்ள கடற்பரப்பில் காணப்படுகின்ற கழிவுப் பொருட்களை வகைப்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கண்ணாடி, பிளாஸ்டிக், கடதாசி, இரும்பு ஆகிய பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்படும் கழிவுப் பொருட்களின் எடையும் கணிப்பிடப்படவுள்ளதாக சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் ரியர் அட்மிரல் எஸ்.ஆர். சமரதுங்க தெரிவித்துள்ளார்.

# சம்பள முரண்பாட்டிற்குத் தீர்வு பகிஷ்கரிப்பை ஏற்கமுடியாது

### மின்சார சபை அறிவிப்பு

(கொழும்பு)

சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ள நிலையில் அநீதியான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மின்சாரசபை ஊழியர்கள் தொடர்ந்தும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது என இலங்கை மின்சார சபை வலியுறுத்தியுள்ளது.

சபையின் நிர்வாக நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பம் தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட மாட்டாது என இலங்கை மின்சார சபையின் உப தலைவர் அனுர விஜேபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வினை வழங்குவதாகத் தெரிவிக்கும் இலங்கை மின்சார சபை, மறுபுறம் தொழிலாளர் உரிமைகளை மீறுவதாக மின்சாரசபை தொழிற்சங்க ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஒருசில ஊழியர்கள் நாசகார செயலில் ஈடுபடுவதாக சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை முறறாக நிராகரிப்பதாகவும் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.